கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின்



பாடுபொருளும் பாசப்பொருளும்

(திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்)

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம், மதுரை.

கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின்

பாடுபொருளும் பாசப்பொருளும்

(திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்)

முனைவர் செ. இராஜேஸ்வரி M. A., M. Phil., Ph. D.,

சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.

நூல் விவரம்

நூலின் பெயர்	:	பாடுபொருளும் பாசப்பொருளும் (திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்)
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
அட்டை வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/422 தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	இரண்டாம் (டிசம்பர், 2020)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	200
விலை	:	Rs.250/-

- - - - -

Title	:	*Paaduporulum Paasapporulum (Thittivasal Pennoruththi Mattum)*
Subject	:	*Poetry Criticism*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/422 Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publishing	:	*December, 2020*
Pages	:	*200*
Price	:	*Rs.250/-*

நூலாசிரியரின் முன்னுரை

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பூ மரநிழல் கவிதைத் தொகுப்பை மொழிபெயர்த்த பின்பு கவிஞரது வறட்சியின் பாடல்கள் என்ற நூலை வாசிக்கத் தொடங்கினேன். Songs of Dryness என்று இதன் ஆங்கில மொழிபெயர்ப்புக்குப் பெயர் சூட்டிய போது 'கவித்துவமான தலைப்பு' என்று எமரால்டு அச்சகத்தின் உரிமையாளர் ஒளிவண்ணன் அவர்கள் பாராட்டினார். 2005 இல் கடற்குதிரை பதிப்பகத்தால் வறட்சியின் பாடல்கள் வெளியிடப்பட்டது. பல ஆண்டுகள் கழித்து இந்நூல் மறு பதிப்பாக வந்த போது இதன் பெயர் 'திட்டிவாசல் பெண்ணொருத்தி' என்று மாற்றப்பட்டது. இப்போது கடைகளில் இப்புத்தகம் இப்பெயரில் தான் கிடைக்கிறது எனவே திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற பெயரே இந்நூலிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் காவிரி ஆற்றுப்படுகை பகுதிகளில் கூட கடும் வறட்சி காணப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளைத் தொகுத்து வெளியிட்ட காரணத்தால் 2005இல் இந் நூலுக்கு வறட்சியின் பாடல்கள் என்று பெயர் சூட்டப்பட்டது. எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட நூலை முதன் முறை வாசிக்கும்போதே இந்நூல் வெறும் கவிதைகள் அடங்கிய நூலாகத் தோன்றாமல் ஆவணங்களின் காப்பகமாக எனக்குத் தோன்றியது இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வைப்பதால் தமிழகத்திலுள்ள பல தகவல்கள் ஆங்கில வாசகருக்கு ஆவணமாகப் பதிவாகும் என்ற உண்மை எனக்குப் புலப்பட்டது. ஆங்கில மொழிபெயர்ப்பின் முன்னுரையிலும் நான் இதன் ஆவணத் தன்மையை விளக்கி எழுதினேன்.

கவிதைத் தொகுப்பில் வரலாற்றுத் தகவல்கள், நிலவியல் தகவல்கள், பண்பாட்டுத் தகவல்கள்,

சூழலியல் தகவல்கள் எனப் பல துறை சார்ந்த தகவல்கள் கவிதைகளின் பாடுபொருளாகி உள்ளன. இக்கவிதைகள் உணர்ச்சிப் பிரதிபலிப்புகள் அல்ல; உண்மை நிகழ்வுகளின் கவித்துவப் பதிவுகள். இவற்றின் கவிச்சுவைக்கு உரமேற்றுவன கவிஞரின் கிளை, செடி, பறவை, ஏரி, சிற்பம், விரல் போன்றவற்றால் உருவான உருவகங்களும் படிமங்களும் ஆகும்.

'தஞ்சை மருதத்திடையே எனது தாய்வீடு, சற்றுத் தொலைவில் காவிரியின் நீர் கோலங்களாய் வெண்ணாறு, ஆனந்தக் காவிரி என்னும் சிற்றாறு மற்றும் புதாறு.' என்று தன பிரப்பிடத்தைக் குறிப்பிடும் கவிஞர் தான் பிறந்து வளர்ந்த வளமான மண்ணில் வறட்சி என்றதும் அவர் மனம் வெதும்பி அவற்றைக் கவிதைகளாகப் படைத்து வைக்கிறார். அந் நூல் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படுகிறது. புதிய பெயரில் மறு பதிப்பாக வெளிவந்து இளைய தலைமுறையினரைச் சென்றடைகிறது. இது தான் கவிதை என்னும் ஆவணப் பதிவின் மேன்மை ஆகும்.

தஞ்சை என்று தன்னுடைய பிறப்பிடத்தைப் பற்றிக் கூறும் கவிஞர் தஞ்சை மண் வளத்தையும் மக்களின் மன வளத்தையும் பாசப் பொருளாக்கிக் கவிதை படைக்கிறார். இன்னும் தன் மனதில் சட்டென்று தைத்த வேறு பல அன்றாட நிகழ்வுகளையும் கவிதைகளின் பாடுபொருள் ஆக்கியுள்ளார். தஞ்சை மண்ணின் வறட்சியையும் அங்கு வந்த வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தையும் சமூகப் பொறுப்போடு பதிவு செய்துள்ளார். இத்தொகுப்பில் தட்பவெட்பம் சார்ந்த மற்றும் நகரியம் சார்ந்த கருப் பொருளைக் கொண்டு புனையப்பட்ட கவிதைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

வறட்சியின் பாடல்கள் அல்லது திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற பெயர் கொண்ட கவிதை நூலில் குமரிக்கண்டம் மற்றும் நாஞ்சில் நாடு பற்றிய வரலாற்றுத் தகவல்கள் உண்டு. பயணம் பற்றிய கவிதையின் ஒரு பகுதியாக இடம் பெற்றாலும் தமிழர் இனம் பயணப்பட்டு வந்த தகவலைப் பதிவு செய்வதாகவும் இக்கவிதை அமைந்துள்ளது.

தஞ்சை மண் சார்ந்த ஏரிகள், ஆறுகள், கிராமத் திருவிழாக்கள், காகம், மயில், குயில், மாடு, நாய் போன்றவை வாகை மரம், தென்னை மரம், வேப்ப மரம் போன்ற மரங்கள் ஆகியன் பல கவிதைகளில் இடம் பெற்றுள்ளன. இவை நிலவியல் சார்ந்த ஆவணப் பதிவுகள் ஆகும். இவை வெறும் கற்பனை படைப்புகள் அல்ல. இன்னும் ஒரு நூறு ஆண்டுகள் கழித்து காவிரி ஆற்றைப்பற்றியும் தஞ்சை மண்ணைப் பற்றியும் ஆராய்ச்சி செய்வோருக்கு அப்போது இந்த ஏரிகளும் குளங்களும் ஆறுகளும் குறுகிப் போயிருக்கலாம் அல்லது காணாமல் கூட போயிருக்கலாம். ஆனால் இந்த கவிதைகள் ஆவணப் பதிவுகளாக இருந்து அவர்களின் மானுடவியல், சமூகவியல் மற்றும் அறிவியல் ஆய்வுகளுக்குப் பேருதவி புரியும் .

இனவரைவியல் துறையினரின் ஆராய்ச்சியில் இலக்கியத் தரவுகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உடன்கட்டை ஏறுதல் அல்லது சதி எனப்படும் கொடுஞ்செயல் குறித்து ஆராய்ச்சி செய்தவர் தான் நேரில் கண்டவற்றை ஆவணங்களாகப் பதிவு செய்த போது அதற்கு அரண் சேர்க்கும் வகையில் வேறொரு பதிவு வேண்டும் எனத் தேடினார். அப்போது பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஒரு கவிதை அவருக்குக் கிடைத்தது. அக்கவிதையில் ‘சதி’க்காக ஒரு பெண்ணை அழைத்துச் செல்லும்போது அவ்வூர் மக்கள் அந்தப் பெண்ணின் மரணம் குறித்து கவலைப்படாமல்

அவர்கள் தங்கள் வீட்டு கதைகளைப் பேசிக் கொண்டு ஊர்வலமாக வந்தனர் என்ற தகவல் கவிதை வரிகளில் கிடைத்தது. இவ்வரிகள் ஆராய்ச்சியாளரின் இனவரைவியல் ஆய்வுக்குப் பெருந்துணை புரிந்ததாக விக்கிப்பீடியா நமக்குத் தெரிவிக்கின்றது. அவ்வாறு கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைத் தொகுதியும் பின்வரும் தலைமுறையினருக்கு ஒரு நிலவியல் ஆவணமாகத் திகழ்வது உறுதி.

கிராமங்கள் சிதைந்து நகரங்கள் உருவானதும் காடுகள் அழிக்கப்பட்டு பணப்பயிர்கள் வளர்க்கப்படுவதும் நதிக்கரை நாகரிகத்தைச் சேர்ந்த மனிதர்கள் மழைக்காடுகளை அழித்து விட்டு அங்கு சுற்றுலாத் தலங்களை உருவாக்குவதும் முக்கியப் பாடுபொருளாகி உள்ளது. சூழலியல் குறித்த தகவல்களை இயற்கை நேசரான கவிஞர் கடுமையான சொற்களால், வசைச் சொற்களால் சுட்டாவிட்டாலும் நடந்த உண்மைகளை தெளிவாகவும் அழுத்தமாகவும் எடுத்துக் கூறத் தயங்கவில்லை ஒரு தகவலைப் பணிவோடும் துணிவோடும் ஆவணப்படுத்தும் போது தகவலின் உண்மைத் தன்மையில் ஐயம் ஏற்படுவதில்லை. எந்த ஒரு தகவலையும் இக்கவிஞர் விரித்தும் சுருக்கியும் கவிதையாக்குவது கிடையாது.

உள்ளத்தில் உள்ளது கவிதை - இன்பம்

உணர்ந்துரைப்பது கவிதை

தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை

தெரிந்துரைப்பது கவிதை

என்று கவிமணி அவர்கள் மலரும் மாலையும் நூலில் கவிதைக்கு இலக்கணம் வகுத்ததற்கு ஏற்ப கவிஞர் முத்தமிழ் விரும்பியும் உண்மைகளைத் தெரிந்து தமது

கவிதைகளில் அவற்றைத் தெளிவாக உணர்த்தியிருக்கிருக்கிறார்.

ஒடுக்கப்பட்டோரின் விடுதலையும் அதற்கான முயற்சியும் முனைப்பும் தேவை என்பதை திமிறல் என்ற கவிதையில் அழுத்தமாகத் தெரிவிக்கிறார். காட்டாளன் கவிதையில் மண்ணின் மைந்தர்களைக் கொடுமைப்படுத்தி விரட்டும் படித்த நாகரீக மனிதர்களில் குரூர பேராசை விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. இந்திர விழா, காவேரியின் ஆடிப்பெருக்கு போன்ற பண்பாட்டு நிகழ்வுகள் இன்றைய வறண்ட காவிரியின் செல்வாக்கற்ற நிலையோடு ஒப்பிடப்பட்டு பழந்தமிழரின் பண்பாட்டுப் பெருமை குறித்த தகவல்கள் இக் கவிதைகளின் மூலம் ஆவணப்படுத்தப்படுகிறது

மனித வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து இயற்கை சார்ந்ததாக மனிதன் வாழ்ந்த போது அவன் மனம் விசாலமானதாக விளங்கியது. அவன் நகரத்திற்கு வந்து தொழிற்சாலையில் கூலிகளாக மாறி தீப்பெட்டி போன்ற வீடுகளில் குடியிருந்து மூச்சுத் திணறி வாழ்கின்ற இக்காலத்தில் அவன் மனமும் குறுகிவிட்டது. அன்பும் தயையும் கருணையும் அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டது என்ற கருத்தைத் கிராமியத்தைத் தனது பாசப் பொருளாகக் கொண்டு எழுதிய பல கவிதைகளில் முரண் சுவையுடன் கவிஞர் முத்தமிழ் விரும்பி சுட்டிக்காட்டுகிறார்

இக்கவிதைத் தொகுப்பில் திட்டிவாசல் பெண்ணொருத்தி மற்றும் ஒரு பறவையின் இருத்தலியம் என்ற இரண்டு கவிதைகள் குறித்து சிறப்பாகக் குறிப்பிட்டாக வேண்டியது ஒரு வாசகர், ஆய்வாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் என்ற முறையில் எனது முக்கியக் கடமை ஆகும். கவிதைகளை படைத்தளித்த கவிஞருக்கு இருக்கும் கடமை உணர்ச்சியைப் போன்று

இந்நூலை வாசிக்கும் வாசகருக்கும் இக்கவிதைகளைப் புரிந்து கொள்வதிலும் பிறருக்கு அதனை எடுத்துச் சொல்வதிலும் அதே கடமையும் பொறுப்பும் இருக்கின்றது. ‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற வாக்கிற்கிணங்க கருத்துக்களைப் பகிர்வதும் கவியின்பத்தைப் பகிர்வதும் சமூகப் பொறுப்புணர்ச்சியின் பால் சார்ந்ததே ஆகும்.

திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதையில் கவிஞர் ஒரு பெண்ணின் அவல நிலையை அவள் வாழ்ந்த வீட்டைக் காட்டி அதனைக் கருப் பொருளாக்கி கவிதை படைத்துள்ளார். அவளது துன்பத்தைப் பற்றி எவரும் அக்கறை கொள்ளாமல் அவள் வாழ்ந்த வீட்டைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றனர் என்று கவிதை நிறைவு பெறுகிறது. தனித்து வாழும் பெண்ணும் அவளது தனியான வீடும் உலக இலக்கியங்களில் பாடு பொருள் தகுதி பெற்றுள்ளன. உலகப் போர்கள் நடைபெற்ற போது அதில் போரிடச் சென்றவர்கள் வீடு திரும்பும் வரை அவர்களின் காதலிகளும் மனைவிமாரும் தனியாக ஒரு வீட்டில் வசிப்பதாக எழுதப்பட்ட பல கவிதைகள் உண்டு.

In a room which has been

Dead for twenty years;

An old woman’s shadow

Is gnawing,

Turning an empty coffee mill,

The clock shows Sunday;

The cuckoo fell silent

என்ற கவிதை பால்டியப் பகுதியின் கவிதை ஆகும். இருபதாண்டுகளாகத் தனிமையில் வாழ்ந்து முதுமை

அடைந்து யாருமற்ற அனாதையாகவே ஒரு பெண் வாழ்ந்து முடித்து விட்டாள். திட்டிவாசல் கதவு திறக்கப்படாததால் இந்தப் பெண்ணும் வீட்டை விட்டு வெளியே வராமல் உள்ளேயே தனியாக இருந்திருக்கக் கூடும். பல ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் போது அவ்வீடு சிதிலமடைந்து

Of these houses

Nothing left

But certain

Stands of wall

Of so many

Whom I loved

Nothing is left

Not even those

என்ற இத்தாலியக் கவிதையைப் போல அவளுக்கு எதுவுமே இல்லாமல் போயிருக்கும். தனித்து வாழும் பெண்ணின் மன அவலம் பித்துப் பிடித்த நிலை ஆகியன உலக இலக்கியப் பாடு பொருளாகும். இதனைக் கவிஞர் முத்தமிழ் விரும்பி கையாண்டிருக்கும் திறம் பாராட்டத் தக்கதாகும். அவள் நிலவை பார்த்துப் பேசிக்கொண்டிருந்தாள் என்ற அவதானிப்பு அவளது மனச்சிதைவைக் காட்டுகிறது. இங்கு அவளுடைய மனநிலையை சுட்டிக்காட்டுவதில் வீடும் முக்கியத்துவம் பெறுகிறது. வீடு ஓர் அடையாளம்; குறியீடு, அவளது தனிமையும் நோயும் பாடு பொருள் ஆகின்றன.

சங்க இலக்கியத்தில் மூன்று திணைகளின் முக்கியப் பாடுபொருள் பெண்ணின் தனிமையும்

ஏக்கமும் ஆகும். போர்க்காலச் சூழலில் உலக இலக்கியத்தில் ஆண் துணையற்று தனித்து வாழும் மகளிர் பாடுபொருளாவது பொது இயல்பு. திட்டிவாசல் பெண்ணொருத்தியின் அவல நிலை அவளது குடிகாரக் கணவனால் ஏற்பட்டது என்பது இத்தமிழ்க் கவிதையின் தனித்த இயல்பாகும். கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் உலகளவில் பொது இயல்பு சார்ந்தும் தமிழ் நாடு என்றளவில் தனித்த சிறப்பியல்பும் கொண்டு விளங்குகின்றன. இதுவே இவரது கவிதைகள் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டுப் பாராட்டப் படுவதற்கு முக்கியக் காரணம் ஆகும்.

இக் கவிதை நூலில் படிம உத்தி பல கவிதைகளில் மிகச்சிறப்பாக கையாளப்பட்டு இருப்பதைக் காணலாம் அவற்றை விளக்குவது முன்னுரையின் தேவை இல்லை என்றாலும் கூட முதற் கவிதையான ஒரு பறவையின் இருத்தலியல் என்பது மிகுந்த முக்கியத்துவத்தை பெறுகின்றது. இருத்தலியம் என்பது எந்த ஒரு மனிதனுக்கும் உயிருக்கும் அதது வாழவேண்டியதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளும் விடுதலை உணர்வும் வாழிடத்தில் இருக்கவேண்டும் அல்லது கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

பறவைக்குரிய இருத்தல் என்பது சுதந்திரமாகப் பறந்து திரிந்து அதற்கு வேண்டிய உணவைத் தேடி உண்டு மரத்தில் இளைப்பாறி களைப்பாறி இருப்பதாகும். இவ்வாறு ஒரு பறவை ஒரு மரத்தின் உச்சியில் அமர்ந்து கூவிக் கொண்டு இருக்கிறது அதனுடைய உருவம் எவருக்கும் தெரியவில்லை ஆனால் அதனுடைய குரல் கேட்பதால் அதனுடைய இருத்தல் உணர்த்தப்படுகிறது ஒருவர் தன் இருப்பை உருவத்தால் உணர்த்த முடியாவிட்டாலும் குரலால் கூட உணர்த்த முடியும் ஒரு ஒப்பற்ற கருத்தை இந்தப் பறவை நமக்கு எடுத்துக் கூறுகிறது.

பறவையின் குரல் மட்டும் கேட்கிறது உருவம் தெரியவில்லை என்றொரு கவிதையை ஆங்கிலத்தில் ஸ்கைலார்க் என்ற பெயரில் கவிஞர் ஷெல்லி எழுதினார். இதனை நான் தமிழில் மொழிபெயர்த்து tamilauthors.com மின்னிதழில் வெளியிட்டேன். இது ஓர் புனைவியல் கவிதையாகும். அதன்பிறகு ஒரு பறவையில் இருத்தலியல் கவிதையை நான் வாசித்த போது ஷெல்லியின் கவிதையை விட சிறப்பாக இக்கவிதை அமைந்திருப்பதைக் கண்டு கவிஞரிடம் இது குறித்துக் கேட்டேன். அவர் ஆங்கில இலக்கியத்தில் தனக்கு பயிற்சி இல்லை என்றார். ஆக தற்செயலாக அமைந்த ஒற்றுமை எனினும் முந்தையதை விட பிந்தியது அதனினும் சிறப்பாக அமைந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஷெல்லியின் கவிதை பற்றி எதுவும் தெரியாமலேயே கவிஞர் முத்தமிழ் விரும்பி பறவை பற்றிய ஒரு அருமையான கவிதையை அதன் இருத்தல் பண்புடன் இணைத்து எழுதி இருப்பது மிகவும் சிறப்பானது. ஒரு பறவையின் இருத்தலியம் என்ற கவிதை வெறும் புனைவுக் கவிதை அல்ல; அது ஒரு தத்துவார்த்தமான சித்தாந்தத்தை எடுத்துக்கூறும் தத்துவக் கவிதையாகும். இவ்வாறு கவிதைகளில் தோய்ந்து ஆய்ந்து வாசித்து மொழிபெயர்த்ததால் தமிழிலும் இதன் உள்ளடக்கப் பகுப்பாய்வு குறித்து ஒரு நூல் எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் ஏற்பட்டது.

One may wonder why this collection is relevant to an English reader, but once you begin reading you will not wonder any longer. So many of the themes discussed are universal, so you do not need to have ever experienced the feel of a Tamilnadu to understand the poems in A lady at the little gate.

என்று திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதை இடம் பெற்ற எனது ஆங்கில மொழிபெயர்ப்பு நூலுக்கு எழுதிய

பாராட்டுரையில் அமெரிக்காவைச் சேர்ந்த மார்சி பவர் என்ற மருத்துவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடுபொருளில் உலகளாவிய கருப்பொருளையும் தமிழகம் அளவில் சிறப்புத் தன்மை கொண்டவற்றையும் தெரிவு செய்து கவிதைப்படுத்திய கவிஞர் முத்தமிழ் விரும்பி கவிதையின் உருவத்திலும் மிகவும் கவனம் செலுத்தியுள்ளார். கவிதையில் ஒரு சொல்லைக் கூட வீணாக்காமல், மிகையாகத் தராமல் 'சரியான சொற்களை சரியான அளவில் சரியான இடத்தில் வைத்து' தனது கவிதைகளைக் கணக்குச் சூத்திரம் போல குறுகத் தரித்த குறளின் வழியில் அளவாகவும் அழகாகவும் படைத்துள்ளார். இதனால் காலப்போக்கில் இக்கவிதை உருவாலும் உள்ளடக்கத்தாலும் நிலைத்து நின்று கவியன்பர்களால் போற்றப்பட்டு செவ்வியல் தகுதி பெறுவது உறுதி.

முனைவர் செ. இராஜேஸ்வரி — *மதுரை*
நூலாசிரியர் — *டிசம்பர் 7, 2018*

2005ல் வறட்சியின் பாடல்கள் என்ற பெயரில் வெளிவந்த இன்றைய திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதைத் தொகுப்புக்கு பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்கள் வழங்கிய கருத்துரை.

எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே!

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடருக்குச் சற்று தொலைவிலேயே கோவையில் எனது குடியிருப்பு.

மாலைகளில் மதுக்கரை மலை, குருடி மலை, ரங்கசாமி மலை எனவும் இரவிலே தெரியும் ஒளிப்புள்ளிகளைக் காட்டி மருதமலையையும் எனதிரு குழந்தைகளுக்கும், தங்கையின் இரு செல்வங்களுக்கும் அடையாளம் காட்டி விளையாடுகிறேன்.

பவானி, நொய்யல், அமராவதி, காவிரி, வெண்ணாறு, புதாறு நதிகளையொட்டியே நீண்டு விடுகின்றன எனது பயணங்கள்.

தஞ்சை மருதத்திடையே எனது தாய் வீடு. சற்றுத் தொலைவில் காவிரியின் நீர்க்கோலங்களாய் வடக்கிலும் தெற்கிலும் வெண்ணாறு, ஆனந்தக் காவிரி எனும் சிற்றாறு மற்றும் புதாறு.

வீட்டின் கீழ்த்திசையில் பத்தாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பெருவேந்தர் காலத்தைக் காட்டும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் பெரிய கலைக்கோபுரம்; மேற்கே கரிகாற் பெருவளத்தான் முதலில் வடிவமைத்த கல்லணை. இப்படியாக நெளிந்து நீள்கிறது எனது சமூக வாழ்வு.

பாராட்டுகளை விடுத்துப் பார்த்தாலும் சில நேரங்களில் வாழ்வில் கூடும் வெறுமையை எல்லோரும் எப்படி எதிர்கொள்கிறார்கள்?

எல்லா வெறுமைகளையும் இருண்மைகளையும் போக்கிவிடக் கூடியதாய் இருக்கிறது இலக்கியச் செயல்பாடுகள். குறிப்பாய் பயணங்களிலும் தனித்த இரவுகளிலும் என் விரல்களில் புரளும் பக்கங்கள்.

எனது கவிதைகளைப் பதிவு செய்வதைவிட நண்பர்களது கவிதைகளை, தொகுப்புகளை அச்சேற்றிக் காண்பது வாழ்வின் மகத்தான உள்ளீட்டைக் கண்டுகொள்ள உதவுகிறது.

கோவை மண்ணில் 19.10.2003 முதல் 25.12.2005 வரை நெருஞ்சி இலக்கிய முற்றம் 28 மாதங்களாக இறுதி ஞாயிறுகளில் சந்திப்புகளை நிகழ்த்தி இருப்பதே, எனது சக படைப்பாளி நண்பர்கள் தென்பாண்டியன், பா.மீனாட்சி சுந்தரம் ஆகியோருக்கும் ஏனைய இளம் கவிஞர்களுக்கும் பெருமிதம் கொள்ளச் செய்திருக்கிறது. குறிப்பாக, பாப்லோ நெருடா நூற்றாண்டு விழா – சிறப்புச் சந்திப்பு 10.08.2004 செவ்வாய் அன்று மாலையில் நடைபெற்ற பொழுது இலக்கிய நண்பர்களுக்கெல்லாம் மிகுந்த உந்துதல் தந்ததைப் பல கடிதங்கள் உறுதி செய்தன.

நெருஞ்சி சிற்றிதழ்கள் வெளியீடு, தமிழ்க் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு, எல்லாவித இலக்கியப் போக்குளின் அணிவகுப்பாய் சிறப்புரைகளின் ஒலிப்பதிவுகள் மற்றும் மூன்று கவிதை நூல்களின் வெளியீட்டு விழாக்கள். இதற்கான நிதியைத் தாமேற்றுக் கொண்ட கடற்குதிரை வெளியீட்டகம், வெளியீட்டாளர் காவேரி கிருஷ்ணா, பொறிஞர் சு.தனபாலன் இவர்களையும் இவ் இலக்கிய இயக்கத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

பணி நிமித்தம் பயணங்கள், முகாம்களை முடித்துத் திரும்பும் முன்னிரவுகள், அழுத்தம் தவிர்த்த விடுதலைப் பொழுதுகளில் கவிஞர் சிற்பி, எழுத்தாளர் நாஞ்சில் நாடன், ரவீந்திரன், விஜயகுமார் குனிசேரி (மாத்ருபூமி), இரணியன், புலவர் செந்தலை நா.கவுதமன் இவர்களோடு சில மாலைகள் பூக்கின்றன.

1990 ஜனவரியில் தொகுக்கப்பட்டு இன்னும் அச்சேறாத முதல் தொகுப்பாய் இருக்கும் 'நேற்றின் பாதங்கள்' இன்னும் கோப்பிலே பத்திரமாய்.

2004 டிசம்பர் வெளியீடான 'பூமர நிழல்' முதல் தொகுப்பு 13.03.2005 அன்று கோவை பி.எஸ்.ஜி. பொறியியற் பல்தொழிற் கல்லூரி அரங்கில் கவிஞர் சிற்பி தலைமையில் வெளியிடப்பட்டது. 'பூமர நிழல்' – கவிதை உறவு 2004 முதற் பரிசினையும், தமிழ்நாடு காலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய 'பாரதி விழா 2004' பரிசுப் போட்டியிலும் வென்று நெருஞ்சி நண்பர்களின் பெருமிதத்தை ஈட்டியது. பாரதியார் பல்கலைக்கழக இளங்கலை – பாடத்திட்டத்திலும் சில தன்னாட்சிக் கல்லூரிகளிலும் 'கடல்கோள் 2004' கவிதை இடம் பெற்றுள்ளது.

"தம்பி, உங்களது அடுத்த தொகுப்பாக நீங்களே விரும்பும் பாலைப் பாடல்களை விரைந்து வெளியிட வேண்டும்" என்று கடந்த ஒன்பது மாதங்களாக என்னைத் தூண்டிக் கொண்டிருந்த அண்ணன் பேராசிரியர் முனைவர் தே.ஞானசேகரன் அவர்களையும்

"சரி, அடுத்தது எப்போ?" என்று என்னை ஊக்கியபடியும், பல புதிய நூல்களை குறிப்பாக நாவல்களைப் படிக்கக் காரணராய் இருந்த திலகா ஆப்செட் உரிமையாளர் கவிஞர் வேனில் கிருட்டிணமூர்த்தி அவர்களையும்

அவ்வப்பொழுது எரியும் திரிகள் கொண்டு மேலும் வெளிச்சமேற்றி வரும் பேராசிரியர்கள் முனைவர் க.பஞ்சாங்கம், முல்லை ஆதவன், சு.வேங்கடராமன், இரா.மோகன், பத்மாவதி விவேகானந்தன் ஆகியோருக்கும்

வறட்சியின் பாடல்களுக்கு அணிந்துரை எழுதியும் பல்வேறு நிலைகளில் தமிழ்க் கவிதையை மெய்யியலோடு வளர்த்தெடுக்கும் ஆய்வறிஞர், மார்க்சியத் திறனாய்வாளர் கோவை ஞானி அவர்களுக்கும்

இளைய தலைமுறைப் படைப்பாளி, திறனாய்வாளர் கவிஞர் இளஞ்சேரல் அவர்களுக்கும், கடற்குதிரை வெளியீட்டகத்திற்கும் நன்றி.

'பூமர நிழல்' – பின்னுரையாக 'தோட்டக் குறிப்புகளும் வழித் துணைகளும்' என்றெழுதியிருந்ததில் சொன்னதைப் போல

''எழுதுவது என்பது முழுநேர வேலை,
அதற்குத் தொழில் நுணுக்கமும்,
ஒன்றிப் போகும் குணமும்,
அளவற்ற பொறுமையும்,
சகிப்புத் தன்மையும் வேண்டும்''

என்ற சாமர்செட்மாம் எழுதிய வரிகளிலேயே இளைப் பாற்றிக் கொள்கிறேன். இனி வெளிவர இருக்கும் மூன்றாவது கவிதைத் தொகுப்புக்கு முன்னுரையாக நல்வாழ்த்துக்களுடன்.

30.12.2005
தஞ்சாவூர்.

திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதை தொகுப்பில் பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் முன்னுரை.

ஒரு மகாமகம் தாண்டியும் திட்டிவாசல் பெண்ணொருத்தி

பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 64 வகை குறிஞ்சி மலர்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் பூத்திருக்கின்றன.

கோயம்புத்தூரில் நண்பர்கள் தென்பாண்டியன், பா.மீனாட்சிசுந்தரம், நித்யன் மணியரசு, தீபக் பாண்டியன், தி.ரா.நமசிவாயம் ஆகியோரது கையெழுத்துப் பிரதிகளை ஒழுங்குபடுத்தித் தொகுத்துக் கடற்குதிரை வெளியீட்டகத்தின் பதிப்பாசிரியராய் இருந்து பிழைத்திருத்தம், தொகுப்பு, பதிப்பு, சென்னை அச்சகங்கள் எனத் தொடரோட்டத்தில் இருந்தபடியால், முத்தமிழ் விரும்பியின் முதல் கவிதைத் தொகுப்பான "பூமர நிழல்" 2005இல் வெளியானது.

எல்லாமே நெருஞ்சி இலக்கிய முற்றம், கடற்குதிரை இணைந்து பணியாற்றிய காலம், நண்பர் நாசரேத் ஜெ.குமாரபாண்டியன் கோயம்புத்தூர் சித்தாபுதூரில் 'ஏஞ்சல் தட்டச்சகம்' நடத்தி வந்தார். அருகிலேயே 'ஜெயா அடுமனை'யிலிருந்து சர்க்கரை இல்லாத் தேநீர், தேங்காய் பன் எங்களுக்கு மதிய உணவாக மாறியிருந்த வேளை.

2006 ஜனவரி, சென்னை புத்தகக் கண்காட்சி மைதானத்தில் தேநீர் இடைவேளையின் போதும் கவிஞர்கள் இளையபாரதி, தென்பாண்டியன், சிவராஜ் போன்றோருடன் சனி, ஞாயிறு இரவுகளில் கவிதையாய்ப் பேசிக்கொண்டிருந்தோம். எனது

‘வறட்சியின் பாடல்கள்’ இரண்டாவது கவிதைத் தொகுப்பு புத்தம் புதியதாய்க் கைகளில் இருந்தது.

இத்தொகுப்பை 10.02.2006 வெள்ளியன்று மாலையில் மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா மாநகரில் விக்டோரியா மகாராணியின் நினைவரங்கில் வெளியிட்டோம். கவிஞர்கள் சிற்பி, புவியரசு, இளையபாரதி, ஞானக்கூத்தன், கலாப்ரியா, கல்யாண்ஜி, எழுத்தாளர்கள் பாவண்ணன், நாஞ்சில் நாடன், சி.ஆர்.இரவீந்திரன் சுப்ரபாரதிமணியன் உள்ளிட்ட அனைவருக்கும் நூலின் படிகளை அனுப்பியிருந்தோம்.

கவிஞர் ஞானக்கூத்தன் ‘வறட்சியின் பாடல்களைச் சூட்டோடு வாசித்துவிட்டேன். ஏற்கனவே, வாசித்த ‘பூமர நிழல்’ கவிதைகளையும் சேர்த்து உங்களுக்கு எழுதுவேன்’ என்றெழுதினார்.

கவிஞர் கல்யாண்ஜிதான் ‘பசுமை வண்ணப் பின்னணியில் உள்ள செம்பூக்களைக் கொண்ட வறட்சியின் பாடல்களை, எனது அலுவலக மேசை அறையிலேயே வைத்திருக்கிறேன். விரும்பியின் மூன்றாவது தொகுப்பும் விரைவில் வருமெனத் தெரிகிறது’ என வாழ்த்துக் கடிதம் அனுப்பினார்.

ஆனால், என்னுடன் நெருங்கி உறவாடிய கவிதை நண்பர்கள், எனது இத்தொகுதி பற்றி உரையாடவே இல்லை. இதில் இளஞ்சேரல், பொன், இளவேனில், இளங்கோ கிருஷ்ணன் விலக்கானவர்கள். இத்தொகுதி பற்றி பேசுவது இலக்கிய அரசியல் வரம்பிற்குட்பட்ட ‘இரு கோடுகள்’ தத்துவமே.

கோயம்புத்தூரில் உள்ள ‘ஓசை’ சுற்றுச்சூழல் அமைப்பின் அலுவலகத்தில் ஓரிரு கவிதைகளை வெண்பலகையில் பொறித்திருந்ததை அறிந்தேன். கல்லூரிக் காலம் தொடங்கி கால் நூற்றாண்டுக் கால

நண்பர் 'ஓசை' காளிதாசன் மற்றும் இத்தொகுப்பில் காட்டாளன் உள்ளிட்ட சில கவிதைகளைப் பொள்ளாச்சி – சாகித்ய அகாடமியில் வாசிக்க எனக்கு மொழிபெயர்த்த கவிஞர்.பா. மீனாட்சிசுந்தரத்திற்கும் நன்றி!

இத்தொகுப்பில் உள்ள சில கவிதைகளை ஒளிப்பதிவாளர் ஆ.செல்லத்துரை குற்றாலத்தில் நடந்த இலக்கிய நிகழ்வில் மரபின் மைந்தன் முத்தையாவிடம் குறிப்பிட்டுப் பேசினாராம். பத்திரிகையாளர் கவிஞர் சிவராஜ் இக்கவிதைகள் குறித்து சந்திக்கும் போதெல்லாம் மறுபதிப்பு செய்யச் சொல்லிப் பேசுவார். ஒரு மாமாங்கம் கடந்து வறட்சி நிலை மாறி, 'திட்டிவாசல் பெண்ணொருத்தி' என்ற பெயரில் இரண்டாம் பதிப்பு சாத்தியமாகிறது.

10.06.2006 ஆம் நாள் கோயம்புத்தூரிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குக் குடும்பத்தோடு பெயர்ந்தேன். சில ஆண்டுகளுக்கப் பிறகு நண்பர்கள் இளஞ்சேரல், இளவேனில் இவர்களது அழைப்பிற்கிணங்க 'கோயம்புத்தூர் இலக்கியச் சந்திப்பில்' எழுத்தாளர் சுப்ரபாரதிமணியனின் 'நீர்த்துளி' நாவல் பற்றி உரையாற்றிய வேளையில் குறிப்பிட்டேன்.

"கோவையிலிருந்து சென்றுவிட்டேன், மூன்றாவது கவிதைத்தொகுப்பைக் கொண்டுவர விரும்பினாலும், 40 கவிதைகளைத் தொகுத்திருந்தாலும், கொங்குச் சூழல், கவிஞர் குழாம், விஜயா பதிப்பகம் மற்றும் நண்பர்களை விட்டு விலகிய ஆண்டுகளில் படைப்பு மனம், படைப்புச் சூழல், படைப்பாக்கம் மிகவும் தளர்ந்திருப்பதை உணர்ந்திருக்கிறேன். ஆனால், நெருஞ்சி இலக்கிய முற்றத்தைச் சிற்றிதழ், நூல் வெளியீடு, மொழிபெயர்ப்பு, நீலமலை வெளியீடுகள், குறும்படங்கள், வெள்ளித்திரை என இலக்கிய இயக்கமாக நான் போகும் பாதையெல்லாம் முன்னெடுத்தே விதைத்து வருகிறேன். இலக்கிய

இயக்கத்திற்கு, செயல்பாடுகளுக்கு, இலக்கு நோக்கிய பயணத்திற்கு ஓய்வில்லை என்பதை இக்கூட்டத்தில் பிரகடனமாகச் சொல்வேன்".

எனது கவிதைகளைப் பற்றிப் பேசுகிற ஆய்வறிஞர் ஞானி, கவிஞர்கள் சிற்பி, புவியரசு, தென்பாண்டியன், ஜெ.மஞ்சுளாதேவி, வேனில் கிருட்டிணமூர்த்தி, சுந்தர்ஜி, கவிஜீவன், பேராசிரியர்கள் முனைவர்கள் முல்லை ஆதவன், தே.ஞானசேகரன், மு.ஜீவா, சி.மா.இரவிச்சந்திரன், இரா.ஜெயராமன், ஆ.மீ.ஜவஹர் ஆகியோரையும் அடிக்கோடிடுவேன்.

எனது சில கவிதைகளைக் காட்சிப்படுத்திய கவிஞர் இளஞ்சேரல், இயக்கி இணையத்திலேற்றிய ஒளிப்பதிவாளர் தொகுப்பாளர் தந்தி ஆ.செல்லத்துரை, கவிதை வடிவத்திற்கு இசை கோர்த்த இசையமைப்பாளர் 'ஸ்வராலயம்' பா, சென்னை பெருநகரத்தின் எல்லா இடத்திலும் என்னை முன்னிறுத்தும் இயக்குநர் கவிஞர் இளையபாரதி ஆகியோருக்கும் நன்றி!

வறட்சியின் பாடல்கள் எனும் 'திட்டிவாசல் பெண்ணொருத்தி'க்கு தனது அணிந்துரையால் வளமை சேர்த்த ஆய்வறிஞர் கோவை ஞானி அவர்களுக்கும், செயல்பாட்டாளர் நண்பர் இளஞ்சேரலுக்கும் நன்றியும், அன்பும்!.

இரண்டாம் பதிப்பு சிறப்பாக வெளிவர, பதிப்பாளர் 'காவ்யா' சு. சண்முகசுந்தரம் அவர்களிடத்தில் ஆற்றுப்படுத்திய அண்ணன் பாரதியார் பல்கலைக்கழகத் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் தே.ஞானசேகரன் அவர்களுக்கு, தொடர்ந்து எழுதத் தூண்டும் 'கிழக்கு வாசல் உதயம்' மாத இதழின் ஆசிரியர் எழுத்தாளர் உத்தமசோழன், 'அல்லிவட்டம்' மணிமார்பன், இத்தொகுப்பின் அட்டை வடிவமைத்த 'நெய்தல்' கா. ஃபாத்திமா ஆகியோருக்கும் நன்றி.

இப்போது The Shadow of a flowering Tree – பூமர நிழல், Songs of Dryness – வறட்சியின் பாடல்கள் இவ்விரு தொகுப்புகளையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து அமேசான் இணையத்தில் வெளியிட்ட மதிப்பிற்குரிய பேராசிரியர் முனைவர். செ. இராஜேஸ்வரி, தினேஷ் இருவருக்கும் நன்றியும், அன்பும்.

2018 நிறைவுறும் வேளையில் "பிரகதீச்வரம் எனும் தஞ்சைப் பெருவுடை நிலம்", "உன்னோடு உரையாடுதல்" என்ற இரு புதிய கவிதைத் தொகுப்புகள், 'அப்பாவின் நூலகமும், அழகான ஓவியங்களும்', 'நவீன அந்தமானும் பெருவேந்தன் இராசேந்திர சோழனும்' கட்டுரை நூல்களும் தலைநகரத்தில் அச்சு இயந்திரத்தில்.

மீண்டும் குறிஞ்சிகள் பூத்துக் குலுங்கும் பருவத்தில் குழந்தைகள் வளர்ந்து எனது துணைவியுடன் கவிதை, பாடல், இசை பற்றி விவாதிக்கிறார்கள். அம்மா. தங்கைக் குடும்பம், கடற்குதிரை வெளியீட்டகம், 'தென்றல் இலக்கியப் பேரவை' என்னை வழிநடத்துகிறது.

காலமும் களமும்

படைப்பு மனமும் தொடர் பயணங்களும்

இன்னும் பெயரிடப்படாத கவிதை மனங்களும்

என்னைத் தூண்டிக்கொண்டே இருக்கட்டும்.

எத்துணை மகிழ்ச்சியானது

இந்த மாமாங்கங்கள் கடந்த வாழ்வு !

திருச்சிராப்பள்ளி – 620014 *முத்தமிழ் விரும்பி*
21.12.2018 *virumbi3333@gmail.com*
nerunjimagazine@gmail.com

திட்டிவாசல் பெண்ணொருத்தியின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு அமெரிக்காவில் பாஸ்டன் நகரில் வாழும் திருமதி.மார்சி பவர் என்ற மாற்று மருத்துவ நிபுணர் வழங்கிய திறனாய்வுக் கட்டுரை . . .

A lady at the little gate

Forward by **Marcie Bower**

When I first read this collection of poems from Muththamizh Virumbi, translated into English by Dr. C. Rajeswari, I was immediately pulled into the world the poet was creating with his words. This is not an easy feat, when reading poetry that was originally written in another tongue. I found myself returning again and again to certain poems, and each time unlocking a new, deeper meaning, or leaving with yet another question I wanted answered.

Mr. Virumbi's eloquence and skill is apparent in these poems, as themes of love, mental health, communication, and pressing social and environmental issues rise off the pages and pull the reader further into the text – that at first appears simple and yet carries such impact with each choice of words.

The poems in this collection are both uniquely Tamil and also universal. Mr. Virumbi uses quintessential Tamil imagery – kolums and rangolis, paddy fields and drying rivers, Neem fruits and the

Marutham tree, glass bangles and traditional festivals – as the backdrop for exploration of themes that resonate across cultures and countries. He also manages to make his poems both timely and timeless – at once referencing both traditional rituals and modern technology by name. This places them squarely in the time of the modern reader but also allows one to see past the confines of time.

Perhaps the most universal theme any poet can discuss is the theme of love. In this collection, Mr. Virumbi frankly explores the trials and tribulations of such a complicated emotion, by writing opening and honestly about connection and communication, but also loneliness and rejection – the other side of love.

*A lady at the little gate*also takes on sometimes difficult social and environmental issues – in these pages you will find a women's decent into mental illness following the death of an alcoholic spouse, and a dried up riverbed due to failure of the monsoons in a changing climate and changing time.

I respect Mr. Virumbi in his work on this collection, as he clearly wrestles with his – "the poet's" – own place in the telling of these poems and stories. The poet is at once romantic, and lost, and questioning, and then found. He has put his heart out there on the page.

One may wonder why this collection of Tamil poems is relevant to an English reader, but once you

begin reading you will not wonder any longer. So many of the themes discussed are universal, so that you do not need to have ever experienced the feel of a Tamil Nadu morning to understand the meaning behind the poems in *A lady at the little gate.* That said, if you have experienced the daily sights and sounds of Southern India, these poems may bring you back there in a heartbeat.

For me personally, this was the best part of diving into *A lady at the little gate.* I am a native of the United States of America, and my studies in college brought me to study in Madurai, Tamil Nadu, and then to work in Madurai following my college graduation. Now with a career in the United States, I do not get to travel back to Tamil Nadu as frequently as I wish. I find Tamil culture to be so rich, and the mundane, everyday references to daily Tamil life contained within these poems was like food for my India-missing soul.

Since I no longer live in South India or study Tamil, I would in no way be able to read the poems contained in this collection had they not been expertly translated into English. Dr. C. Rajeswari is a master of her craft of translation, studying each and every word so that the translation is true to the original text in form, function, meaning, and feel. She fully immerses herself in the poems in order to bring them to such a large audience – the English-speaking world. Dr. C. Rajeswari is passionate about Tamil, literature,

and sharing Tamil culture and language with the world. Her translation of these poems is a gift.

Since my first reading of *A lady at the little gate*, I have felt a need to return again and again to some of the poems therein. Dr. C. Rajeswari once told me that poems demand rereading, as they are a “treasure hunt.” Enjoy this journey.

Marcie Bower

Boston, MA
July 2019

தலை நீட்டும் கவிதைகள்

முனைவர் யாழ்.சு.சந்திரா
தமிழ்த்துறை பேராசிரியர்,
அருள்மிகு மீனாட்சி கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி

பெருங்கதவின் ஊடே இடங்கொள்ளும் திட்டிவாசலில் தலை நீட்டும் சிறுமி தடாதகை போல, தமிழ் இலக்கியப் பரப்பின் ஊடே தலைநீட்டுகிறது இக்கவிதை நூல்!.

காமராசர் பல்கலைக்கழகத்தின் முன்னத்தி ஏரான இராஜேசுவரி அக்கா, தான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதாகக் கூறி, ஆங்கிலத் தமிழ் நூல்களைத் தந்தபோது வாங்கிக்கொண்டேன். சோபாவின் கைப்பிடியில் வைத்தபடியான புத்தக அடுக்கில் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் ஆங்கில, தமிழ்க் கவிதை நூல்களும் சேர்ந்து கொண்டன.

தமிழ்ப்புலத்தின் இருப்பினால் அச்சாகும் பல நூல்கள் நட்பு வட்டத்தால் திணிக்கப்பட்டு விமரிசனம் / அணிந்துரை (அதாவது பாராட்டுரை) கேட்டுத் துளைத்தெடுக்கும் தொல்லைகளால் சலிப்பே ஏற்படும். ஆனால், கவிஞர் முத்தமிழ் விரும்பி என்ற பெயரை வடக்கு வாசல், கிழக்கு வாசல் உதயம் இதழ்களில் பார்த்த ஞாபகம் நெருட, வார இறுதியில் "பூமர நிழல்" கவிதை நூலைக் கையில் எடுத்தேன். உண்மையில் அதிர்ந்தே போனேன். ஒரு வாரத்தை வீணாக்கி விட்டோமே என்று, கொஞ்சம் வருத்தம் ஏற்பட்டது. உண்மையில், பொறிஞராக இருந்து கொண்டு தமிழ்க் கவிதை உலகிற்குக் காத்திரமான பங்களிப்பை 'கவிஞர் முத்தமிழ் விரும்பி' செய்திருப்பது 'திட்டி வாசல்

பெண்ணொருத்தி' வாசிப்பின் முடிவில் கிடைத்த வரம்! உடனடியாக இராஜேஸ்வரி அக்காவிற்குத் தொடர்பு கொண்டு நீண்ட இடைவெளிக்குப் பிறகு உண்மையான கவிதை நூலை வாசிப்பதற்குக் கொடுத்தமைக்கு நன்றி கூறினேன்.

கவிதை என்பது மொழிச் சாமர்த்தியம், யாப்பின் வரையறை முதலியவற்றிற்கு அப்பாற்பட்டு படைப்பாளிக்கும் வாசகர்களுக்குமான அனுபவபூர்வமான தொடர்பினை உருவாக்குமோர் ஊடகம்! எந்தவிதமான அலைவரிசைத் துண்டிப்பும் இன்றி திட்டி வாசல் வழியே உள் நுழைந்து கவிதைச் சாளரங்கள் வழி பார்க்க முடிந்தது, நீண்ட காலத் தவத்தின் பலன்!.

வறட்சியின் பாடல்களாகச் சிதைக்கப்படும் இயற்கை தன்னைத் தானே மீட்டுருவாக்கம் செய்து துளிர்ப்பது போலப் படைப்பாய் மனதில் முகிழ்த்த கவிதைகள் இவை. ஆகவேதான், அழிந்து போன – அழிக்கப்பட்ட இயற்கைப் படிமத்தில் முளைக்க வைக்கிறார், கவிஞர்.

ஒரு யுகத்திற்கு முன்னம்

விற்றுப் பெயர்ந்த

புஞ்சைக் காட்டினிடை நிற்கும்

உதிர்ந்த வெள்ளை வேலமரத்தின்

மேலே கிளைத்தது

வெண்ணிலாப் பழம்.

என்ற கவிதை உயிர்ப்பின் ஒலியைப் பட்டமரத்தின் கூட்டில் உள்ள பறவையின் கூவலாகக் கவிஞர் சொல்வது (சுடர் வேம்பின் மதுக்குரல்) காட்சிப்

படிமமாக மட்டுமல்ல வருங்கால நம்பிக்கையுமாக இருக்கிறது.

சமுதாயத்தின் எல்லாவிதமான பரிமாணங்களையும் பரிணாமங்களையும் வெளிப்படுத்துவன தொன்மங்கள். இவை படைப்பாளிகளின் படைப்பூக்கத்திற்கான ஊற்றுக்கள்! ஏகலைவன் தொன்மம் மறுக்கப்படும் கல்விக்கு அடையாளமாக்கப்படுவது புனையுலகின் வெளிச்சப் புள்ளியாகும்.

கவிஞர் முத்தமிழ் விருப்பியோ மகாபாரதத்தின் ஏகலைவன் தொன்மத்தின் நீட்சியைக் களமாக்குகிறார். வலக்கைக் கட்டைவிரல்த் தட்சணைக்குப் பிறகும் பிறிதொரு கையால் அஸ்திரப் பயிற்சியில் வெற்றி பெற்றவனாய் உள்வாங்கி, மண்சட்டி உடைக்கும் குறுந்தாவரமாய் நெக்குவிடும் பாறையாய்ச் சுட்டும் திமிறல், இச்சமூகத்திற்கான தேவையாகிறது.

வீசு தென்றலும், வீங்கிளவேனிலும் மூசு வண்டுறைப் பொய்கையுமான கிராமிய வாழ்வைத் தொலைத்து, குளிரூட்டியும், நெகிழி மலர்களுமான செயற்கை நகர வாழ்க்கையில் சுகம் காணும் எதார்த்தம் 'நித்தியம்' கவிதையாகிறது.

நெகிழிச் சாமான்கள் புழங்கும்

பெருநகர வீதியில்

கான்கிரீட் பெட்டிகளின் அடைசலில்

பரம்பரை இருப்பென

ஆழ் சுவாசமொன்று தர

வாய்த்ததில் ஓட்டு வீடு

சிலிர்த்து சிற்கும் சாய்ந்த தென்னையின்

பச்சை விசிறல்!

‘இன்பமும் பொருளும்’ என்ற தலைப்பில் தலைமுறை இடைவெளி கவிதையாகிறது.

வயோதிகத்தில் அவரும்

இளமைப் பருவத்தின் துள்ளும் துடிப்போடும்

மோதுகிறார்கள் இவனோடு

என்ற யாதார்த்தம் கவிதையாக நீட்டி பெற்ற,

நாளை இந்தக் கவிதையை நசுக்கும்

மலைப்பாதையிடுக்கில் சின்னஞ்செடியை

நண்பனோ அல்லது நானோ வழிமொழியலாம்

மனைமாட்சி நன்மக்கட்பேறு

என்று முடிவு தருகிறது. அது சரி! முப்பாலில் ‘அறம்’ எங்கே, கவிஞரே? என்ற வினாவிற்குக் கவிதையறம் விடையாகிறது, நூல் முழுவதும்!.

‘எழுதிச் செல்லும் விதியின் கை, எழுதி எழுதி . . . . .’ என்ற கவிதையின் தொடர்ச்சி யாக

தாள்கள் காற்றிலசையும்

அம்மேசைமேல் இருக்கிறது

மனங்கொள்ளும் அடர்பச்சை நிறத்திலொன்று

எனவும்,

வரையலாம் சில புள்ளிகளை

என்றாலும் தூறலெடுக்கும்

கவிக்கணம் அடர்மழையாகுமா?

என வினாவும், கவி எழுதும் முறைமையை – முயற்சியை – காட்சிப்படுத்தும் யத்தனமாக விரிகிறது.

அழிந்துபோன (அழிக்கப்பட்ட) இயற்கையின் எச்சமாகச் சுவடாகும் வாழ்வின் அடையாளமாக ‘மழை நாள் முடிந்து புகையுடன் கலக்கும் கார்மேகம்!’ கவிதை! விளைச்சல் ஏதுமற்ற விற்பனையான விளை நிலங்களில் கால்பரப்பும் கான்கிரீட் விருட்சங்களில் கூடுகட்டும் மனிதம், தப்பித்துத் தழைத்துக் கிடக்கும் அண்டைத் தோட்டத்து விளைச்சலை ஐம்புலன்களாலும் நுகர்கிறது கவிமனம்!.

எல்லாவற்றிலும் செயற்கைப் பூச்சினால் மினுங்கும் உலக வாழ்க்கையில் வாயில்தோரண வாழை மரங்களும் நீரூற்றத் தேவையற்ற நெகிழி மரமாகிறது. கடவுளாகும் கற்சிலைகள் கலையின் வெளிப்பாடாக, போதை திரவங்களூடே, வணிக ஒப்பந்தத்தின் களமாகும் காலம் நாட்டு முன்னேற்றம் ஆகிறது.

கண்ணிரண்டை விற்றுச் சித்திரம் வாங்கும் வியாபாரம் படுஜோராகிறது. பண்பாட்டுப் பரிமாற்றம் என்றும் கலாச்சார வெற்றி என்றும் பிரகடனங்கள் தூள் கிளப்பப் பெருநகர வீதிகளின் எல்லைகள் நாற்புறமும் ராட்சஸ ஆக்டோபஸாய்க் கரங்கள் விரிக்கின்றன.

பெருமரத்தின் வேர்மடியில் வேட்டையின் வெற்றிக் களிப்பில் மது மயக்கத்தில் கால்பரப்பிப் படுத்துக்கிடக்கும் வேடுவனின் மனைவி, அவன் கவர்ந்து வந்த இளம் விலங்கைத் தாயின் தவிப்பு அறிந்து அவிழ்த்து விடுகிறாள். உறங்கும் கணவன் விழிப்பதன் முன் மூங்கிலரிசையைக் குற்றிச் சமைக்கிறாள் என்ற சங்க வாழ்வியல் . . . . மரபின் நீட்சியாகக் கவிஞரின் தனித்திறனாகக் கவிதை நூலில் இறைந்து கிடக்கிறது.

மண்சுவர் தாங்கிய ஓலைக்குடியிருப்பில்

காட்டுக்கோழிக் குழம்பு கொதிக்கிறது

கல்லடுப்பில்

சுவைகூட்ட குறுமிளகு பொடிக்கிறாள்

கல்தேர் உருட்டி விளையாடும்

சிறுவனருகில் பெருவாகை நிழல்

தெங்கிளநீர்

மரத்தடியில் கூடை முடைகிறான்

தொல்பழங்காலத் தோன்றல்

மூங்கிலரிசிச் சோறாக்குமவன் குழலருகே

மலையொன்று அடர் மரங்களோடு

அருவியானது . . .

என்ற கவிதை காகை நடுவேயான அருவிநீரில், குருதித் துளிகளாகக் காட்டளனின் உயிரற்ற உடலாக மிதப்பதனையும் சுட்டுகிறது. தொல்குடிகளைத் தொலைப்பதில் எந்தவிதமான மனச்சான்றும் அற்றுப்போன வறட்சியின் வெளிப்பாடாக . . . . .

வாடகை வீட்டின் கட்டுப்பாடுகளில் சின்னஞ்சிறு குழந்தையின் சிறுவில்களின் ஓவியத்தீற்றல்கள்! மனக்குமுறலின் அணில் முதுகுக் கோடாய் அறைகளாய் அடி விழுகிறது. விம்மும் மழலையின் உறக்க அழுகையில் விரியும் ஓவியத்தீற்றல்கள், மனவெளி எங்கும் ஐந்து வயது மகளின் அழகுக் கோலமாய் விஸ்வரூபமெடுத்துப் பிள்ளைமைச் சித்திரத்தை இரசிக்க வைக்கிறது.

வளர்க்கும் மனிதர்களைவிட வாழும் இடத்தின் மீதான பற்றோடு ‘மதில் மேல் பூனை’ புதிதாகக் குடியேறும் குடும்பத்தோடு குலாவுகிறது. பூனைகள்

வெளியாகும் சகுனங்களில் சஞ்சரிக்கிறது மனித உறவும் சக குடும்பத்துச் சமூகவெளியும் இடம் வலமாக இனம் தேடுகிறது.

ஒற்றையடிப்பாதையில் நிழலற்ற கிளைப் பரப்பின் பெருந்தடத்தில் இயற்கை, வறட்சியாகவே முளைத்துக்கிடக்கிறது. நீரும் நிலமும் தேவையற்ற பிளாஸ்டிக் கூடைத் தோட்டங்கள் அவநம்பிக்கையின் விதைகளாகப் பாறைத் தடத்தில் சிதறிக் கிடக்கின்றன.

கடம்பவனத்தின் ஆதித்தாய் உலகப் பெருங்கதவின் ஊடே முகம் காட்ட முற்படுகிறாள். வெளிறிப் போயிருந்தாலும் வீடு இருக்கிறது! கவிதை பிறக்கிறது! பேருருக் கொள்வாள், என்ற எதிர்கால நம்பிக்கையில் கவிமனம் கைகுலுக்கிறது.

வாழ்த்துக்கள் !

நூலாசிரியர் பற்றி



முனைவர் செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். **மொழி பெயர்ப்பியல் ஆய்வு** என்ற ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைக்கழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். *Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles* போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக

மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளி நாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி ***“ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100”*** *என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து*

கட்டுரைகள் எழுதினார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது ***வெற்றித் திருமகன்*** *என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் 18 நூல்கள் வெளிவந்துள்ளன.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி, திட்டிவாசல் பெண்ணொருத்தி, மற்றும் தேனடையும் வரலாறு என்ற கவிதை நூல்களை இவர் முறையே **"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive, Ambrosial Kiss (Editor)",** *என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் ***பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற நூல்களையும் '2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல், முத்தமிழ் விரும்பியின் கவித்திறம்*** *என்ற நூலையும் வெளியிட்டார்.*

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ***பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு], தேவேந்திரன், பெண் தெய்வ வழிபாடு,***

மருத நிலப் பெண் தெய்வங்கள் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னைப் பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவர் சத்தியபிரபா என்ற புனைப்பெயரில் எழுதிய சிறுகதைகள் **'அமராவதியின் காதல்'** என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானிலும், அச்சிலும் வெளிவந்தது. நெருஞ்சி இலக்கிய இதழில் இவரது கட்டுரைகள் வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய **"என்னோட ராசி நல்ல ராசி"** என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.

தஞ்சையில் உள்ள நெருஞ்சி இலக்கிய இயக்கம் இவருக்கு 'சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருதை வழங்கியது. மதுரை லேடி டோக் கல்லூரி இவருக்கு மொழிபெயர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான 'பெண் சாதனையாளர்' விருதை வழங்கியது.

கவிஞர் முத்தமிழ் விரும்பி



கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி தஞ்சை மண்ணை சேர்ந்தவர். கோவை பி எஸ் ஜி தொழில்நுட்ப கல்லூரியில் பொறியியல் படித்தவர். திருச்சி பெல் நிறுவனத்தில் துணை இயக்குனராக பணியாற்றிவருகிறார்.

நெருஞ்சி இலக்கிய இயக்கத்தை நிறுவி ஆண்டுதோறும் கவிஞர் பத்திரிகையாளர் எழுத்தாளர் எனப் பல துறை சார்ந்தவர்களுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறார்.

நெருஞ்சி என்னும் காலாண்டு இலக்கிய இதழை நடத்திவருகிறார். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு உறுப்பினர் ஆவார். கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆட்சி மன்றக் குழு உறுப்பினரும் ஆவார்.

கவிஞருடைய **பூ மர நிழல், திட்டிவாசல் பெண்ணொருத்தி, உன்னோடு உரையாடுதல், காதலின் மொழி** ஆகிய கவிதை நூல்கள் ஆங்கிலத்தில் இந்நூலாசிரியர் முனைவர் ராஜேஸ்வரி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை எமெரால்டு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

கவிஞருடைய பூமர நிழல் கவிதைத் தொகுப்புக்கு ‘கவிதை உறவு 2004’ முதற் பரிசு வழங்கியது. மேலும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் நியு செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய பாரதி விழா 2004 பரிசுப் போட்டியிலும்பரிசு பெற்றது.

கவிஞர் **கடற்குதிரை பதிப்பகத்தின்** மூலமாக கவிஞர் பலருடைய கவிதைகளையும் வேறு பல நூல்களையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அண்மையில் சந்தாலி மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பை வெளியிட்டு இருக்கிறார்.

மலேசியாவில் மலாய் பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில் கவிஞருக்குத் **தமிழ் இலக்கியச் செம்மல்** என்ற விருது வழங்கப்பட்டது.

கவிஞருடைய, நேற்றின் பாதங்கள், தஞ்சை பெருவுடை நிலம் ஆகிய கவிதை நூல்கள் விரைவில் அச்சில் வெளி வரவிருக்கின்றன. இவ்விரு கவிதைத் தொகுப்புகளும் கட்டுரைகளும் விரைவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட இருக்கின்றன.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளை கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி போன்ற வேறு சில தன்னாட்சி கல்லூரிகளும் பாடமாக வைத்துள்ளன.தமிழ் ஆராய்ச்சியாளர்கள் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

உள்ளடக்கம்

1. திட்டிவாசல் பெண்ணொருத்தி - ஓர் அறிமுகம்

'கவிஞர் முத்தமிழ் விரும்பி தமிழ் உணர்வு மிக்கவர். தொல்காப்பியர் தொடங்கி தமிழ் இலக்கியத்தின் கூர்மையான பதிவுகளை நெஞ்சில் தாங்கி நிற்பவர். இதன் காரணமாகவே இனிய பண்பையும் ஈரமான நெஞ்சையும் பெற்றவர்; கற்றது பொறியியல் கல்வி, பார்ப்பது அரசுப் பணி. இவற்றின் காரணமாகவும் இவற்றை மீறியும் கவிதையுணர்வோடு வாழ்பவர் முத்தமிழ் விரும்பி' என்று 'திட்டி வாசல் பெண்ணொருத்தி' நூலாசிரியரை கோவை ஞானி அறிமுகம் செய்கிறார். இந்நூலின் முதல் பதிப்பான 'வறட்சியின் பாடல்களுக்கு' கோவை ஞானி 'தமிழ் கவிதைக்குள் ஒரு புதிய தடம்' என்ற தலைப்பில் வழங்கிய அணிந்துரையில் கவிஞரை இவ்வாறு அறிமுகம் செய்கிறார்.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் 'திட்டிவாசல் பெண்ணொருத்தி' கவிதை நூல் சென்னை, காவ்யா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 15 ஆண்டுகளுக்கு முன்பு ***'வறட்சியின் பாடல்கள்'*** *என்ற பெயரில் கடற்குதிரை பதிப்பகத்தாரால் வெளி வந்தது. அப்போது இருந்த வறட்சி இப்போது இல்லாத காரணத்தால் அந்தப் பெயரை மாற்றி விட்டு இரண்டாம் பதிப்புக்கு அந்நூலில் இருந்த இன்னொரு கவிதையின் பெயரான திட்டிவாசல் பெண்ணொருத்தி என்பதைச் சூட்டியுள்ளனர்.*

'திட்டிவாசல் பெண்ணொருத்தி' என்ற இக்கவிதை நூல் பொழுதுபோக்குப் படைப்பு அல்ல. தீவிரமான வாசிப்புக்கு உரியது. திரும்பத் திரும்ப

வாசிக்கத் தூண்டுவது. மறு முறை மறு முறை வாசிக்கும் போது புதிய புதிய பரிணாமங்களுக்கு நம்மை இட்டுச் செல்லும் வலிமை படைத்தது. ஒரு மாபெரும் கருத்துக் கருவூலமாக விளங்கும் இக்கவிதை நூலில் வரலாற்று நிகழ்வுகள், நிலவியல் கருத்துக்கள், பண்பாட்டுத் தகவுகள், சூழலியல் தகவல்கள், வேளாண்மை அனுபவங்கள் எனப் பல துறை சார்ந்த ஆழமான கருத்துகள் கவிதைகளின் சாராம்சமாகத் திகழ்கின்றன..

கவிதையின் உள்ளடக்கம் பல துறை சார்ந்ததாக இருப்பதால் வாசிப்பு அனுபவம் சுகமானதாக உள்ளது. குடும்பம், காதல், இயற்கை, நட்பு, விழா என்று பல வகைப்பட்ட மலர்களால் தொடுக்கப்பட்ட தஞ்சாவூர்க் கதம்பமாகத் தஞ்சையைச் சேர்ந்த இக்கவிஞர் தன் நூலில் கவிதைகளை யாத்துள்ளார். இக் கவிதை நூல் ஆங்கிலத்தில் ***Songs of Dryness*** என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு எமரால்டு பதிப்பகத்தாரால் சென்னையிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் அமேசான் ஃபிலிப்கார்ட் போன்ற வணிக வலைத்தளங்களிலும் கிடைக்கின்றது.

'ஐவகை நிலத்தில் இருந்து ஆகாயத்தோடு பேசும் விதை மணிகள் என்று இந் நூலைப் பாராட்டி எழுதிய இருகூர் கவிஞர் இளஞ்சேரல், 'விரும்பியின் இந்தத் தொகுப்பில் எந்த இயக்கத்தின் சாயலோ, எந்தத் தத்துவத்தின் அடிப்படையோ, எந்த நம்பிக்கையின் ஆசிகளோ இல்லாமல் அசலான தனித்துவத்தின் பல கவிதைகள் உள்ளன. கடுஞ்சொல்லோ பகட்டோ மிகையோ எதுவும் இல்லை'. என்கிறார். 'திட்டி வாசல் பெண்ணொருத்தி அனைவரும் வாசிக்கக் கூடிய கவிதை நூல் அல்ல. அதன் வாசகருக்கும் அதன் சுவையை உணரும் திறம் வேண்டும். தமிழக வரலாறு, பண்பாடு, சூழலியல், அரசியல், நிலவியல் பற்றிய முன்னறிவு வேண்டும்.

'நற்றாமரை கயத்தில் நல்லன்னம் சேர்ந்தார் போல்

கற்றாரைக் கற்றாரே காமுறுவர்'

என்ற நிலையில் இந்நூல் விளங்குகிறது. படிமம் உருவகம் போன்ற இலக்கிய உத்திகளுடன் சொற்சுவையும் பொருள் ஆழமும் கொண்ட இக்கவிதைகள் செறிவானவை. சுவையானவை

'சொல்லுக சொல்லை அச்சொல் வெல்லும்

சொல் இன்மை அறிந்து

என்று பாடிய வள்ளுவனின் வாக்கிற்கேற்ப அமைந்தவை.

கவிதை வாசிப்பு அனுபவம் சுகமாக இருப்பதற்கு முக்கிய காரணம் இக்கவிதைகளில் இடம்பெற்றுள்ள உருவகங்களாலும், படிமங்களாலும் ஒவ்வொரு கவிதையும் ஒரு படக் காட்சியாக நம் மனக்கண் முன் விரிவதேயாகும். கவிதையை வாசித்து முடித்த பிறகு கண்ணை மூடி மனத்தால் அக்காட்சியை வண்ண ஓவியமாகக் கண்டு மகிழலாம்.

தாஜ்மஹாலைப் 'பளிங்கினால் இயற்றப்பட்ட கவிதை' என்று புனைந்துரைப்பதைப்போல இந்நூலை ***'சொல் வண்ணத்தால் தீட்டப்பட்ட அழகோவியம்'*** *எனலாம். கடலில் மூழ்கி முத்துக் குளிப்பவரைப் போல இக்கவிதைக் கடலில் வாசகர் திரும்பத் திரும்ப மூழ்கி ரசிக்கலாம். 'அறிதோறும் அறிதோறும் அறியாமை கண்ட சுவை' இக்கவிதைகளை வாசிக்கும் போது கிடைக்கும். தொடக்கத்தில் வாசிப்பு நிலையில் இருக்கும் அனுபவம் போகப் போக படிப்பு அனுபவமாகி பலருடனும் இக்கவிச் சுவையைப் பகிர்ந்து கொள்ளும் மகிழ்ச்சியாகி 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற மனநிலைக்கு கொண்டு வந்து விடும்.*

காட்டாளன், இன்பமும் பொருளும், இணையத்தில் இருந்து விடுதிக்கு, பூனைகள் வெளி *எனப் பல நீண்ட கவிதைகள் அழகான நடையில் அருமையாகத் தீட்டப்பட்டுள்ளன. நான்கு ஐந்து வரிக் கவிதைகளும்*

அதே பொருள் ஆழத்துடன் சொற்சுவையுடன் அழுத்தமாகத் தான் சொல்ல வந்த கருத்துக்களை இனிமையாக வழங்கியுள்ளன.

மழைக்காட்சி

'வறட்சியின் பாடல்கள்' என்ற பெயரில் இதன் முதல் பதிப்பு வந்ததற்குக் காரணம் அப்போது தமிழகத்தில் கடும்வறட்சி காணப்பட்டதாகும். எனவே இத்தொகுப்பில் பல பாடல்கள் வறட்சியைப் பற்றியனவாக உள்ளன. மழையின் தேவையை அதன் இன்றியமையாமையைக் குறிக்கும் பாடல்கள் இந்நூலின் சிறப்பம்சமாகும். ***'முன்னும் பின்னும்', 'பருவம்', 'இருப்பு'*** *ஆகிய கவிதைகள் மழையைப் பற்றிய குறிப்பிடத்தக்க கவிதைகள் ஆகும். வடகிழக்கு மழை பற்றி 'பருவம்', கோடைமழை வருவதற்கு முன்னும் பின்னும் உள்ள நிலை பற்றி 'முன்னும் பின்னும்', தென்மேற்கு மழை தப்பினாலும் வடகிழக்குப் பருவமழையாவது வந்து பூமியைக் குளிர்விக்காதா என்ற ஏக்கத்தை 'இருப்பு'ம் வெளிப்படுத்துகின்றன. முன்னும் பின்னும் கவிதையில் கவிதையின் முதல் முற்பகுதி வறட்சியையும் பிற்பகுதி திடீரென வந்த மழை வெள்ளத்தின் பாதிப்பையும் படமாக வரைந்து காட்டுகின்றது. கவிதையின் தொடக்கம்*

நீர் இல்லாதபோது

நீர்த்துப் போகின்றன சொற்கள்

முன்பே வறண்டாலும்

மாசி பங்குனியில் வராதா

கோடை மழை -

வந்து சேர்ந்த பறவைகள்

மரக்கிளைகளில் இலைகளோடு.

பேரூர் குளத்தில்

குனிந்து மகிழ்ந்து முகம் பார்த்தன

நீர்க் கோழிகள்.

என்ற வரிகள் வறட்சியைப் பாடுகின்றன. கவிதையின் அடுத்த பகுதி வாராது வந்த மாமழையை வருணிக்கின்றது.

இரண்டு பகல்களில் யாரும்

காணாமலிருந்தன;

மறுநாள்

மூழ்கிய ஊர்கள்,

கரைந்த குடிசைகள் ,

செய்திகள் குவிய,

உக்கிரமாகிறது விலைப்புள்ளி.

மின்மாற்றி கோபுரத்திற்கு

பின்னால்

உதயமாகிறான்

ஊர் தேடும் ஒளிக்கோளம்.

இக்கவிதையில் திடீரென வந்த மழை வெள்ளமாக மாறி ஊர்களை மூழ்கடித்து, குடிசைகளைக் கரைத்து, விலைவாசியை உயர்த்தி, மக்களைப் பெரும் அவதிக்குள்ளாகி விட்டது. இவை அனைத்தும் நடந்த பிறகு மழை போதும் வெயில் வேண்டும் என்று மக்கள் அவாவும் காலத்தில் மின்மாற்றி கோபுரத்திற்குப் பின்னால் கதிரவன் உதயமாகிறான். இத்துடன் கவிதை நிறைவுபெறுகிறது. கவிதையின் முற்பகுதியில் மாசி பங்குனியில் வராதா கோடை மழை என்ற எதிர்பார்ப்பும்

கவிதையின் பிற்பகுதியில் வெயில் வாராதா என்ற எதிர்பார்ப்பும் ஒரு சேர எடுத்துக் காட்டப்பட்டு முரண் சுவையுடன் கவிதை நிறைவடைகிறது. இடையில் வறட்சியின் கோலம் காட்டப்படுகிறது.

வந்து சேர்ந்த பறவைகள்

மரக்கிளைகளில் பூவிலைகளோடு நின்றிருந்தன.

என்ற வரிகள் உணர்த்துகின்றன. ஏனென்றால் வலசை வந்த பறவைகளுக்கு பேரூர் குளத்தில் மூழ்கி விளையாட நீரில்லை. தரை தட்டிக் கிடக்கும் நீரைக் குனிந்து பார்த்து தங்களின் முகத்தை நீர்க் கோழிகள் ரசித்துக் கொண்டிருந்தன என்ற காட்சி வறட்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

வறட்சியின் வண்ணச் சித்திரம்

வறட்சியின் பாடல், வறட்சியின் பாடல்கள், தவளையும் தண்ணீர்ப் பாம்புகளும் *போன்ற கவிதைகள் வறட்சியின் கோர தாண்டவத்தை விவரிக்கின்றன. இவற்றில் 'தவளையும் தண்ணீர் பாம்புகளும்' என்ற கவிதை எவரும் ரசித்து இன்புறத்தக்கது. வறட்சியை*

குளம் குட்டைகள்

வற்றிப் போக

எங்கே போயின

மழை மேகங்கள் ?

இரவு நேரங்களில்

கேட்ட சிறுவயது

தவளைப் பாடல்கள் .

இப்போது ஞாபகங்களின்

பதிவுகளில் தூறல்கள்.

பருவ மழைக் காலங்கள்

பாடப்புத்தக வரிகள் ;

நண்பர்களின் சந்திப்பில்-

உங்கள் ஊர் பயிர் பச்சை

மழை

விசாரிப்புகள்;

நிறங்களின் பேதங்களோடு

காய்ந்து கிடக்கின்றன

செம்மண் கரிசல் காடுகள்.

வெடித்துப் போன

மந்தை வயற்காடுகளில்

நிரந்தரக் கிராமப்புறக் கிரிக்கெட் மைதானங்கள்

எப்போதாவது

மழையின் சிறு பாடல்;

மறுநாள் தலைப்புச்செய்திகள்;

வறட்சியின் செய்தி வெடிப்புகள்;

வலைப் பின்னலில்,

எலிக்கறி உணவானதை

பஞ்சாயத்துத் தொலைக்காட்சி காட்ட

ஏதேதோ ஏச்சும் பேச்சும்

ஒன்றி

உயிர்த்தொலிக்க;

குடிநீர்க் குழாய்களில்

வருகின்றன

தண்ணீர்ப் பாம்புகள்.

எளிய சொற்கள்; சரளமான நடை, தரமான கருத்து; காணொளி போல விரிந்து செல்லும் காட்சிகள் என இக்கவிதை நம் மனத்தில் வறட்சியின் சித்திரத்தை வண்ணத்தில் தீட்டுகின்றது.

காவிரியின் வளம்

*ஒரு காலத்தில் பெருக்கெடுத்தோடிய காவிரி இப்போது வறண்டு கிடக்கிறது என்பதை எடுத்துரைக்கிறது **'நடந்தாய் வாழி'**.*

தென்னை மரத்தடியில்

சிறுகுழாய் இறைக்க,

வேர் நனைக்கும்

சொட்டு நீர் பட்டு தெறிக்கும்

கனகாம்பர விதைகள் ;

இந்திர விழவூரெடுத்த

ஆட்டனத்தி ஆதிமந்தி

ஆடி பெருக்கிய

காலத்தை மறந்து

வறண்டு கிடக்கும்

பெரு நதியின் மொழி.

இக்கவிதை, சிலம்பின் இந்திரவிழாவைத் தொட்டு சங்க இலக்கியத்தின் ஆட்டனத்தி ஆதிமந்தி காதலைச் சுட்டிக்காட்டி இன்றைய காவிரி நா வறண்டு போய் இருப்பதை "வறண்டு கிடக்கும் பெரு நதியின் மொழி" என்ற வரிகளோடு முத்தாய்ப்பாக முடித்திருப்பது கவிஞரின் கவித்துவத்துக்கு ஒரு நற்சான்றாகும். இக்கவிதையைப் படித்தின்புறுவதற்கு தமிழ் இலக்கியப் பின்புலம் தெரிந்திருக்க வேண்டும். இலக்கியத் தகவுகளைச் சில சொற்களில் 'குறுகத் தரித்த குறள்' போலச் சொல்லி செல்கிறார் கவிஞர். இத்தொகுப்பில் உள்ள அனைத்து கவிதைகளுமே நல் முத்துக்கள். ஓரிரண்டை மட்டும் சுட்டிச் செல்வது மற்ற கவிதைகளுக்குச் செய்யும் இரசிகத் துரோகம் ஆகிவிடும்.

அண்டை நாட்டின் மீதும் ஆதங்கம்

வறட்சி, மழை, காதல், குடும்பம், நாகரிகம், பண்பாடு என்ற பல உள்ளடக்கக் கருக்களுக்கிடையே இலங்கையில் எரிந்த நெருப்பு பற்றியும் ஒரு கவிதை மரகதப்பச்சை போல ஒளி வீசுகின்றது. கவிதையின் பெயர் ***மூட்டம்.*** *இச்சொல் புகை மூட்டத்தைக் குறிக்கின்றது.*

இளம்பச்சை குடை விரித்த மரத்தடியில்

வாய் கண்கள் காதுகள் அடைபட

இன்னும் தியானத்திலிருப்பாரோ?

எங்கும் குருதி சொட்டுகள் கூடி

பேராறு ஒன்று புறப்பாடு செய்கிறது.

கடலிடை தீவொன்றின் மீது

நெருப்புக் கொடிகள் படர

புத்தம் மறைய

புகைமூட்டம் தெரிகின்றது.

இக்கவிதை ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று அறிவுறுத்திய அறத்தை வலியுறுத்திய புத்தரின் தத்துவங்கள் மறைந்து பகையும் புகையும் சூழ்ந்த இடமாக இலங்கைத் தீவு காணப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. வணக்கத்திற்குரியவராக வழிபடப்பட்ட புத்தர் இன்று தன் கண், காது, வாய் ஆகியவற்றை மூடிக்கொண்டு இன்னும் தியானத்தில் இருக்கின்றாரோ ஓடிவரும் ரத்தப் பேராற்றை அவர் பார்க்கவில்லையோ என்ற ஏக்கத்துடன் இக்கவிதை எழுதப்பட்டுள்ளது.

அன்றாடம் காண்பவை

நாம் அன்றாடம் பார்க்கும் பொருட்களையும் காணும் காட்சிகளையும் கூட கவிதைகளாக்கி நம்மை ரசிக்க வைத்திருக்கிறார் இக்கவிஞர். பிடி சிறுத்த கண்ணாடிக் குவளையை கவிஞர் **நிரந்தரம்** என்று பெயரிட்டுக் கவிதையாக வடித்திருக்கிறார்.

அடி பெருத்தும்

நுனி விரிந்தும்

தரம் பிரித்து

வனையும் வடிவத்தில்

எப்போதும் குறுகி கழுத்து நெறிபட்டு

அழுத்தம் கூடி

அந்த குடுவையின் குரல்வளை

கோவை ஞானி இக்கவிதை பற்றி தனது உரையில் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கதாகும். ‘குடுவையை

பற்றியது தான் கவிதை என்ற நினைப்பில் இரண்டு அல்லது மூன்று முறை ரசித்துப் படிக்கிற போதே இந்தக் குடுவை ஒரு படிமமாகி நம்மைக் கலவரப்படுத்துகிறது. நாகரிக உலகில் நாமும் இப்படி கூனிக் குறுகி, வேண்டாத இடத்தில் பெருத்து, வேண்டிய இடத்தில் சுருங்கி, கழுத்து இறுகி, திறக்க முடியாமல், வாய் திறக்க முடியாமல், அப்புறம் மூச்சுத் திணறி, நம்மை நாமே அடைத்துக் கொள்கிறோம்' என்று விமர்சிக்கிறார்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் சிறப்பாக திட்டமிடப்பட்டாலும் ஒரு கட்டத்தில் அவனுக்கு அழுத்தம் கூடி அவன் கழுத்து நெறிபடும் சூழ்நிலைகள் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது என்ற கருத்தை நிரந்தரம் என்ற கவிதை முன்வைக்கின்றது.

மனித நாகரிகம் மற்றும் பண்பாடு

மனித நாகரிகம் மற்றும் பண்பாடு சார்ந்த பல தகவல்கள் கவிஞருக்குப் பாடுபொருளாகி உள்ளன. ஒரு தாய் தன் குழந்தைக்கு நிலா காட்டி சோறு ஊட்டும் நிகழ்ச்சி அந்தக் குடியிருப்பில் முன்பு வாழ்ந்த ஒரு கிடாரிஸ்ட் பற்றியும் ***இசைஞன்*** *என்ற தலைப்பில் ஒரு கவிதை உண்டு. கிட்டார் வாசிக்கும் அவன் அவ்விடத்தை விட்டுச் சென்ற பிறகும் அவனது இசை அவ்விடத்தை விட்டு அகலாமல் தீவிரத் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதைக் கவி நயத்துடன் இக்கவிதை உணர்த்துகிறது.*

இணையத்திலிருந்து விடுதிக்கு *என்ற கவிதை ஒரு ஐந்து நட்சத்திர விடுதியில் ஒரு கருத்தரங்க நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும் நடந்த சில நிகழ்ச்சிகளைப் பேராளரின் அவதானிப்பாக வெளிப்படுத்துகிறது. அங்குக் காணப்படும் போலித்தனம், வீண் ஆடம்பரம், நுனி நாக்கு ஆங்கிலம், பிளாஸ்டிக்கின் பயன்பாடு, தமிழ்ப் பண்பாடு என்ற பெயரில் சிறுமிகளைக் கொண்டு நடத்தப்படும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள், அவற்றை*

ரசிக்க மனம் வராத மேட்டுக்குடி மக்கள், அவர்களையும் தலையாட்ட வைக்கும் நாட்டுப்புற இசையின் வேகம் போன்றவைக் கவிதையின் பாடுபொருள் ஆகியுள்ளன.

காட்டில் வசித்த மனிதர்களை நதிக்கரை நாகரீகத்தை சேர்ந்த மனிதர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டு அங்குக் காப்பி, தேயிலை, போன்ற வேற்றுநாட்டுப் பயிர்களை விதைத்து பணம் விளைவிக்கும், கொடூரத்தை ***காட்டாளன்*** *என்ற கவிதை எடுத்தியம்புகிறது.*

நகர்மயமாக்கல் அதனால் ஏற்பட்ட அழிவுகள், இயற்கைச் சிதைவு, நகரத்திற்கு உண்டான போலித்தனம் போன்றவை கடுஞ்சொற்கள் இன்றி வெகுளி, பகை, இன்னாச் சொல் இன்றி மென்மையாகவும், மேன்மையாகவும் எளிய இனிய சொற்களால் தென்றல் தவழ்ந்து வருவதைப் போன்ற நடையுடன் இளங்குளிர்ச்சியுடன் பெரியவர்கள் அறியாச் சிறுவரை அருகில் அமர்த்தி வைத்து முதுகைத் தடவிக் கொடுத்து அறிவுரை சொல்வது போலக் கவிதை வடிவம் பெற்றுள்ளன.

மலையிலிருந்து என்ற கவிதை நகரம் என்பது மின்சாரப் பூக்களில் மூழ்கியிருக்கும் பழைய அடர்ந்த காடு என்பதை உணர்த்துகின்றது. கடம்பவனம் என்ற இடத்திலுள்ள கடம்பவனேஸ்வரருக்குப் புதிய தேர் செய்யப்பட்டு வெள்ளோட்டம் பார்க்கப்பட்ட நிகழ்ச்சி குளிர் தண்டலையின் கடம்ப வனம் என்ற கவிதையில் காணலாம். இந்நீண்ட கவிதை காப்பியம் போல நாடு நகர் வருணனையுடன் கூடியது.

தஞ்சை மண்மணம்

திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற இக்கவிதை நூலில் தஞ்சாவூர் மண்ணின் மாண்பு, வளம், அழகு ஆகியன பல கவிதைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நந்தானத்து வயல்கள்

கல்லுக்கொல்லை

கணக்கன் குளம்

மேளக்குடி பனஞ்சாரி வயக்காடு

வெடிப்புற்று மாராங்கி ஏரி

என்ற வரிகள் அங்கிருக்கும் ஏரிகளை வரிசைப்படுத்துகிறது. பெண்ணாறு, ஆனந்தக் காவிரி, சித்தாறு எனச் சிற்றாறுகளின் பெயர்களும் கவிதைகளில் இடம்பெற்றுள்ளன. தஞ்சை பெரிய கோவிலுக்கு பின்புறமாக செல்லும் கால்வாய் காட்சிப்படுத்தப்படுகிறது. நொய்யல் நதி, சித்திரைச் சாவடி மதகு ஆகியனவும் கவிதைகளில் இடம் பெற்றுள்ளதால் கவிஞர் கோவை, திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் காவிரி ஓடிவரும் பாதைகளில் நடந்து வாழ்ந்து காவிரியின் வரலாற்றை உற்று நோக்கி பல கவிதைகளைப் படைத்துள்ளார் என்பது தெளிவாகிறது. அவர் சிறு வயதில் தஞ்சையிலும், பள்ளிக்கல்வியைத் திருச்சியிலும் பொறியியல் கல்வியை கோவை பி.எஸ்.ஜி.யிலும் முடித்தவர் என்பதால் காவிரியின் கரைகளில் விளையாடி மகிழ்ந்தவர் என்பதைக் கவிதைகள் காட்டுகின்றன.

பொறியியல் படித்தும் தமிழில் கவிதை எழுதும் திறன் பெற்ற கவிஞர் முத்தமிழ் விரும்பி சங்ககாலச் செய்திகளையும் இலெமுரியா கண்டம் போன்ற வரலாற்றுச் செய்திகளையும் ஆங்காங்கே தன் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். இவருடைய கவிதைகளில் சொற்சுவை விஞ்சியிருக்கும் அழகைக் காட்ட ***'சூரிய மழை'*** *,* ***'வெண்ணிலா பழம்'*** *,* ***'ஒளிக் கோளம்'*** *,* ***'கொலைக்கரம்'*** *,* ***'அத்தியாய அசைவுகள்'*** *,* ***'நெருப்புக் கொடிகள்'*** *,* ***'மொழி விதைகள்***

போன்றவற்றைக் குறிப்பிடலாம். சொல்லாட்சிக்கு ஒரு சோறு பதமாக,

ஒற்றையாய்த்

தண்டவாள வெளியில்

ஊதிக்கொண்டு போகுது

கொம்பன் யானை

என்று விரைந்து செல்லும் இரயிலை யானையாக உருவகப்படுத்தி இருப்பதை எடுத்துக் காட்டலாம்.

இயற்கை அழகு

இயற்கை ஆர்வலரான கவிஞர் முத்தமிழ் விரும்பி இயற்கை சார்ந்த பொருள்களைத் தன்னுடைய கவிதையில் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார். கிளை, மரம், செடி, இலை, தாவரம், போன்ற சொற்கள் பல கவிதைகளில் இடம்பெறக் காண்கிறோம்.

'அந்தச் சுடர் வேம்பின்

கிளைகளைக் குலுக்குகிறது

மதுக்குரல்'

'உன் பறத்தல் அறியாவிடினும்

கிளைகளின் நுனியில் இருப்பாய்' -

[ஒரு பறவையின் இருத்தலியம்]

நாட்கள் தொலைத்த

விழுதுகளும் கிளைகளும் -

[இரவு பாடல்]

குலுக்கிக்கொண்ட

கரங்களில் இருந்து

கிளைத்தது

ஒரு கொலைக்கரம் - *[வேறு வேறு]*

கலந்து புணர்ந்தவன்

குழுவிலிருந்து

புது கிளை *[ஒற்றைப் புள்ளி]*

காவலுக்கு வந்த பெரியவர்

வானம் கொளுத்தி வெடிப்பார்

வாகை மரக்கிளைகள் படபடக்கும்

-[வறட்சியின் பாடல்கள்]

மரங்கள்

கிளையைப் போல மரங்களும் கவிதைகளில் அதிகம் காணப்படுகின்றன.

குயில்களின் குரல்களோடு

தூரத்து வாகை மரக்கிளையில்

‘இளம்பச்சை குடை

விரித்த மரத்தடியில் – *[மூட்டம்]*

‘முற்றத்தில்

சில பனைமரங்களும்

பாக்கு மரங்களும்

நஞ்சை காட்டு பறவைகளை

துறந்து நிற்கின்றன – [இணையத்திலிருந்து விடுதி வரை]

இவை ஐந்து நட்சத்திர விடுதியின் வாசலில் நிறுத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் மரங்களை பற்றிய வரிகளாகும். பிளாஸ்டிக் மரங்களுக்கு நஞ்சை காட்டுப் பறவைகள் வருவதில்லை.

வறட்சியின் கடுமையை விளக்க பனை உதவுகின்றது.

ஒற்றையாய்

கூட்டமாய்

காய்ந்தும் காயாத

பனை மரங்கள்

என வரும் வரிகள் பனை மரங்கள் கூட காய்ந்துவிட்டன என்பதால் வறட்சி தீவிரமடைந்துவிட்டது என்பதை உணர்த்துகிறது.

நன்செய் காடுகளுக்கு

எல்லை காட்டி மரமாய்

நெடும் பனைகள் [வறட்சியின் பாடல்]

இக்கவிதையில் எல்லைக்காட்டி மரமாய் நிற்கும் நெடும் பனைகளின் சமூகப் பயனையும் எடுத்துரைக்கிறார்.

'கற்பனைகளில் ஓடுகின்றன

கனவென மரமான்கள். –[மலையிலிருந்து]

என்ற இக்கவிதை முடியும்போது நம் கற்பனையில் ஓடுவது மரங்களா? மான்களா என்ற கேள்வி எழும். திரும்பத் திரும்ப வாசித்து ஆராய்ந்தால் ஓடியவை மான்கள் அல்ல; மரங்கள் தான் என்பது புலப்படும். அந்த மரங்கள் நெகிழி மரங்கள். அவற்றில் இயற்கையான பசுமை இல்லை. மரங்களும் அதன்

கிளைகளும் செயற்கையானவை என்பதால் நெகிழியால் வடிவமைக்கப்பட்ட கிளைகள் மானின் கிளை விட்ட கொம்புகள் போலத் தோன்றுகின்றன. எனவே இம்மரம் கற்பனையில் ஓடும் மானை நினைவூட்டுகிறது. ஆக நம்முடைய கற்பனைகளில் கனவுகளில் ஓடுபவை மான்களைப் போலத் தோற்றமளிக்கும் நெகிழி மரங்களே என்ற முடிவுக்கு வரலாம்.

கிளைகள் காய்ந்து

நீர் அடையாளமற்று நிற்கும்

அதே குளத்துப் பெருமரங்கள் – [சென்ற திருவிழா]

இவ்வரிகள் போன வருடம் திருவிழாவுக்கு வந்த போது இம்மரங்கள் பசுமையாக இலைகளோடு அடர்த்தியாகக் காட்சியளித்தன. ஆனால் இந்த வருடம் நீர் அடையாளமின்றி கிளைகள் எல்லாம் காய்ந்து சுள்ளிகளாகத் தோற்றமளிக்கின்றன. குளமும் வற்றிக் காணப்படுகிறது. எனவே குளக்கரையில் இருக்கும் மரங்களும் காய்ந்து போய் உள்ளன என்று வறட்சியின் தீவிரத்தை ‘நீர் அடையாளமற்று’ என்ற தொடர் வழியாக கவிநயத்தோடு சொல்லிச்செல்கிறார். பல கவிதைகளில் மரங்களும் கிளைகளும் நீர் வளத்தைக் காட்டும் குறியீடுகள் ஆகின்றன.

காவிரி நதிப் பகுதியின் கால்வாய்த் தண்ணீரால் செழிப்பாக வளர்ந்து இருந்த தென்னை மரங்கள் இப்போது

தென்னை மரத்தடியில்

சிறு குழாய் இறைக்க

வேர் நனைக்கும் - [நடந்தாய் வாழி]

*‘**வேறு**’ என்ற கவிதையில் தொல் பழங்குடியைச் சேர்ந்த ஒருவன் மரத்தடியில் கூடை முடைகிறான். அவனைத் ‘தொல்பழங்காலத் தோன்றல்’ என்று குறிப்பிட்டு அவனது வாழ்வியலைப் புனைந்துரைக்கிறார்.*

மரம் செடி கொடி தாவரம் இவற்றை வர்ணிக்கும் கவிஞர் அதன் எல்லைகளையும் விட்டு வைக்கவில்லை. ***நள்ளிருள் நெருக்கம்*** *என்ற கவிதையில்*

நீரில் விளக்கின்

நிழல் தொட்டு அசைகின்றன

இலைகள் –

பாடலுக்கான குறிப்புகள் *என்ற கவிதையில்*

நெகிழி தென்னைமரம்

நிரந்தரமாய்

மண்டப வாயிலில்

இதுவும் நகரமயமாக்கல் என்பது உண்மையான இயற்கைக்கு இடம் தராமல், இயற்கையைப் போன்ற போலிகளுக்கு வரவேற்புக் கொடுப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இயற்கை அலட்சியப்படுத்தப்பட்டு செயற்கைக்குப் பட்டுக் கம்பளம் விரிக்கும் காலத்தை அவர் வேதனையோடு நோக்குகிறார்.

பதிவுகள் *என்ற கவிதையில் மரங்களை வெட்டுவதையும் அங்கு அயல் பயிர்களை வளர்ப்பதை*

காட்டை அழித்து

மரங்களின் சுவற்றில்

வேற்று மண்ணின்

விதைகள் தெளித்து

தோற்றமளித்த புதுக் காட்டினைப்

பாடுபொருள் ஆக்குகின்றார்.

நகரியப் போலித்தனத்தை 'இணையத்திலிருந்து விடுதி வரை' என்ற கவிதையில் போகிற போக்கில் சுட்டிக்காட்டி அடித்து சொல்லாமல் அணைத்துச் சொல்லும் பாங்கும் மென்மையான சொல்லாடலும் என இக்கவிதை அமைந்துள்ளது.

தொட்டிச் செடிகளில்

வேர் மூடியபடி

நதிகளைத் துறந்த

கூழாங்கற்கள்

என்ற வரிகள் நாகரிக அலங்கார முறையை மென்மையாகச் சொல்லிச் செல்கின்றன.. .

இயற்கை அழகு மிக்க ஒரு மலைப் பகுதியைக் கவிஞர் வர்ணித்து மகிழ்கிறார்.

மலையொன்று

அடர் மரங்களோடு

அருவி ஓசை

என மலை, மரம் அருவி ஆகியவை தரும் இன்பத்தை உணர்த்துகிறார். மரம் கிளை இலை இவற்றுடன் இவருடைய இயற்கை ஆர்வம் நின்றுவிடவில்லை. செடியும் கூட இவருடைய கவிதைகளில் மிகுதியான இடங்களைப் பெற்றிருக்கின்றது.

தென்னை ஓலை காற்றில் அசைவதைக் கண்டு இரசித்த கவிஞர் அதனைத் 'தென்னையின் பச்சை விசிறல்' என ***நித்தியம்*** *என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.*

'வாழ்க்கை என்பது போர்க்களம்; அதை வாழ்ந்து தான் பார்க்கணும்' என்ற வாசகத்தைப் போல வாழ்க்கைப்

போராட்டத்தில் தடைக் கற்களைத் தகர்த்து வரும் பாங்கினை '**திமிறல்**' என்ற கவிதையில் ஒரு எளிய செடி மூலமாக கவிஞர் விளக்க முனைகிறார். அந்தத் தாவரத்தை பெருவிரலைக் காவு வாங்கிய துரோணருக்கு முன் சிறப்பாக வாழ்ந்து காட்டிய ஏகலைவனையும் ஒப்பிடுகின்றார்.

கடை விரல் வெட்டுண்ட

கதாபாத்திரமாய்த் திமிறி

தான் வளரும் மண்சட்டி

உடைக்கும்

குறுந்தாவரம்

இச் சிறுகவிதை இக்காலத்தில் மன உளைச்சலும் அழுத்தமும் ஏற்பட்டு வருந்தி நிற்கும் இளைய உள்ளங்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் கவிதையாகும்.

பறவைகள்

திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற தொகுப்பில் பறவைகள் பல கவிதைகளில் இடம் பெற்றுள்ளன. உயிர்ப்பு என்ற கவிதையில்

மாலை சூரியனில்

துளிர்த்த பறவையின்

உயிர் ஒளி என்றும்; 'காட்டாளனில்'

பறவைகளின் கானம்

காட்டின் ஏகாந்த கூட்டொலியுடன்

விடியல் கேட்டு

என்ற வரிகள் பறவைகளை சுட்டுகின்றன.

‘சென்ற திருவிழா’ என்ற கவிதையில்

பெரியகுளத்தில்

பல நூறு பறவைகள்

அறுவடையின் கொண்டாட்டம் என்றும் ‘வறட்சியின் பாடல்களில்’

குயில்களின் குரலோடு

காலையில் மயில்கள்

வேரடியில் தோண்டி சுவைக்கின்றன

என்றும், மீண்டும் அதே கவிதையில்

கோடை மழைக்கு முன்

நம் கலாப மயில்

நடனம் காணக் கிடைக்கும்

என்றும் பறவைகள் பாடு பொருள் ஆகியுள்ளன.

ஏரிகள் காய்ந்து போனதும் வாய்க்கால்கள் வற்றிப்போனதும் மரங்கள் உலர்ந்து காணப்படுவதும் பறவைகள் நிழலின்றி வாடுவதும் என வறட்சியின் நிலைகளைக் கவிஞர் தனது முக்கியப் பாடு பொருள் ஆக்கியுள்ளார்.

மரம், செடி, கொடி, இயற்கை, ஏரி, குளம், நதி பற்றி எழுதிய கவிஞர் மயிலைப் போலவே காகத்தையும் கவிப் பொருளாக்கி உள்ளார். காகத்தின் கூர்மையான பார்வை ‘பார்வை’ என்ற தலைப்புடன் கவிதை வடிவம் பெற்றுள்ளது,

வெட்டுக் கத்தியை

தனித்து வைத்து

அவர் திரும்பும் கணத்தில்

கறிக்கடையில்

இறைச்சித் துணுக்குகளைப்

பொறுக்கிப் பறக்கின்றன

காகங்கள்

‘பார்வை’ எனப் பெயரிடப்பட்டுள்ள இக்கவிதை கறிக்கடையில் கறி வெட்டிய கத்தியை அருகே வைத்து விட்டுத் திரும்பும் ஒரு நொடிக்குள் அங்கு வந்து இறைச்சியைக் கொத்திக் கொண்டு பறந்து விடுகிறது. இது போன்ற வேறுபட்ட காட்சிகளையும் கவிஞர் தம் அன்றாட வாழ்வில் கூர்ந்து நோக்கி கவிதையாக்கி இருக்கிறார்.

கடல்கோளால் தீவுகள் காணாமல் போனது; நாகரிகத்தின் தாக்கத்தால் காடுகள் தொலைந்து போனது; போன்ற இயற்கை மற்றும் செயற்கை அழிவுகளையும் பாடுபொருளாக்கி அவற்றை கவிஞர் ஆவணப்படுத்தி உள்ளார்.

ஷெல்லியும் விரும்பியும்

ஆங்கிலக் கவிஞர் பி பி ஷெல்லி பாடிய ***The skylark*** *கவிதையை நினைவூட்டும் ‘ஒரு பறவையின் இருத்தலியல்’ என்ற கவிதை ஆங்கில இலக்கியத்தில் ஈடுபாடில்லாத அதனை வாசித்தறியாத இத் தமிழ்க் கவிஞர் ‘ஒரு பறவையின் இருத்தலியல்’ என்ற பெயரில் வரைந்துள்ள கவிதை உலகில் எந்த மூலையில் கவிஞர்கள் வாழ்ந்தாலும் அவர்களுடைய சிந்தனை ஒன்று போல அமைந்துள்ளது என்பதை உறுதி செய்யும் விதமாக விளங்குகிறது.*

ஷெல்லியைப் பார்த்து முத்தமிழ் விரும்பியோ முத்தமிழ் விரும்பியைப் பார்த்து ஷெல்லியோ

எழுதவில்லை என்றாலும் இவ்விருவரின் எண்ணங்களும் ஒரே நேர்கோட்டில் செல்லும் விந்தையை இக்கவிதையில் காண முடிகிறது. ஷெல்லி தன்னுடைய கவிதையில் அப்பறவையைக் கண்ணால் பார்க்க முடியவில்லை, ஆனால் அதன் குரலை மட்டும் கேட்டு அதனுடைய இருப்பை உணர்ந்து கொள்ள முடிகிறது என்பார். அதுபோலவே கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களும்

'உன் பறத்தல் அறியாவிடினும்

கிளைகளின் நுனியில் இருப்பாய்

உருளும் இலைகளில் பச்சைக்கிளி என

தளிர்கள் தரும் மூக்கின் செம்மை

இங்குமங்கும் கோடுகள் இழுக்க

வடிவம் கண்டு மயங்கிடும் பொழுதில்

நினைவிலேற்றிக் கடக்கிறேன்

ஆனாலும்

உன் பெயர் வேறென'

பறவையின் பெயர் தெரியாது, பறவையின் உருவம் தெரியவில்லை, ஆனால்

அதிகாலைப்

பொழுதை உணர்த்தும்

ஒளிக்கிண்ணத்துள் வழியும் ரசக்

கிண்ணமாய் உன் குரல்

முகம் வெளியே தெரியா விட்டாலும்

அந்த சுடர் வேம்பின்

கிளைகளை குலுக்குகிறது

மதுக் குரல்

என்பதால் குரலை மட்டும் கேட்டு மரத்தை அண்ணாந்து பார்த்து பறவை தெரியாத போதும், அதன் பெயர் அறியாத போதும் அங்கு ஒரு பறவை இருப்பதை குரலின் வழியாக உறுதி செய்துகொண்டு கவிஞர் அவ்வழியே கடந்து செல்கிறார்.

கவிஞர் முத்தமிழ் விரும்பி எழுதிய சிறப்பான குறியீட்டுக் கவிதையாகவும் அமையலாம். விமர்சகரின் பார்வையில் அவர் 'நிரந்தரம்' என்ற கவிதையை அணுகியது போல இக்கவிதையும் கூட பறவை அல்லாத வேறு ஒன்றைக் கூட குறியீடாகக் கொண்டிருக்கலாம். ஆயினும் கவிதை மொழி இரண்டு கவிஞர்களுக்கும் ஒன்றாக இருப்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது இன்றியமையாததாகும். இந்த இனிய கவிதானுபவத்தை முதல் கவிதையான 'ஒரு பறவையின் இருத்தலியல்' மூலமாகவே வாசகர் பெற்றுவிடுகிறார்.

ஏழைகளின் கவிதை

இத்தொகுப்பில் ஏழைகள், இல்லாதவர், எதுவும் செய்ய இயலாதவர் போன்றவர்களின் குரலும் வலிமையாக இடம் பெற்றுள்ளது. சான்றாக ***புலம்*** *என்ற கவிதை*

ஒரு யுகத்துக்கு முன்னர்

விற்றுப் பெயர்ந்த

புஞ்சைக் காட்டினிடை நிற்கும்

உதிர்ந்த வெள்ளை வேல மரத்தின்

மேலே கிளைத்தது

வெண்ணிலா பழம்

இக்கவிதை ஓர் இளைஞனின் பார்வையில் படமாக விரிகிறது. தங்கள் முன்னோர்கள் தங்களுடைய சொந்த நிலத்தை விற்று இடம்பெயர்ந்து சென்று விட்டனர். அந்த இடம் இப்போது புஞ்சைக் காடாக தரிசு நிலமாக கிடக்கின்றது. அதனை வந்து பார்க்கும் ஓர் இளைய வாரிசு அங்கு நிற்கும் ஒற்றை மரத்தின் பின்னிருந்து எழும் வெண்ணிலாவைக் கண்டு வேதனைப்படுகிறான். வெண்ணிலா வேல மரத்தின் மேலே பழுத்த பழம் போல அவனுக்குத் தோன்றுகிறது. பழம் போல் இனிமையான, பயன் தருகின்ற, பசி ஆற்றுகின்ற நிலத்தை விற்று விட்டார்களே நம் முன்னோர்கள் என்ற ஏக்கம் தொனிக்கும் கவிதையாக இக்கவிதையைக் கவிஞர் படைத்துள்ளார். புலம் பெயர்ந்தவனின் வேதனையும் இரசிப்பும் கண்ணீரும் மெல்லிய புன்னகையும் நம்பிக்கையும் கலந்து இக்கவிதையில் வெளிப்படுகிறது. இத்தொகுப்பில் உள்ள மிகச் சிறந்த கவிதைகளில் இதுவும் ஒன்றாகும்.

தலைப்புக் கவிதை

நூலின் தலைப்புக் கவிதையான திட்டிவாசல் பெண்ணொருத்தி சோகத்தின் உச்சத்தைத் தொட்டுக் காட்டும் கோட்டோவியம் ஆகும். ஒரு பெரிய வீட்டில் திட்டிவாசலை மட்டும் திறந்து வைத்துக் கொண்டு ஒரு இளம்பெண் அமர்ந்திருப்பாள். அந்த வீட்டுக்குள் ஈரல் குலை கெட்டு ஒருவன் வாந்தி எடுத்துக் கொண்டு இருப்பான். அவன் குடித்து குடித்துக் குடலைக் கெடுத்துக்கொண்ட அவளது கணவன் ஆவான். அவனுடைய சுகவீனத்தை அறிந்த உறவினர்கள் அங்கு வந்து சூழ்ந்து கொண்டு ஆளுக்கு ஆள் தனக்குத் தெரிந்த ஒரு வைத்தியத்தைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அவனைச் சுற்றி உட்கார்ந்து அவனைத் தாழ்த்திப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்க விரும்பாத இவள் திட்டி வாசல் அருகே வந்து உட்கார்ந்து கொள்வாள்.

இனி தன்னுடைய வாழ்க்கை எப்படி அமையப்போகிறதோ என்ற கவலையில் அவள் சோகத்தில் சுருண்டு அமர்ந்திருப்பாள். பின்பு அந்த வீட்டில் மனிதர்களுடைய குரலோசைக் கேட்கவில்லை. சில நாட்கள் கழித்து அந்த திட்டிவாசலும் திறக்கப்படவில்லை. அங்கு வந்து சூழ்ந்திருந்த மனிதர்கள் அவன் அடங்கியதும் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டனர். அவள் எங்கு போனாள் என்பது தெரியவில்லை. ஆனால் அவள் போன பிறகும் கூட ஊரார் அந்த வீட்டைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வீடு ஒரு விவாதப் பொருள். ஆனால் அவளுக்கோ தன் வீடு தான் வாழ்க்கை. அதையும் விட்டு தற்போது நீங்கிச் சென்று விட்டாள்.

இன்னொரு நாள்

திட்டிவாசல் திறக்கப்படவில்லை

ஆனாலும் வீட்டைப் பற்றிய பேச்சு

என்ற வரிகளின் சோகப் பெருமூச்சோடு இக்கவிதை முற்றுப்பெறுகிறது.

இத்தொகுப்பில் மனித உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் பல கவிதைகள் ஆங்காங்கே சுவை கூட்டிச் செல்கின்றன.

குழந்தைக் கவிதைகள்

குழந்தை தன் வீட்டில் நான்கு கோடுகள் போட்ட நோட்டில் எழுத முயன்று சிரமப்படும். ஆனா ஆவன்னா அம்மா ஆப்பிள் ஆடு போன்றவற்றை எழுதும். ஆனால் அவர்களின் வீட்டு சுவற்றில் அது சுதந்திரமாக படம் வரையும். படம் வரைவது குழந்தைக்கு மகிழ்ச்சியான செயல். நான்கு வரிகளுக்குள் எழுதுவது கட்டுப்படுத்தப்பட்ட செயல் ஆகும். குழந்தையின்

ஆசைப்படி அதனை சுதந்திரமாக எழுத விடுவதும் படம் வரைய விடுவதும் குழந்தை வளர்ப்பில் எத்தனை முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டும் கவிதையாக 'பாடம்' என்ற கவிதை அமைந்துள்ளது.

குழந்தை பற்றிய கவிதைகளில் 'விளையாட்டு' என்ற கவிதை குழந்தைக்கு இயற்கையே துணை; அது இயற்கையோடு இணைந்து தன்னுடைய பொழுதைக் கழிக்க கற்றுக்கொள்ளும்; அதற்கு சலிப்பு என்பதே கிடையாது;

மாலைச் சூரியனின்

காலடியில் விழும் நிழல்

பார்த்து விளையாடும்

குழந்தைக்குத் தனிமை ஏது

என்ற கவிதை நான்கு வரியில் குழந்தை பற்றிய கவிஞரின் புரிதலைக் காட்டுகிறது. குழந்தையின் உளவியலை உற்றுநோக்கி அறிந்த உயர்வையும் சுட்டுகின்றது.

'இசை' என்ற தலைப்பில் அமைந்த குழந்தை பற்றிய கவிதை ஒன்றில், திருமணத்திற்குப் பரிசாக வழங்கப்படும் கடிகாரங்கள் இயங்காமல் போனதும் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்களாக மாறிவிடுவதால் அதன் பின்னர் காலை வேளையில் அடுத்த வீட்டுக் குழந்தையின் அதிகாலைச் சிணுங்கலே இவர்களை எழுப்பும் மணியோசை ஆகின்றது.

'அரும்புதல்' என்ற கவிதை முன்னாடிச் செல்லும் மகிழ்வுந்தில் வெளியே கை நீட்டியபடி செல்லும் குழந்தைகளின் சிறு கையைப் பாடுபொருளாகக் கொண்டது.

கைவிசிறுகின்ற

சின்னஞ்சிறு விரல்களில்

செஞ்சாந்து நகங்களில்

அரும்பி

வண்ணக் கண்ணாடி குடுவையெனத்

ததும்பும்

அந்தி மனசு

என்ற வரிகள் அரும்புகளின் கைவிரல்களைப் பார்க்கும்போது பார்ப்பவரின் மனதில் மகிழ்ச்சி அரும்புகிறதை உணர்த்துகின்றன.

காதல் கவிதை

காதல் பற்றிய கவிதைகளும் கவிஞரின் பாடுபொருளாகி இத்தொகுப்பில் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று 'எதிர்வு' என்ற கவிதை ஆகும். இது காதலின் ஆழத்தையும் ஆபத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இருவரும் கருத்தொருமித்து காதலித்த பிறகும் கூட காதல் பாதையில் சில புதைகுழிகளைக் காண முடிகிறது என்ற எதார்த்தத்தை 'எதிர்வு' என்ற கவிதை உணர்த்துகின்றது.

புரிதலின் ஆழம்

பற்றித் தொடர்ந்தாலும்

கிடைக்கின்றன

கண்ணீர் கோடுகள்

நடப்பில்

மங்கலக் குறிகளோடு

தழுவிக் கொண்டாலும்

சில தருணங்களில்

எதிர்கொள்ள வேண்டிய பாதையில்

புதைகுழிகள்

என்ற கவிதை காதல் என்பது திருமணத்தில் மங்கலக் குறிகளோடு இணைந்த பிறகும் கூட அது மலர்ப் படுக்கையாக இருப்பதில்லை; சிலவேளைகளில் முட்கள் நிறைந்த பாதையாகவும் தோன்றுகிறது என்ற நடப்பியல் உண்மையை வாசகருக்கு உணர்த்துகிறது.

'வடு' என்ற கவிதை வாழ்க்கையின் மகிழ்ச்சியை எண்ணிப் பார்த்து நினைவுகூரும் வாசனைக் கவிதையாக இடம்பெற்றுள்ளது.

பச்சை மண் கலயத்தில்

நுழைந்த சிறு பாம்பு குட்டி

உன் நினைவை அழைக்கின்றது

வற்றி காய்ந்த கள் குடத்தைத்

தழுவிக் கிடக்கும்

சிறு துளிகள் சொல்லும்

அந்த புளிப்பின் வாடை

என்ற கவிதை வாழ்க்கையின் வசந்த கால வாசனையைப் பாடுகிறது.

வறட்சியின் பாடல்கள் என்ற முதல் பதிப்பில் நூலின் இறுதியில் கவிஞர் அளித்திருக்கும் 'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற பகுதி

மகுடத்தில் பதித்த மாணிக்கத்தை ஒத்ததாகும். கவிதையில் எந்த சொல்லும் வெற்றுச் சொல் அல்ல; அனைத்தும் பொருள் உடையனவே என்ற தன்னறிவிப்பும் தன்னம்பிக்கையும் கவிஞனுக்கு உரிய கம்பீரத்தைப் பறை சாற்றுகிறது.

நூலின் முன் பகுதியில் **‘ஒரு மகாமகம் தாண்டியும் திட்டிவாசல் பெண்ணொருத்தி’** என்ற தலைப்பில் கவிஞர் திட்டி வாசல் பெண்ணொருத்திக்கு கொடுத்த முன்னுரை அவர் நடந்து வந்த பாதையும், ஆக்கமும், ஊக்கமும் அளித்த நண்பர்களும் குடும்பத்தினரும் பற்றி விரித்துரைக்கிறது. நன்றி மறப்பது நன்றன்று என்ற அவரது நற்பண்பையும் தெற்றெனக் காட்டுகிறது.

பன்னிரு ஆண்டுகளுக்குப் பின்னர் பூத்த குறிஞ் பூவாக கவிஞர் இந்த ‘திட்டிவாசல் பெண்ணொருத்தியைக்’ காண்கிறார். இவ்வுரைகள் இரண்டும் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் உரைநடை அழகை உணர்த்துகின்றன. அவர் கவிஞர் மட்டுமல்ல நல்ல கட்டுரையாளரும் கூட என்பதை இவ்விரு பகுதிகளும் எடுத்துக்காட்டுகின்றன. இத்தகு திறமைகளை மதித்து போற்றியே மலாய் பல்கலைக்கழகமும், தாய் தமிழ் அமைப்பும் இணைந்து மலேயா நாட்டில் அவருக்குத் **‘தமிழ் இலக்கியச் செம்மல்’** விருதை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளன.

கவிஞருடைய பூ மரநிழல், திட்டி வாசல் பெண்ணொருத்தி, நேற்றின் பாதங்கள், தஞ்சைப் பெருவுடை நிலம், உன்னோடு உரையாடுதல், காதலின் மொழி, அப்பாவின் நூலகமும் அழியாத ஓவியங்களும் கட்டுரைத் தொகுப்பு எனப் பெருகி கொண்டே இருக்கும் படைப்புகள் அனைத்தும் தமிழ் இலக்கியத்தின் கருத்துக் கருவூலங்கள் ஆகும். இவை திருச்சி, கோவை கல்லூரி மாணவர்களுக்கு பாடமாக

வைக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர்கள் இவரது படைப்புகளில் தமிழ்த்துறையில் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னோடு உரையாடுதல், காதலின் மொழி என்ற ஐந்து கவிதைத் தொகுப்புகள் நூலாசிரியரால் ஆங்கிலத்தில் The shade of the flowering tree, Songs of Dryness, Speaking with you, language of Love, என ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சென்னை, எமரால்டு பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன.

2. பல்வகைப் பாடுபொருள்

'மண்ணிலிருந்தும் மக்களிடம் இருந்தும் ஒவ்வொரு நாள் வாழ்விலிருந்தும் உற்பத்தியானவை என்று முத்தமிழ் விரும்பியின் கவிதைகளை கவிஞர் இளஞ்சேரல் பாராட்டுகிறார். 'வாழ்வு இயற்கை முதலியவற்றைப் பொதுமைப்படுத்திக் கற்பனை விண்ணில் சிறகு விரிப்பதை ஒதுக்கிவிட்டு அன்றாட வாழ்வின் தடங்களிலிருந்து கவிதைகளைக் கண்டெடுத்து தன் கூர்மையான மொழிநடையில் நமக்குத் தருகிறார் முத்தமிழ் விரும்பி' என்ற கருத்து இவருடைய கவிதையில் பலவகையான பாடுபொருள்கள் இடம் பெற்றிருப்பதையும் தனி மனிதனின் உணர்வுகள் கவித்துவம் பெற்று கவிதை ஆக்கப்பட்டிருப்பதையும் நமக்கு உணர்த்துகின்றன.

திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதை நூலில் தனிமனித உணர்வுகள் பாடுபொருளாகி உள்ளன. . இந்நூலில் நினைவுகள், பயணம், மரணம், ஏமாற்றம், எதிர்பாராத தர்மசங்கடம், தேடல், இனப்பற்று, மனம் அலைபாயும் நிலை, தடுமாற்றம், கவிதை எழுதுவதற்கான உந்துதல், காதல் மற்றும் காதல் கனவுகள் போன்றவை கவிதை உருப் பெற்றுள்ளன. இவற்றை நாம் ***சில அத்தியாயங்கள், தொகுத்தவற்றுள், எதிர்வு, வேறுவேறு, முடுக்கம், மூட்டம், ஆழி துரும்பென, இந்நேரம், இன்றைய முன்னிரவு, களம், தனிமை, இரவுப் பாடல், பதிவுகள், தோழமை*** *போன்ற கவிதைகளில் காணலாம்.*

பயணம்

*பயணத்தின் போது ஏற்பட்ட உணர்வுகளை கவிஞர் **சில அத்தியாயங்கள்** என்ற பெயரில் ஒரு கவிதை ஆக்கித் தந்துள்ளார். இந்நீண்ட கவிதையில் முதல் பகுதி பயணத்தின்போது ஒவ்வொருவருடைய செயல்பாட்டையும் விளக்குகின்றது. அடுத்தப் பகுதி பயணத்திற்கு மறுநாள் நடைபெறும் வரவேற்பில் அங்குள்ள வீட்டில் நடந்த எதிர்பாராத நிகழ்வுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. மூன்றாவது பகுதி ஆதிமனிதனின் பயணத்தைக் குமரிக்கண்டத்தின் வரலாற்று நிகழ்வைச் சுட்டிக்காட்டுகின்றது. முதல் பகுதியில்*

அசைந்து கொண்டிருக்கும்

தொடர்வண்டி

புத்தகத்தைத் திறந்தபடி

படிக்காமல் இருக்கிறார். அவர்

இவரும்

மூடிய புத்தகத்தை மடியிருத்தி

தட்டியபடி படித்துக் கொண்டிருக்கிறார்

முகங்களின் வரிகளை.

என்று பயணம் தொடங்குகிறது . புத்தகத்தைப் சும்மா கையில் வைத்துக்கொண்டு அதனைப் படிக்காமல் எதிரே இருப்பவர்களின் முகத்தைப் படிக்கின்ற ஒரு பயணியைப் பற்றியதாக இக்கவிதை தொடங்குகின்றது. அதன் பிறகு ஒருவர் படுக்கையை விரித்ததும்

எல்லோரும் தாமும் படுக்கலாம் என்று தங்களது படுக்கைகளை விரித்துப் படுத்து உறங்குகின்றனர்.

நீல விளக்கொளியில் தடதடத்து

விசிறி காற்றில் பறக்கின்றன.

இரவைப் பயிலும் பக்கங்கள்

என்ற வரிகளில் புத்தகமே இப்போது இரவை வாசிப்பதாக கூறியதால் கருவியே கருத்தாவாக மாறி விட்டதைக் காண்கிறோம்.

சில அத்தியாயங்கள் கவிதையின் இரண்டாம் பகுதி இப்பயணத்தை நிறைவு செய்துகொண்டு திரும்பும் பயணியை வரவேற்கக் காத்திருக்கும் வீட்டினரின் முன்னேற்பாடுகளை விவரிக்கிறது. அங்கிருக்கும் மேசைக் கடிகாரம், அவரது அலுப்பைப் போக்கும் குளிர் நீர் தரக்கூடிய மூன்று கதவுகளைக் கொண்ட குளிர் சாதனப் பெட்டி ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. அடுத்த நிகழ்வு தான் வாசகர் எதிர்பாராதது

அங்கே குளிர்காய்ச்சல், பேய் மழை

உடைந்த கண்மாய், ஊரெல்லாம் வெள்ளம்

சொந்த வெள்ளாமை,

மூழ்கும் பயிரில்

அப்பா அம்மா கண்ணீர் மணிகள்.

பயணத்தின் தொடக்கம் அருமையாக இருந்தது; முடிவு சோகமாகிவிட்டது. பலரது வாழ்க்கையும் இப்படித்தான் என்பதை சொல்லாமல் சொல்கிறார் கவிஞர். பயணம் புறப்படும் பொது இருக்கும் தெளிவும் நிறைவும் பயணிகள் போய்ச் சேரும்போது இருப்பதில்லை.

மூன்றாம் பகுதி குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியான நாஞ்சில் நாட்டில் கடற்கோள் ஏற்பட்ட போது மனிதன் வடக்கு நோக்கி நகர்ந்தான். அப்பயணம் வாழ்வா சாவா என்ற கேள்வியோடு தொடங்கியது. கடற்கோளில் பிழைத்தோர் உயிர் வாழ்தல் வேண்டி வடக்கு நோக்கி புலம் பெயர்ந்தனர். இதன் சோகத்தை

நெஞ்சில் நாடனின் குமரி நில

நெடுங்கதை மனிதனாய்ப் பிரச்சனைகளோடு

பயணம் போனாலும்

இருப்புப் பாதை எங்கும் நீளும்

வேரடி சித்திரங்கள்

என்று மனிதனின் உள்மன உணர்வுகளைக் கவிஞர் வேரடி சித்திரங்கள் எனப் புனைந்துரைக்கிறார். இச்சித்திரங்கள் பிறந்த நிலத்தைப் பற்றியவை. புலம் பெயர்ந்தோருக்கு இவை வேர்களைப் போலப் பிறர் அறியாமல் உள் மனதில் மறைந்திருக்கும்.

ஏமாற்றம்

திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதை நூலில் **எதிர்ப்பு** *மற்றும்* **வேறு வேறு** *என்ற கவிதைகள் மனிதனின் எதிர்பார்ப்புகளை மீறிய ஏமாற்றத்தைப் பதிவு செய்துள்ளன. எதிர்ப்பு என்ற கவிதை நன்கு புரிந்து பழகி ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டு மங்கலக் குறிகளோடு வாழ்க்கையைத் தொடங்கிய பிறகும் கூட பயணப்பட வேண்டிய பாதையில் புதைகுழிகள் இருப்பதைக் கண்டு ஏமாற்றம் அடைகின்றது.*

புரிதலின் ஆழம்

பற்றித் தொடர்ந்தாலும்

கிடைக்கின்றன.

கண்ணீர் கோடுகள் .

நடப்பில்

மங்கலக் குறிகளோடு

தழுவிக் கொண்டாலும்

சில தருணங்களில்

எதிர்கொள்ள வேண்டிய பாதையில்

புதைகுழிகள்.

என்று வாழ்க்கை எவருக்கும் மலர்ப் பாதை அன்று; அதில் கல்லும் உண்டு; முள்ளும் உண்டு; என்ற கருத்தை மெய்ப்பிக்கின்றது.

‘காதலர் இருவர் கருத்தொ ருமித்து

ஆதரவு பட்டதே இன்பம்

எனத் தொடங்கும் வாழ்க்கைப் பயணத்திலும் சில புதைகுழிகளை எதிர்கொள்ள நேரிடலாம் என்ற எச்சரிக்கை, கவிதை வாசிப்போருக்கு வாழ்வின் நிதர்சனத்தைக் காட்டுவதாக அமைகின்றது. கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள், நடப்பியல், உணர்வுப் பரிமாற்றம் அல்லது ஏக்கப் பதிவுகளாக மட்டுமல்லாது இவ்வாறு எச்சரிக்கைக் கீற்றுகளாகவும் விளங்குகின்றன.

எதிர்வு என்ற இதே தலைப்பில் அடுத்து வரும் கவிதையில் ஒரு டீக்கடையில் சிவனே என்று நின்று டீ குடித்துக் கொண்டிருக்கும் இளைஞன் முகத்தில் ஒருவன் சிகரெட் புகையை ஊதிச் செல்கிறான். இந்தக்

கொடுமையை எங்கே போய் சொல்வது? என்று அவ்விளைஞன் வருந்துகிறான். மழை விழும் நேரத்தில் கதகதப்புக்காக ஒரு கசப்பு தேனீரை குடித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஒருவன் வந்து முகத்தில் புகையை ஊதும்போது நாவின் கசப்புடன் முகத்திலும் மனதிலும் சேர்ந்து ஒரு கசப்புணர்ச்சி தோன்றுகிறது. இது போன்ற எதிர்பாராத சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழக்கூடும் இதற்கெல்லாம் கோபித்துக்கொண்டும் கொந்தளித்துக் கொண்டும் இருப்பது எதற்கும் உதவாத செயலாகிவிடும் என்ற தன் உணர்ச்சியை இக்கவிதையில் கடைசியில் ஒரு படிப்பினையாகக் கவிஞர் பதிவு செய்கிறார்.

காத்திருப்பின் சுவரெங்கும்

பிளாஸ்டிக் இலைகள்

படர்ந்திருக்க

இலை தின்ற வெள்ளாடாய்க்

காலம்

என்று காலத்தை வருணிக்கிறார்.

கவிஞர் வெள்ளாடு என்ற படிமத்தி மூலம் காலம் நடந்தவற்றை தன்னுள் அசை போட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்குச் சுட்டிக்காட்டுகிறார். காத்திருப்போருக்கு வெறும் பிளாஸ்டிக் இலைகளே கண்ணுக்குத் தெரிகின்றன. அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடிய பசுமை கண்ணுக்குத் தென்படவில்லை. பழைய பசுமையை எல்லாம் தின்று தீர்த்த வெள்ளாடு அந்தப் பசுமையைத் தன்னுள் வைத்து அசை போட்டுக் கொண்டிருக்கிறது. எனவே எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவேறும் என்று நினைத்துக் கொண்டிராமல் திடீர் மாற்றங்களைச்

சகித்துக் கொள்ளப் பழக வேண்டும் என்பது கவிஞரின் கருத்தாக இக்கவிதையில் உணர்த்தப்படுகிறது.

*'**வேறுவேறு**' என்ற கவிதை இன்னொரு வகையான எதிர்பாராத தாக்குதலையும் ஏமாற்றத்தையும் நம் முன் நிறுத்துகிறது குவிந்த கைகளுக்குள்ளும் ஒடுங்கிய படை இருக்கும் என்றார் வள்ளுவர், அதுபோல*

குலுக்கிக் கொண்ட கரங்களிலிருந்து

கிளைத்தது ஒரு கொலைக்கரம்

என்று இக்கவிதை ஓர் அதிர்ச்சித் தகவலுடன் நிறைவடைகிறது. கவிஞரின் முத்தாய்ப்பான வார்த்தைகளும் வரிகளும் மொத்தக் கவிதைக்கும் சட்டென்று உயிரூட்டும் இயல்புடையன.

கவிதையின் முதல் பகுதி குளிர்ச்சியாகத் தொடங்குகிறது.

கோடை மழை என

குளிர் ஏற்றிய இரவாய் இருந்தது.

வாக்கு யுத்தம் நடத்தாத

உரையாடலை

நாம் நிறைவு செய்த பொழுது

வாக்கு யுத்தம் எதுவும் நடைபெறாததால் கோடையில் பெய்த மழை அளித்த குளிர்ச்சி எங்கும் நிறைந்திருந்தது; இத்துணை அருமையாக இருந்த அந்தப் பொழுதில் அந்த உரையாடலின் நிறைவில் 'மென் படலத்தில் விழுந்த துளை போல' திடீர் வெப்பம் அதிகரித்தது. ஓசோன் படலத்தில் ஏற்பட்ட துளை உலகமெங்கும் வெப்பத்தைக் கூடுதல் ஆக்கியது போல குலுக்கிக்

கொண்டிருந்த அன்புக் கரங்களில் இருந்து ஒரு கொலைக்கரம் உருவானது, என்கிறார்.

அன்பு என்பதன் நிறைவு நிலை அன்பாகவே இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அந்த எதிர்பார்ப்பும் ஒருவருக்கு இருக்கக் கூடாது. அன்பு அன்பாகவே நிறைவு பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மாறி அங்கு ஒரு கொலைக் கரம் நீண்டு ஏமாற்றமும் ஏற்படலாம் என்கிறார் கவிஞர்.

மரணம்

*மரணம் என்ற பொருளை பல்வேறு கவிஞர்களும் தொட்டுச் சென்றிருந்தாலும் கவிஞரின் பார்வையும் அணுகுமுறையும் சற்று மாறுபட்டதாகத் தோன்றுகிறது. 'உலகளாவிய நவீன படைப்பாளிகளுக்கு மரணம் நம்பிக்கை இல்லாத பொருள். இருந்தாலும் அதை ஒரே நேர்கோட்டில் சந்திக்கின்ற இடம் சூழல். வியக்க வைப்பதாய் மகிழ்ந்துள்ளனர்' என்று இந் நூலின் முன்னுரையில் கவிஞர் இளஞ்சேரல் குறிப்பிட்டுள்ளார். '**தொகுத்தவற்றுள்**' என்ற கவிதை மரணச் செய்தியைக் கேட்டு மனம் அடையும் பதைபதைப்பை எளிய சொற்களில் கவிதையாக்குகிறது.*

சேதி கேட்டபோது

இறப்பு பொதுவென்று எண்ணி

விலகினாலும்

விரலிடுக்கில் சுடும் மறுமுனையாக

நெருப்பூட்டுகிறது;

முந்தாநாள் சிதையின்

துகள்கள்

இக்கவிதை மரணத்தைப் பற்றி கேள்விப்படும்போது அது ஒரு சாதாரண தகவலாகத் தோன்றினாலும் கூட பிறந்தவர் அனைவரும் இறப்பது உறுதி என்று ஒரு பொதுவான விதியைக் குறிப்பதாக இருப்பினும் சிறிது நேரத்தில் அந்த எண்ணம் மனதுக்குள் புகைந்து புகைந்து விரலிடுக்கில் இருக்கும் சிகரெட் தானாக புகைந்து சுட்டது போல சுரீரென்று சுட்டு மரணபயத்தின் எதார்த்தத்தை உணர்த்துகிறது.

ஒருவருக்கு மரணத்தைப் பற்றிய யதார்த்தம் முந்தாநாள் கலந்து கொண்ட இறப்புச் சடங்கின் நினைவு மூலமாகச் சுட்டப்படுகின்றது. மரணச் செய்தியைக் கேட்டு சில நிமிடங்கள் கழித்து மரணத்தின் எதார்த்தம் உணரப்படுகின்றது.

மனதுக்குள் தொகுத்த நினைவுகள்

அவ்வப்போது

முன் பின்னாக

வந்து செயல்பட்டு

இன்றைய நிகழ்வுக்கு

முந்தைய நிகழ்வு ஒன்றைக் கொண்டுவந்து ஒப்பிட்டுக்காட்டி உலக உண்மையை உணர்த்திச் செல்கின்றன. கவிஞர் இவ்வாறு நடப்பியல் எதார்த்தத்தை முன்னும் பின்னுமாக இணைத்தும் பிரித்தும் உணர்த்தியும் உணர்ந்தும் செல்வது நினைவுகளின் கடமையாகும் எனத் தெள்ளத் தெளிவாகப் பதிவு செய்திருக்கிறார்.

தேடல்

மனித மனத்தின் தேடல் முடிவற்றது. எப்போதும் மனம் எதையாவது தேடிக் கொண்டே இருக்கும்.

முடுக்கம் என்ற தலைப்பில் இத் தேடல் பாடுபொருள் ஆகியுள்ளது.

ஒற்றையடி பாதையின்

நிறைவில் திரும்பிய

இரு தடங்களில்

எது எனது/

நிற்காமல் நடக்கக்

கண்டேன்

பெருந்தடம்.

என்ற கவிதை மனிதனின் தேடல் எந்த பாதையில் செல்வது என்ற கேள்வியை எழுப்பும்போது; அவன் இடையில் தான் எங்கும் நின்று விடாமல் தொடர்ந்து செல்லும் பாதை எது என்று தனக்குள் கேட்கிறான். தன் பயணத்துக்குரிய பாதையை அவன் திட்டமிடும் போது அவன் இடையில் எங்கும் நிற்காமல் தடையின்றித் தொடர்ந்து செல்ல வேண்டிய பெருவழியைக் கண்டுகொள்கிறான். அதனையே தன்னுடைய பாதையாக முடிவு செய்து அதில் தனது பயணத்தைத் தொடர்கிறான்.

முடுக்கம் என்ற இக்கவிதை வாழ்க்கை என்னும் பயணத்தில் பாதையை முடிவு செய்வதன் தீவிரத்தை உணர்த்தும் கவிதையாகும். இதுவரை அவனுடைய பயணம் ஒற்றையடிப் பாதையில் இருந்து வந்தது. இப்போது ஒற்றையடிப்பாதை முடிவடைந்ததும் அவன் தன் முன் இருக்கும் இரண்டு பாதைகளைப் பார்க்கின்றான். அதில் ஒன்று தடங்கலற்ற பெரும் தடமாக நீண்டிருப்பதை அவதானித்து அப் பாதையையே

தனதாக முடிவு செய்கிறான். இவ்வாறான பாதையும் பயணமும் தனது தனி வாழ்வுக்கு மட்டுமல்ல; சமூக வாழ்வுக்கும் ஏற்றது என அவன் தீர்மானிக்கிறான்.

தடுமாற்றம்

மனம் நிலைகொள்ளாது தவிப்பதும் மனதில் தயக்கங்களும் தடுமாற்றங்களும் ஏற்படுவதும் கவிஞரின் பாடு பொருளாகின்றது. ***'ஆழித் துரும்பென'*** *என்ற கவிதை, கடலில் சிக்குண்ட ஒருவன் ஒரு பிடி கிடைக்காமல் ஆழித் துரும்பாக அலைகின்றான். அலைகளால் அலைக்கழிக்கப்படுகிறான். அப்போது அவன் அவளது கண்களையே தன் வாழ்வின் நங்கூரமாகக் கருதிக்கொண்டு அதையே நினைத்து உறுதியாகக் காலூன்றக் கருதுகின்றான். அவன் மனம் கடல் பரப்பின் மேல் பட்டும் படாமல் பறந்து செல்கின்ற கானலம் வேட்டத்துக் கடற்பறவை போல அங்கும் இங்கும் பறக்கின்றது. மீன் கிடைக்கும் என்று அப்பறவை விரைந்து பறந்து கடலின் மேற்பரப்பில் உரசிச் சென்றாலும் அதற்கு இரையாக வேண்டிய மீன்கள் பவளப் பாறைகளுக்குள் பதுங்கி விடுகின்றன.*

அலைபாயும் மனது ஏதேனும் ஒரு மரக்கலம் கிடைத்தால் கரையேறி விடலாம் என்று துடித்தாலும் இந்த கடலினுள் கிடந்து ஊறுவதையும் கடற்பாசி தன் மேனியைத் தழுவுவதையும் மிகவும் இரசிக்கின்றது. கண்கள் மட்டும் கானல் வரிகளாக நங்கூரத்தைத் தேடுகின்றது. விரைந்து கரை அடையாவிட்டால் கடலுக்கு இரையாகி நுரையாக நேரிடும் என்ற அச்சமும் தோன்றுகிறது. இருப்பினும்

கண்கள் நாடும் குளிர்

உனது நங்கூரம்

என்று கவிதை முடியும்போது அந்தக் கண்களின் பார்வை கானல் வரிகளைத் தான் கண்டு கொண்டிருக்கிறதே தவிர நிஜத்தை அல்ல என்ற ஏக்கமும் இக்கவிதையில் தென்படுகிறது.

உண்மை வாழ்க்கையில் சில பழக்க வழக்கங்களில் சிக்கி மீள முடியாமல் தவிப்போர் ஆழித் துரும்பென அலை பாய்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு கானல் வரிகளாய்த் தான் போய்விடுகின்றன. கானல் வரி எனத் தெரிந்து தான் அதை நாடுகின்றனர். இந்தத் தவிப்பையும் தடுமாற்றத்தையும் கவிஞர் அழகுற கவிதை ஆக்கியுள்ளார்.

கானலம் வேட்டத்து

கடற்பறவையென

உறக்கம் கலைந்து

மேலே மிதக்க

அலைகளில்

நீந்தும் குதிரைகள்

பவளப்பாறைகளில் பதுங்கும் மீன்கள்

ஏதாவது ஒரு மரக்கலம்

கண்பட்டால்

கரை ஏறலாம்

இல்லையேல் விரைத்து

இரையாகி நுரையாகலாம்.

என்ற கவிதை வரிகளில் சொல்லழகும் சந்த நயமும் உண்டு. இவை அடுத்தடுத்து வரும் அலைகளைப் போல சரசரவென்று வார்த்தைகளாய் வந்து விழுகின்றன. அலை அலை என வரும் அலைகளைப் போல வார்த்தைகளால் வனையப்பட்டுள்ளன.

கானல் வரிகளாய்

கண்கள்

நாடும் குளிர் உனது நங்கூரம்

என முடியும் போது கண்களின் நாட்டம் கானல் வரிகளைத்தான் தேடுகின்றது என்ற உண்மையும் நாடும் குளிரான நங்கூரம் கிடைக்குமா என்ற ஐயமும் கவிதையின் நிறைவில் வாசகனுக்கு ஏக்கத்தையும் எதிர்பார்ப்பையும் ஊட்டுகிறது.

மனதின் தடுமாற்றத்தினைப் பாடு பொருளாகக் கொண்ட இன்னொரு கவிதை '**இந்நேரம்**' என்பதாகும். ஒரு பயணத்தை அக்கறையோடும் கவனத்தோடும் மேற்கொண்டாலும் ஏதாவது ஒரு இடத்தில் தடுமாறி விடுகிறோம்; அதற்கு அங்கு ஒளியற்ற இருட்டு இருப்பதே காரணமாகிவிடுகிறது என்று இக்கவிதை தடுமாற்றத்துக்கு காரணம் 'இருள்' என்ற முடிவையும் அளிக்கிறது.

இருளும் குளிரும் பின்னிப் பிணையும்போது மிகுந்த கவனமாக இருப்பதாக நாம் கருதிக் கொள்வதும் கூட பொய்யாகிப் போய்விடுகிறது. இந்த யதார்த்த உண்மையை எவ்வித போலித்தனமும் இல்லாமல் கவிஞர் பின்வரும் வரிகளில் அளித்துள்ளார்.

உயர்ந்து விரிந்த மரங்களின்

பரப்பில் பிணைக்கிறது

இருளும் குளிரும் ;

இந்நேரத்து இருட்டு

பூக்களின் அருவி எனச் சூழ

எழுகின்ற கீச்சொலிகள்

ஒளியைப் பெயர்த்துச் சொல்ல

முயல்கின்றன.

இவ்வரிகள் இருளும் குளிரும் நிலவும் அடர்ந்த காடுகள் நம்முடைய பயணத்திற்கான பாதையாக விளங்குகின்றன. இந்தப் பாதையில் கண்ணுக்கு ஒளி ஊட்டக்கூடியது பூச்சிகளின் கீச்சொலி மட்டுமே வெளிச்சக்கீற்று பாய்ச்சி பார்வையைப் பாதையில் செலுத்துகின்றன.

ஒருவர் மிகுந்த கவனத்தோடு அந்த இருட்பாதையில் நடந்தாலும் ஏதோ ஒரு முனையில் இடறி விடுகிறது. இவ்வாறு தடுமாறும் போது கால் இடறிவிட்டதே தவிர தான் தடுமாறவில்லை என்பது போல ஒரு போலித் தனத்தோடு இதனை ஏற்றுக்கொண்டு நடமாடுகிறோம். ‘இந்த இடறலும் தடுமாற்றமும் என்னை ஒன்றும் செய்யப் போவதில்லை; இவை எனக்கு ஒன்றும் சிரமமானதல்ல’ என்ற மெத்தனத்தோடு நாம் நம்முடைய பயணத்தைத் தொடர்கிறோம். அப்போது அங்கு ஒரு நெடுஞ்சாலை தென்படுகிறது. இது இந்நேரத்தின் இருட்டு மட்டுமே இதனை அடுத்து ஒளியுள்ள வழி காத்திருக்கின்றது என்ற நம்பிக்கையை அச்சாலை நமக்கு ஊட்டுகின்றது.

தடுமாற்றம் என்பது தற்காலிகமானது. அது ‘இந்நேரம்’ மட்டுமே. தடுமாற்றத்தால் ஒருவர் மனம் கலங்க வேண்டியதில்லை. அதனை எதிர்கொண்டு தொடர்ந்து நடந்தால் பெரு வழிப்பயணம் காத்திருக்கிறது என்ற நம்பிக்கையோடு நடமாடவும்

வாழ்க்கையை நடத்தவும் ஊக்கம் அளிக்கும் வகையில் 'இந்நேரம்' என்ற கவிதை அமைந்துள்ளது.

இனப்பற்றும் இரக்கமும்

கவிஞரின் மொழிப்பற்று, இனப்பற்று ஆகியவை பகிரங்கமாகக் கவிதைகளில் தென்படாவிட்டாலும் 'மூட்டம்' என்ற கவிதையில் இப்பற்று மறைமுகமாகவும் தீவிரமாகவும் உணர்த்தப்படுகிறது. இலங்கையில் தமிழ் மக்களைத் தீயிட்டு கொளுத்திய போது யாழ்ப்பாணம் எரிகிறது என்று தினத்தந்தி நாளிதழ் செய்தி வெளியிட்டது. இலங்கையில் புத்த மதத்தைத் தழுவி வாழும் சிங்களவர்கள் தன்னுடன் வாழும் தமிழர்களைத் தீயிட்டு கொளுத்துவது என்ன நியாயம் ? என்பதைக் கேள்வியாக எழுப்பாமல் தியானத்தில் இருக்கும் புத்தர் இன்னும் அங்கு கண் திறக்கவில்லையோ அவருடைய கருணை பார்வை பௌத்தர்களான சிங்களவருக்குக் கிடைக்காத காரணத்தால் தான் அங்கு நெருப்பு புகைகின்றதோ என்ற ஒரு ஐய வினாவைக் கவிஞர் எழுப்புகிறார்.

இளம்பச்சை குடை விரித்த மரத்தடியில்

வாய் கண்கள் காதுகள் அடைபட

இன்னும் தியானத்தில் இருப்பாரோ

எங்கும் குருதி சொட்டுகள் கூடி

பேராறு ஒன்று புறப்பாடு செய்கின்றது.

கடலிடைத் தீவொன்றின் மீது

நெருப்பு கொடிகள் படர

புத்தம் மறைய

புகைமூட்டம் தெரிகின்றது

என்ற கவிதை வரிகள் தமிழரின் இரத்தம் பேராறாக ஓடுகின்றது. அவர்கள் வாழ்ந்த பகுதி முழுக்க புகை மூட்டம் கவிழ்ந்துள்ளது. பச்சை மரத்தினடியில் கண்மூடி காது அடைத்து தியானத்தில் இருக்கின்றாரோ என்ற ஐய வினா ஓர் இனத்தவர் சார்பாக எழுப்பபப்படும் நீதி சார்ந்த வினா ஆகும்.

கவிஞரின் வினா மென்மையாகத் தோன்றினாலும் வலிமை மிக்கது. செயல்பட வேண்டிய நேரத்தில் செயல்படாமல் கண் மூடி இருக்கும் மதத்தின் மெத்தெனப் போக்குக்கு சாட்டையடி கொடுப்பதாக அமைந்துள்ளது. கடுமையான சொற்களால் எதையும் கரடு முரடாக உணர்த்தாமல் மென்மையானச் சொற்களைக் கொண்டு வலிமையாக உணர்த்தும் கவிஞரின் கவிதைப் பாங்கு பாராட்டுக்குரியதாகும்.

காதல் என்னும் பாடுபொருள்

திட்டிவாசல் பெண்ணொருத்தி நூலில் **களம், தனிமை, இரவுப் பாடல்** ஆகிய கவிதைகள் காதல் உணர்வின் மென்மையையும் வலிமையையும் விளக்குகின்றன. களம் என்னும் கவிதை காதலின் தொடக்கத்தையும் 'தனிமை' அதன் இயக்கத்தையும் 'இரவுப் பாடல்' காதலின் நினைவுகள் தரும் சுகத்தையும் பாடு பொருளாக்கியுள்ளன.

களம் என்னும் கவிதையில் தென்றலையும் நிலவையும் பாட மறுத்த ஒரு களப்போராளி திடீரென காதல் வயப்பட்டதும் வெயில் சூறாவளி மற்றும் சருகுகளில் இருந்து தன்னுடைய கவனிப்பை விடுவித்து பூ செடி களை எனச் சிந்தித்து பூவாளியைத் தூக்கியபடி புதிய செடிகளை நட்டு பராமரிக்கின்றான். ஒரு கட்டத்தில் அவன் காதலில் இருந்து விடுபட்டு விடலாம்

என்று எண்ணும் வேளையில் அச்செடியில் ஒருமுளை துளிர் விட்டு விட்டது. இதுவே காதலின் வெற்றியாக கவிதையின் நிறைவாக அமைந்திருக்கின்றது.

போராளியின் கனத்த நெஞ்சிலும் காதல் கசியும் என்ற கருத்தையும் அவ்வாறு கசிந்த பிறகு அவன் தன் துப்பாக்கியை ஓரத்தில் சாத்திவிட்டு இளமையையும் பசுமையும் இரசிக்கத் தொடங்கி விடுவான். அவனது தோட்டத்தில் பூச்செடிகள் பூக்கும் என்று அவனது இரசனை மாற்றம் அழகுற புனையப்பட்டுள்ளது. அவனுடைய தோழர்கள் அவனது காதலை விரும்பாமல் வெட்டிவிடத் துணியும் வேளையில் அவனுக்குள்

இருந்த பூவிதழ்கள் வருட

கான்முளை நெருங்கிக் கொண்டிருக்கிறது

என்ற முடிவு; முடிவே அல்ல அது அவனுடைய வாழ்வின் தொடக்கம் என்பதை உணர்த்திவிட்டது.

ஒன்றின் முடிவில் இன்னொன்று தொடங்குகிறது என்பதையும் அவனுடைய களப்பணியின் முடிவில் காதல் வாழ்வு தொடங்கியது;

தென்றலையும் நிலவையும்

பாட மறுத்திருந்தவன்

அவளது கால எல்லையைத் தொட்டவுடன்

கையில் இருக்கும் நீள் துப்பாக்கியை

ஓரம் சார்த்தி

வெயிலையும்

சூறாவளியில் பறக்கும் சருகுகளையும்

கவனிப்பில் இருந்து விடுவிக்கிறான்

என்ற வரிகள் காதல் அவனுக்குள் ஏற்படுத்திய இரசாயன மாற்றத்தை இரசவாத வித்தையைக் காட்டுகின்றன. மேலும்

நீளும் களத்தில்

காய்கள் மோதி

முனைகள் நெளிந்து

புத்துருக்கொண்டன

என்பது அவனுடைய மனதுக்குள் ஏற்படும் மாற்றத்தை ஒன்று உருச் சிதைந்து இன்னொன்று புத்துருக் கொள்வதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

களைக் கொத்தி பூவாளி தூக்கி

செடி ஒன்று நட்டு நிமிர்கிறான்

என்ற வரிகள் அவன் காதலில் துணிவுடன் இறங்கி புதிய வாழ்க்கைக்குள் பிரவேசிப்பதை உறுதி செய்கின்றன. அவனுக்குள் காதல் பிரவேசித்ததும் தோழர்கள் அவனை விட்டு விலகி விட்டனர். அவர்கள் நேற்றைய தோழர்கள் ஆகிவிட்டனர். அவனைக் கூர்மையாகக் கவனித்து இவனைக் காதலில் விழாத வண்ணம் மீட்க வேண்டும் என்று அல்லது இவனைக் கை நழுவி விட வேண்டும் என்று முடிவு செய்த போது அவனுக்கும் அந்த தோழர்களின் தொடர்பு தேவைப்படாத வகையில் இவனுக்கு ஒரு புது தோழமையாக அவனுடைய காதல் அரும்பு விட்டு மலரத் தொடங்கிவிட்டது.

நேற்றைய தோழர்கள்

கூர்மை கொள்ள களம் இவனிடமிருந்து

கைநழுவுகிற வேளையில்

வியர்வை வழிய

பூவிதழ்களை வருட

கான்முளை

நெருங்கிக் கொண்டிருக்கிறது

என்ற நிறைவு வரிகள் காதல் பூத்து அரும்பி விட்டதை உறுதி செய்கின்றன.

கோடைக்காலத்தின் உச்சி வெயில் பொழுதில் வந்த காதலியின் அழைப்பு பெரும் பாறையை துளைத்தெடுக்கும் கருவியாகி அவனது இதயத்தைத் துளைத்துஅங்கிருந்த காதலைக் கசிய வைக்கின்றது. அந்த ஈரக்கசிவில் அவன் இனி அடுத்த அழைப்பு எப்போது வரும் என ஏங்கிக் கிடக்கின்றான். இந்தத் தனிமையும் அப்போது அவளிடமிருந்து வந்த அழைப்பு தந்த இனிமையும் காதலின் கருப்பொருளாகி உள்ளன.

உக்கிரப் பொழுதில்

வந்த உனதழைப்பு

தொலைவைக் கடந்து

கானகத்துப் பெரும் பாறையைத்

துளைத்தெடுத்த

விற்துளைக்கருவி என

நீர்க்கசிவைத் தருகிறது.

அடுத்த அழைப்பு

எப்போதென ஏங்கி

பதின்மப் பருவ அலைவுகளைக்

குமிழ்களாக்கித் தொடர்கிறது.

என்ற கடைசி வரிகள் காதலின் ஈரத்தை, இனிமையை, தொடரும் சுகத்தை, குளிர்ச்சியை விளக்குகின்றன. மென்மையான காதல் உணர்வுகளின் வலிமையை உணர்த்த விரும்பிய கவிஞர் பெரும் பாறையைத் துளைத்தெடுக்கும் துளைக்கருவி என்ற உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

*காதலின் கனவுகள் ஏற்படுத்தும் விளைவைக் கவிஞர் '**இரவுப் பாடல்**' எனப் பெயரிட்டுத் தருகிறார். முதல் நாள் கனவில் வந்த காதலி மறு நாள் மாலையும் குருதியோட்டத்தில் கலந்து அன்றும் கனவில் வருவாளோ என்ற எண்ணத்தை நட்டு வைக்கின்றாள். மிகப் பெரிய ஆல மரத்தில் செங்கனிகளும் அவற்றை உண்ணும் பசும் கிளிகளும் தங்கள் கூடுகளைத் தொலைத்து ஒன்று கூடி அமர்ந்து இருப்பது குறுந்தாவரம் போல காட்சி அளிக்கின்றது. அதுபோல அவனது மனதில் முந்தைய நாள், கனவில் கண்ட காட்சிகள் செங்கனிகளைத் தின்ற கிளிகளைப் போல பசுமையாகப் பதிந்துள்ளன. இந்நினைவுகளின் சுகம் கூழாங்கற்களைக் காற்சட்டைப் பையில் போட்டுத் துழாவும் குதூகலத்தை அவனுக்குத் தருகின்றது. மேலும் இன்றைய இரவிலும் ஒரு பாடலைப் போன்ற சுகத்துடனும் இனிமையுடனும் நெஞ்சுக்குள் நினைவாகப் புதைந்து தலையணையை ஈரமாக்கி இருக்கின்றது.*

நேற்றிரவு

கனவில் வந்த உன்

இருப்பு இன்று மாலையே

குருதி ஓட்டத்தில்

மீள்நடுகை செய்வித்தன

என்ற வரிகள் இன்று இரவு வருவதற்கு முன்பே மாலைப் பொழுதிலேயே முந்தைய இரவு நினைவுகள் மீள் நடுகை ஆகிவிட்டன. இதனையே

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி

மாலை மலரும் இந்நோய்

என்றார் திருவள்ளுவர்.

நாட்கள் தொலைத்த

விழுதுகளும் கிளைகளும்

பூத்துக்குலுங்கும் ஆலிலையின்

செங்கனிகள் பசுங்கிளிகள்

கூடு தொலைந்து வீற்றிருக்கும்

குறுந்தாவரமாய்

என்ற வரிகள் மரத்தின் அழகினை வண்ணக்கோலம் ஆகக் காட்டுகின்றது. ஆலமரத்தின் சிவந்தக் கனிகளை உண்ண வந்த பச்சைக் கிளிகள் அழகுற வருணிக்கப்பட்டுள்ளன. இந்த வண்ணங்களின் தொடர்ச்சியாக

பல திங்கள் கழித்து

நீர் ஊற்றிக் கொள்ள

கூழாங்கற்களைக் காற்சட்டைப் பையில்

துழாவும் குதூகலம்

என்ற விவரிப்பு சிறு வயது உற்சாகத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது. உவமையும் உருவகமும் மிகத் தேர்ந்த சிற்பியின் கைவண்ணமாக இக் கவிஞருக்கு கவிதையைச் சிற்பமாகச் செதுக்கப் பயன்பட்டுள்ளன.

நிறைவாக

இவ்விரவில்

இப்போது என் பாடல்

ஈரமேறிய தலையணையில்

என முடியும் போது நினைவுகள் கசிந்து தலையணையை ஈரம் ஆக்கிவிட்டன என்ற வரிகள் காதலின் ஏக்கத்தைக் கண்ணில் நீர் கசிய விளக்கிவிட்டன.

நினைவுகள்

*மனிதனின் நினைவுகள் அவனுக்குள் இருந்து செய்யும் இரசவாதம் அவன் மட்டும் அறியக்கூடிய உணரக்கூடிய இரசாயன மாற்றமாகத் திகழும். கவிஞர் இத்தகைய நினைவுகளை வண்ணப் படிமமாக்கி செங்காவி, கரும்பச்சை, வெண்மை என மூன்று வண்ணங்களில் குழைத்து சொல்லோவியமாக்கி உள்ளார். அவரது '**பதிவுகள்**' என்ற கவிதை, நினைவுகள் பற்றிய ஓவியக் கவிதை ஆகும்.*

பன்னெடுங்காலம் முன் வசித்த

இல்லின் செங்கற்சுவரில்

உட்காரும் வெண்புறா

இடிந்து கரைந்த சுற்றுச்சுவரின்

செங்காவி நிறத்தில் ஏறிப் படர்ந்த

கரும்பச்சை பாசியாய்

மீள்கின்றன கிழித்தெறியப்பட்ட

கடிதங்களின் வரிகள்

இக்கவிதையில் கடிதங்களைக் கிழித்தெறிந்து விட்டாலும் அவற்றில் இருந்த வரிகள் மனதை விட்டு அகலாது. அவை மனதில் நாட்பட்ட பாசியாகக் கரும்பச்சை நிறத்தில் பதிந்துவிடும். அந்தப் பாசி படர்ந்த சுவர் இடிந்து கரைந்து செங்காவி ஏறி சிவந்து போயிற்று. இந்த வரிகள் ஒருவரின் மனம் அழியாத நினைவுகளால் கோபத்தாலும், வருத்தத்தாலும் சிவந்து இருக்கிறது என்பதையே காட்டுகிறது. உடைந்து போன மனதுக்கு இடிந்து கரைந்த சுற்றுச்சுவரின் செங்காவி நிறம் உவமையாகின்றது.

அந்தக் கடிதங்களுக்கு உரியவள் இன்னும் மனதில் நிற்கும் அழகிய வெண்புறா. பன்னெடுங் காலத்திற்கு முன் வசித்த வீட்டின் சுவரில் உட்கார்ந்திருந்த வெண்புறா அவளுக்கு உவமையாகின்றது. உவமைகளை மட்டுமே குறிப்பிட்டு உவமேயத்தைக் குறிப்பிடாமல் இருக்கும் இக்கவிதை அணி நயம் மிக்கதாகும். பதிவுகள் என்பது நெஞ்சில் மாறாத நினைவுகளைக் குறித்திருக்க அதனைப் பல வண்ணங்களில் காதலின் கவினோவியமாகக் கவிஞர் தீட்டியிருக்கிறார்.

*‘**தோழமை**’ என்ற கவிதை இருவருக்கிடையிலான பரஸ்பர அன்பு காதலாகப் பரிமளிக்காத போது தோழமையாக மலர்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. இருவரும் வெவ்வேறு முனையில் நின்று ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ளும்போது அது தோழமை ஆகிவிடுகின்றது. அப்போது ஒருவரின் அதிர்வுகள் மற்றவருக்குப் புலனாகிறது. அவரவரின் கருத்துக்கள் தனித்தனியாகவே இருக்கின்றனவே தவிர இவர்கள் கருத்தொருமித்த காதலராக மாறவில்லை. எனவே இதனைத் தோழமை என்ற பெயரில் இருவரின் நிலையை விளக்கி கவிதையாக்கி உள்ளார்.*

கூர்நோக்கு சொல்லவெனில்

நீள் வளைப் பாதையின் சுருளில்

ஒரு முனையில் நீயும்

இந்த முனையில் நானும்

ஒரு வகைப்பாட்டில் மொழியலாம்

ஒரு வட்டப் புள்ளியில்

நாமிருவரும்..

அதிர்வுகள் மட்டுமே புலனாகும்

என்ற கவிதை இருவருக்குள்ளும் ஒன்றைப் புரிந்து கொள்வதில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. இருவரும் வெவ்வேறு அணுகுமுறையில் வெவ்வேறு கோணங்களில் இருந்து ஆராயும் தன்மையை இருவரும் இரு முனையில் நிற்கின்றனர் என்ற கருத்து உணர்த்துகின்றது. இருவரின் அதிர்வுகளும் வெவ்வேறாக இருப்பது இருவருக்கும் புலனாகின்றது. எனவே இவர்களுக்குள் தோழமை இருக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம். மேலும் இவ் ஈர்ப்பு காதலாகிக் கசிந்துருகக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்பதும் இக்கவிதையில் புலனாகின்றது.

கவிஞர் தனி மனித உணர்வுகளை உவமை, உருவகம், படிமம் ஆகிய கவிதை உத்திகளைக் கொண்டு இலக்கிய இன்பம் அளித்துள்ளார். மனிதனுக்குள் ஏற்படும் பல வகையான உணர்வுகள், சிந்தனைகள் ஆகியவற்றைப் பாடு பொருளாக்கி வாழ்க்கைக் குறித்த புதிய நோக்கினையும் போக்கினையும் அவற்றின் தேவையையும் புலப்படுத்தியுள்ளார்.

‘முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் ‘கோட்டோவியச் சித்திரங்கள் எவ்வண்ணமும் இடையூறு செய்யாது அசலான கோடுகள்; கோடுகளில்

அலை நதி போல சொற்களிலேயே அவை விரித்து எழுதப்பட்டுள்ளது' என்ற இளஞ்சேரலின் பாராட்டு இவண் நினைவு கூரத்தக்கதாகும். 'விரும்பியின் படைப்புலகம் தனிக்கிளைக்ளும் புதிய திசைகளும் உடையது. இந்தக் கிளைகள் புதிய திசைகளில் பிரபஞ்ச ரீதியில் விரிந்து பரவியுள்ளதை இந்நூலில் காணலாம். 'கடைசலின் பொழுது தேனிரும்பிலிருந்து சூட்டுப் புகையுடன் பிரவாகமெடுக்கும் வெள்ளைச் சுருள் கம்பி போல உண்மையும் உருவகமும் எழுந்த கவிதைகள்' இவருடையவை எனப் புகழும் கவி இளஞ்சேரலின் வார்த்தைகள் உண்மையும் ஒளியும் நிரம்பியவை ஆகும்.

3. பாசப்பொருளாகிய கிராமியம்

1950 இல் உலக மக்கள் தொகையில் 95 சதவீதம் கிராமங்களில் வசித்தது. இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கையில் ஐம்பது சதவீதம் குறைந்து விட்டது. அடுத்த பத்தாண்டுகளில் 75 சதவீதமாக குறைந்துவிடும் எனக் கணித்தனர். இன்று கிராமங்களில் வசிப்பவர் எண்ணிக்கை 25 சதவீதமாகவும் நகரங்களில் வசிப்பவர் எண்ணிக்கை 75 சதவீதமாகவும் மாறிவிட்டது. கிராமங்களில் பெரும்பகுதி புறநகர்ப் பகுதிகளாக மாறி வருகின்றன. எனினும் கிராமங்களில் பிறந்து வாழ்ந்து வந்த கலைஞர்கள் கிராமிய மணத்தைத் தங்களது கலைப் படைப்புகளின் மூலமாக பாதுகாத்துப் பகிர்ந்து கொள்கின்றனர். தஞ்சையைச் சேர்ந்த கவிஞர் முத்தமிழ் விரும்பிக்கு கிராமியம் என்பது வெறும் பாடுபொருளாக மட்டுமல்லாது அவரது மனதுக்கிசைந்த பாசப் பொருளும் ஆயிற்று.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் பெரும் வறட்சி காணப்பட்டது. மழை பொய்த்து நிலங்கள் பாளம் பாளமாக வெடித்து விட்டன. வேளாண்மை பாதிக்கப்பட்டது. விளைச்சல் இல்லாமல் பஞ்சம் சூழ்ந்தது. நஞ்சை நிலங்கள் கூட தண்ணீருக்குத் தவித்தன. அப்போது கவிஞர் எழுதிய கவிதைகள் ***வறட்சியின் பாடல்கள்*** *என்ற தலைப்பில் நூலாக வெளி வந்தன. பின்னர் அடுத்த சில ஆண்டுகளில் வறட்சி மாறி மகிழ்ச்சி பிறந்தது. இந்நூல் மறுபதிப்பாக*

உருவெடுக்கும் போது இத்தொகுப்பில் இருந்த திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற பெயரில் அதே நூல் மறுபதிப்பாக வெளிவந்தது.

கவிஞர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த செழுமையான நிலத்துக்கு சொந்தக்காரர் என்பதால் ஆற்று நீரின் வாசமும், நெற்பயிரின் மணமும், பறவைகள் விலங்குகள் மரங்கள் என செழிப்பான சூழ்நிலையில் வாழ்ந்த வளமான எண்ணங்களும் அவரது கவிதையில் பதிவாகியுள்ளன. கிராமியப் பண்பாடு, கோவில் விழா, மழை, பயிர், வெள்ளம் போன்றவற்றைப் பற்றிய கவிதைகள்,அவரது தொகுப்பில் ஏராளம் ஆகும்.

திட்டிவாசல் பெண்ணொருத்தி, பிரகதீஸ்வரம், கோடைத் திருவிழா, இருப்பு, சென்ற திருவிழா, சிவகங்கை பூ வனம், தவளையும் தண்ணீர் பாம்புகளும், வறட்சியின் பாடல்கள், ஆகியன கிராமியப் பண்பாட்டை பாடுபொருளாகக் கொண்டவை ஆகும்.

பெண்ணின் பெருமை

திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை ஒரு குடிகாரனின் மனைவிக்கு ஏற்படும் அவல நிலையை அனாதரவான சூழ்நிலையைப் பற்றிய கவிதையாகும். இக்கவிதையில் எங்குமே குடி, துன்பம் கண்ணீர் அனாதை போன்ற சொற்கள் இடம் பெறவில்லை. ஆனால் இவை அனைத்தும் பூடகமாக உணர்த்தப்படுகின்றன. குடிகாரன் ஒருவன் இறந்த பிறகும் அந்த வீட்டைப் பற்றியே பலரும் பேசிக் கொள்கின்றனர். தவிர அங்கு வசித்த அவன் மனைவியைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. அவள் அந்த வீட்டில் இருந்த ஒரு சின்ன வாசலில் உட்கார்ந்து தன் விதியை நினைத்து நொந்து கொண்டிருப்பாள். இப்பொழுது அந்த திட்டிவாசல் திறக்கப்படாமல் இருக்கின்றது. அவளையும் இப்போது

அங்கு காணவில்லை. ஆதரவற்றுப் போன இப்பெண்ணின் வாழ்க்கையைப் பற்றிய வேதனையான கவிதை இது.

திட்டி வாசல் கதவு திறந்து

நிலைப்படி சாய்ந்து உட்கார்ந்து இருக்கிறாள்

வெளிறிய முகம் கொண்ட ஒருத்தி

என்ற மூன்று வரிகளோடு தொடங்கும் இக்கவிதையில் அவளுடைய வெளிறிய முகமே அவளுக்குள் இருக்கும் சோகத்தையும் சோகையையும் உணர்த்திவிடுகிறது.

வீட்டுக்கு காவல்

என்றனர்

அவளுக்கு வீடுதான் பாதுகாப்பு

என்றதும் உண்டு.

எனத் தொடர்ந்து வரும் அடுத்த வரிகள் அவள் அந்த வீட்டையும் தன் வீட்டுக்காரரையும் விட்டு விட்டு வெளியேறிச் செல்ல முடியாத ஒரு நிலையில் அகப்பட்டிருந்தாள். அடுப்பில் வைத்த கொள்ளி எரிந்து தானே ஆகவேண்டும் என்ற கிராமியப் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கினாள் என்பதை உணர்த்துகின்றன.

உறவினர்கள் வீடு முழுவதும்

அடுத்த நாளும்

பேச்சும் வைத்தியமும் தொடர

படுக்கையில் விழுந்த அவனுள்ளிருக்க

அவளோ திட்டி வாசலருகே

தேய் பிறை பார்த்துப் பேசியபடி

இருந்ததாய் சொன்னார்கள்.

அவளுடைய துக்கம் அதிகமாகி தனிமையும் வேதனையும் சூழ்ந்த நிலையில் அவள் தனக்குத்தானே பேசிக் கொள்ளும் நிலையை அடைந்து விட்டாள். நிலவைப் பார்த்து அவள் தானாக பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தவர்கள் அந்தப் பெண் இவ்வாறு கலங்கிக் கொண்டே இருந்ததைப் பார்த்தோம் என்று தங்களுக்குள் சொல்லிக் கொள்கிறார்கள்.

பின்னொருநாள்

திட்டிவாசல் திறக்கப்படவேயில்லை.

ஆனாலும் வீட்டைப் பற்றியே பேச்சு

என்று நிறைவுபெறும்.

இக்கவிதை கிராமியச் சூழலில் ஒரு பெண்ணின் துன்பத்திற்கு சுற்றத்தினரின் அங்கலாய்ப்பும் வெற்றுப் புலம்பலும் அவளுடைய எந்தத் துன்பத்தையும் தீர்த்து வைக்காது, அவனையும் திருத்தாது. எனவே வாழ்விழந்து புலம்பிக் கொண்டிருந்த அப்பெண் ஒருநாள் இருக்கும் இடம் தெரியாமல் போய் விடுவாள் என்ற எதார்த்தத்தை சோகத்துடன் உணர்த்த, கவிதை முடிவடைகிறது.

திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதை, இந்த ஒரு பெண்ணைப் பற்றியது மட்டுமல்ல. இதுபோல இன்று குடிகாரக் கணவனிடம் சிக்கித் தவிக்கும் ஆயிரக்கணக்கான பெண்களின் துன்பக் கண்ணீரின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது.

சிறுவர்களின் உற்சாகம்

__பிரகதீஸ்வரம்__ என்ற கவிதை கோடை காலத்தில் வெயில் சுட்டெரிக்கும் போதும் கிராமத்துச் சிறுவர்களின் குதூகலத்தைப் பாடு பொருளாக்கியுள்ளது. கிராமத்தில் வாழும் சிறுவர்கள் நாள் முழுக்க வெயிலிலும் மழையிலும் மரத்திலும் விலங்குகளோடும் பறவைகளோடும் ஆடிப்பாடி ஓடி தங்களுடைய நாட்களைக் கழிக்கின்றனர். ஆற்றில் வெகுநேரம் குளிப்பதும், பிறகு செருப்பு அணியாத வெற்றுக் கால்களோடு செம்புழுதியில் நடப்பதும் அவர்களுக்கு மகிழ்ச்சியான பொழுதுபோக்காகும். தூங்குமூஞ்சி மரத்தின் (வாகை மரம்) இளஞ்சிவப்பு கவரிப் போல தோன்றும் பூக்கள் அவர்களுக்கு விளையாட்டுப் பொருட்கள் ஆகும்.

வெண்ணாற்றங்குளியல் வேண்டி

இளவேனில்

பகலின் முனை நீளும் அந்தியில் சாய

நண்பர்களோடு நடக்கின்றன நாட்கள்

எனத் தொடங்கும் கவிதையில் சிறுவர்களின் கால்கள் நடக்கவில்லை அவர்களின் நாட்கள் நடக்கின்றன என்ற வரி அந்தக் கோடைக் காலம் கழியும் வகையை எடுத்துக்காட்டுகிறது. அடுத்து

ஊற்று நீர் எடுத்து

காலணியறியாப் பாதங்கள்

கருந்தார்ச் சாலை விடுத்து

மெல்ல, செம்புழுதியில் படிகின்றன

என்று தொடரும் போது அச்சிறுவர்களுக்கு ஆற்று நீர்க் குளியல் மட்டுமல்ல, ஊற்று நீர் விளையாட்டும் உண்டு என்ற தகவலும் கிடைக்கிறது. கிராமிய வாழ்க்கையில் சிறு வயதில் கிடைத்த இந்தக் மகிழ்ச்சியான வாழ்க்கைக் கவிஞருக்கு கிராமியப் பாடுபொருளை அவரது பாசப் பொருளாக்கியுள்ளது.

சொற்கோலம் - வண்ணக்கோலம்

கவிஞரின் கவிதைகளில் வண்ணக் கோலங்கள் என்பது ஒரு தனிப் பண்பாகப் புலப்படுகின்றது. பல கவிதைகளில் பல வண்ணங்கள் கலந்து சொற்களோடு மிடைந்து சொல்லோவியங்களாகக் காட்சி தருகின்றன. கருந்தார்ச் சாலை செம்புழுதி என்ற சொற்கள் கருப்பு சிவப்பு என்ற முரண் சுவையை அளிக்கின்றன. சிறுவர்கள் தமது கால் ஈரத்தோடு தார்ச் சாலையில் நடந்து செல்லாமல் சிவந்த புழுதி மண்ணில் நடந்து செல்கின்றனர்.

அந்த கடைசி தூங்கு மூஞ்சி மரத்தில்

வெண்ணிறம் கலந்த இளஞ்சிவப்பு விசிறிகள்

மயில் இறகுகளை ஒரு நூறு

என்ற வரிகளில் மீண்டும் ஒரு வண்ணக் கோலத்தை காண்கிறோம். இவ்வரிகளில் வெண்மையும் இளஞ்சிவப்பும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வண்ணங்களில் வந்து அழகு ஊட்டுகின்றது.

திருவிழாக் கொண்டாட்டம்

***'கோடைத் திருவிழா' 'சென்ற திருவிழா'** ஆகிய கவிதைகள் கிராமியத் திருவிழாக்கள் பற்றி சுருக்கமாகவும் சுவையாகவும் கவிதைப்படுத்தி உள்ளன. மனித குல வரலாற்றில் வேட்டை சமுதாயம் மாறி வேளாண் சமுதாயம் மலர்ந்த போது வேளாண்மை*

சிறப்படைய வளமைச் சடங்குகள் செய்வதையே திருவிழாக்களாகக் கொண்டாடினார். முளைப்பாரி எடுத்தல், கரகம் எடுத்தல், கூழ் ஊற்றுதல் ஆகியன வளமைச் சடங்குகள் ஆகும்.

மண்ணின் வளம் பெருக வேண்டும், விளைச்சல் செழிக்க வேண்டும், மக்கள் நோய்நொடியின்றி வாழ வேண்டும் என்ற நோக்கத்தில் தாங்கள் விரும்பியவற்றைத் தாமே ஒரு போன்மைச் சடங்காக *[Imitative Ritual]* அல்லது போலச்செய்தல் சடங்காகச் செய்து அதனை வழிபாட்டின் ஓர் அம்சமாக்கிக் கொண்டனர். இச்சடங்குகள் உலகம் முழுக்க நடந்ததுண்டு.

திருவிழா என்பது மக்கள் அனைவரும் ஒருங்கே கூடிக் கொண்டாடுவதால் அவர்களுக்குள் ஒருங்கிணைப்பையும் ஒற்றுமையையும் கொண்டு வரக் காரணமாய் அமைகிறது என்பது செயர்பாட்டியலார் கருத்தாகும். செயற்பாட்டியல் கொள்கையின்படி *[Theory of Functionalism]* சமுக ஒற்றுமையை வெளிப்படையாகத் தெரியும் செயல்பாடு *[manifest function]* என்பர். ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி அனைவரும் தங்களது அன்றாடப் பிரச்சினைகளை மறந்து குதூகலத்துடன் விழாவை அணுகுவதால் அவர்களின் மனம் புத்துணர்ச்சி பெறுகின்றது. இப்புத்துணர்ச்சியும் உற்சாகமும் அவர்களிடையே தன்னம்பிக்கையை ஊட்டுகின்றது. இதனை வெளியே தெரியாத மறைமுகச் செயற்பாடு *[latent function]* என்பர்.

'கோடைத் திருவிழா' என்ற கவிதையில் பஞ்சம் போக்குவதற்காக வானவேடிக்கை விடும் வழக்கம் சுட்டப்படுகின்றது. அவ்வாறு இரவில் விட்ட வானவேடிக்கையின் காகிதக் குப்பை, மறுநாள் விடிந்ததும் கூட்டிக் குவித்து வைக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படும். விழாவுக்கு வந்த உறவினர்கள்

விட்டு தந்த கசப்பு கனியின், விதைகள். மறுநாள் விவாதங்களில் பிரித்து உணரப்படும் கவிதையில் மனிதர்களின் கூட்டு வாழ்க்கை மற்றும் குடும்ப வாழ்க்கையின் சிறப்புகள் பாடுபொருள் ஆகியுள்ளன.

பஞ்சம் போக்குதற்கு

வானவேடிக்கை நிரப்பும்

விழாக்காலம்

விடிந்தால்

குவிந்து கிடக்கும்

குப்பை கூளங்கள்

உறவின்முறை தந்த

கசப்புக் கனிகளின்

விதைகள் தனியே

என்ற இக்கவிதை ஒன்பதே வரிகளில் இருந்தாலும் மிகப்பெரிய சமூக உண்மையை அறிவியல் தத்துவத்தை செயற்பாட்டியல் கொள்கையை அழகுறத் தெரிவிக்கின்றன. மறு நாள் வழக்கம் போல குப்பையும் கசப்பும் மிஞ்சினாலும் ஆண்டுதோறும் விழாக்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இதுதான் மாறாச் சமூகச் செயற்பாடு.

*‘**சென்ற திருவிழா**’ என்ற கவிதை வறட்சியைப் பற்றியதாக இருந்தாலும் இதுவும் முரண் சுவையுடன் கூடியது ஆகும். சென்ற திருவிழாவையும் இந்த ஆண்டுத் திருவிழாவையும் இணைத்துப் பார்க்கும் கவிதையாக அமைந்துள்ளது.*

நீரில்லா குளத்தில்

நிற்கும் செம்மறியாடுகள்

இது இன்றைய வறட்சி நிலை ; போன வருடம்

பெரியகுளத்தில்

பலநூறு பறவைகள்

அறுவடையின் கொண்டாட்டம்

என்று முரண் சுவையுடன் இக்கவிதை வறட்சியையும், வளமையையும் விவரிக்கின்றது. அன்று பறவைகள் இருந்த மரங்கள் இன்று ஆயிரமாயிரம் வெடிப்புகளுடன் கிளைகள் காய்ந்து ஈர அடையாளம் அற்று நிற்கின்றன. இதனால்

காலம் விதைத்த நதி

நாறத் தொடங்கிவிட்டது.

அணையின் இருபுறமும் திரளாய் அவர்கள்

என்ற முத்தாய்ப்பான மூன்று வரிகள் அணை கட்டியதால் ஓடு தண்ணீர் ஓடாமல் நின்று நதியை நாறடித்து விட்டது. அணையின் ஓரமாக மக்கள் கூடி நின்று வேடிக்கை பார்க்கின்றனர். வேறு வழி இல்லை

ஓடிக்கொண்டே இருந்தால்தான் நதி; ஆங்காங்கே நதி நீர் தேக்கப்பட்டால் அது நீர்த்தேக்கம் ஆகிவிடும். அதன் ஓட்டத்தை நிறுத்தி ஆங்காங்கே தேக்கத்தை உருவாக்கியதால் ஓடிய நதி இன்று வறண்டு போய்க் காட்சியளிக்கின்றது. இந்தக் கவிதையில் அறுவடையின் கொண்டாட்டத்தில் போன ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் இடையிலான வேறுபாடு விவரிக்கப்பட்டுள்ளது.

கிராமத்தில் வறட்சி

வறட்சி என்பது நகரத்துக்கு வேறாகவும் கிராமத்துக்கு வேறாகவும் அமையும். நகரங்களில் குடி நீர் பற்றாக்குறை, நிலத்தடி நீர் அதல பாதாளத்துக்குச் சென்று விட்டது என்றளவில் வறட்சி விவாதிக்கப்படும். ஆனால் கிராமத்தில் மனிதர்கள் மட்டுமல்ல அவர்கள் வளர்க்கும் ஆடு மாடுகளும் தவிக்கும்; அவற்றிற்குத் தாகம் தீர்க்க தண்ணீர் இருக்காது மேய்ச்சலுக்கு புல் கிடைக்காது. வேளாண் வேலைகள் நடக்காது. வயல்கள் காய்ந்துவிடும். மக்களின் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப்படும். நோய்கள் பரவும். இக்கொடுமைகளை **வறட்சியின் பாடல்கள்**, **சிவகங்கை பூவனம், இருப்பு, தவளையும் தண்ணீர் பாம்புகளும் வறட்சியின் பாடல்** தொகுப்பு போன்றவற்றில் விவரிக்கின்றன.

வனத்தில் வறட்சி

'**சிவகங்கை பூவனம்**' என்ற கவிதை காடும் காடு சார்த்த இடமும் என வருணிக்கப்படும் முல்லை நிலத்தில் உள்ள ஒரு காட்டுப் பகுதியின் வறட்சியைப் பாடுகிறது. பருவ மழை பொய்த்ததால் காடுகளில் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் தண்ணீர் தொட்டிகள் கட்டி அவற்றில் தண்ணீர் நிரப்பி தாகத்தைத் தணிக்க முயன்றனர். ஆனால் தொட்டித் தண்ணீர் காட்டின் தாகத்தைப் போக்க போதவில்லை என்ற வேதனையுடன் 'சிவகங்கைப் பூவனம்' தொடங்குகிறது.

வனத்தில் மேய்ச்சலுக்கான புல்தரை கருகிக் கிடக்கின்றது. அதனால் மான்கள் இரை இல்லாமல் தவித்து நிற்கின்றன. சித்திரையில் கோடை மழை பெய்தால் பசும்புல் தலை காணலாம். அவ்வாறு துளிர்க்கும் புல்வெளியில் கால்நடைகளை காலாற மேய விடலாம். கிராமங்களில் இந்நிலைமை நீடிக்க இதற்கு நேர் முரணாக நகரத்தில் உள்ள விலங்குகளின்

நிலைமையும் காட்டப்படுகின்றது. நகரங்களில் கோடை விடுமுறையின் போது விலங்குகளைக் காண விலங்குக்காட்சி சாலைக்கு வரும் சிறுவர்கள் கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் விலங்குகளுக்கு சோளப்பொரி பாக்கெட்டுகளை வீசுகின்றனர்.

நகரங்களில் கூண்டுக்குள் இருக்கும் விலங்குகளுக்கு உணவு கிடைத்துவிடும். ஆனால் கிராமங்களில் சுதந்திரமாகத் திரியும் விலங்குகளுக்கு உணவு கிடைப்பதில்லை. அங்குக் கால்நடைக்கு உணவாகும் பயிர் பச்சை எல்லாம் வாடிவிட்டன. குடிக்கத் தண்ணீரும் கிடைப்பதில்லை என்பதுதான் இக்கவிதையில் காட்டப்படும் முரண் சுவை.

ஒரே நேரத்தில் அல்லது ஒரே இடத்தில் நடக்கும் இரு வேறு விஷயங்களை அடுத்தடுத்துக் காட்டி அவற்றிற்கு இடையிலான முரண்பாட்டை வாசகர்கள் உணரச் செய்வது இக் கவிஞரின் தனிப் பண்புகளில் ஒன்றாகும். முரண் சுவை என்ற உத்திப் பயன்பாடு இவருக்குக் கை வந்த கலையாகும்

நீர் தொட்டிகளில் தீராது

காணுறையும் தாகம்

புற்கள் கருகியிருக்க

சற்று தொலைவில்

சோர்வாய் மான்கள்.

சித்திரையில்

பெய்தாலுண்டு.

துளிர்க்கும் புல்வெளியில்

காலாற மேய்ச்சல்

சுற்றுலாச் சிறார்

கூண்டுக்குள் எறிகிறார்கள்

பாக்கெட் சோளப் பொறிகளை.

ஒரு வகையான சந்த நயத்துடன் இக்கவிதை சோகச் சித்திரமாக வரையப்பட்டுள்ளது.

வறட்சியின் நிழல்

வறட்சியின் பாடல் *மற்றும்* ***வறட்சியின் பாடல்கள்*** *என்ற தலைப்பில் இத்தொகுப்பில் இரண்டு கவிதைகள் உண்டு. வறட்சியின் பாடல் என்ற கவிதையில் வறண்டு கிடக்கும் ஏரி குளங்கள் பற்றிய பட்டியல் இடம் பெற்றுள்ளது. வறட்சியைத் தாங்கி நிற்கும் பனை மரத்தைப் பற்றிய கவிதையாகவும் இக்கவிதை விளங்குகிறது.*

கல்லுக்கொல்லை

கணக்கன் குளம்

மேளக்குடி பனஞ்சாரி வயக்காடு

வெடிப்புற்ற மாராங்கி ஏரி

ஆகியவை வறட்சியின் கோரப் பிடியில் சிக்கியுள்ளன. வறட்சியைத் தாங்கி ஒற்றையாகவும் கூட்டமாகவும் நிற்கும் பனை மரங்கள் நஞ்சை புஞ்சை காடுகளுக்கு வேலியாக உள்ளன. இப் பனைமரங்களும் கோடைச் சித்திரை மாதத்துக் கத்திரி வெயிலின் வெப்பம் தாங்காமல் சில காய்ந்தும் சில காயாமலும் நிழல் தருகின்றன. அதுதான் வறட்சியின் நிழல்.

'வறட்சியின் பாடல்கள்' என்ற பெயரில் ஒரு நீண்ட கவிதை. வறட்சியில் மரங்களும், செடிகளும்,

பறவைகளும், ஆடுமாடுகளும் படும் சிரமங்களை பாடுபொருளாகக் கொண்டுள்ளது.

*காலையில் **மயில்கள்***

வேரடியில் நோண்டிச் சுவைக்கின்றன.

*நண்பகல் **காகங்கள்***

தத்தி நகர்ந்து

தலையொருபுறம் சாய்த்துப் பொறுக்குகின்றன.

அதன்பிறகு

***குயில்களின்** குரலோடு*

தூரத்து வாகை மரக்கிளையில்

தோகை படபடக்க

மாலையில் விழும்

கோடை மழைக்கு முன்னம்

***கலாப மயில்** நடனம் காணக்கிடைக்கும்*

என்று வறட்சி காலத்தில் கிராமங்களில் மயில், குயில், காகம் போன்ற பறவைகள் படும் துயரங்களும் வறட்சியின் பாடலாக உருவெடுத்துள்ளது.

வறட்சிக் காலத்தில் உயிரினங்கள் மட்டுமல்ல; நிலைத்திணை எனப்படும் தாவரங்களும் தண்ணீரின்றித் தவிக்கின்றன. தென்னை மரம், வாகை மரம் போன்ற மரங்களின் நிலைமையும் இக்கவிதையில் எடுத்துரைக்கப் படுகின்றது. மிச்சமிருக்கும் வாகை மரக்கிளையில் தோகை மயில் காணப்படுகிறது என்ற வரி வாகை மரக்கிளைகள் காய்ந்து சுள்ளிகளாகி

உதிர்ந்துவிட்டன. மிச்சமிருக்கும் சில கிளைகளில் மயில் வந்து அமர்ந்துள்ள காட்சியைக் காட்டுகின்றது. .

வெயில் மறையும் நேரம்

காவலுக்கு வந்த பெரியவர்

வானம் கொளுத்தி வெடிப்பார்

வாகை மரக்கிளைகள் படபடக்கும்.

என்ற வரிகளிலும் வாகை மரம் பற்றிய தகவல் இடம்பெற்றுள்ளது.

தென்னை மரத்தில் இளநீர் பறிக்க ஏறிய பையன் மரநாய் குடித்ததால் காலியாகிக் கிடக்கும் இளநீரைக் கீழே வீசுகிறான். மண்ணிலும் நீரில்லை, மரத்திலும் நீர் இல்லை.

இத்துடன் நிறைகிறது

இற்றை நாளின்

கோடை வெள்ளாமை

என்று முற்றுப் பெறும் கவிதை, இனி கோடையில் எதுவும் விளைவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏனெனில் மழைக்கான அத்தனை சாத்தியக்கூறுகளும் முடிந்துவிட்டன. இனி கோடை வேளாண்மை என மேற்கொள்ளும் எந்தச் செயற்பாடும் பலனளிக்காது.

வறட்சியின் விளைவால் ஆடுமாடுகளுக்குக் கூட இரையும் தண்ணீரும் இல்லாத நிலையில்

மிச்சமிருக்கின்ற எள்ளுக் கொல்லை

காவல் சிறுமி

ஆட்டு மந்தையைப்

பச்சையாயிருக்கிற

கடலையில் விளையாட்டாய்

மேயவிட்டு கண்ணயர்கிறாள்

என்ற வரிகள் ஆட்டு மந்தையின் பசியறிந்த அவளுக்கு கடலைச் செடியின் பசுமை அதனால் கிடைக்கும் வருமானம் மனதில் உறுத்தவில்லை. எனவே அவள் பசியோடும் தாகத்தோடும் இருக்கும் ஆட்டு மந்தை மேயட்டும் என்று கடலைக் காட்டில் விட்டு விட்டு சற்றே கண்ணயர்கிறாள். இப்போது அந்த நிலத்தில் நட்டிருப்பது எள்ளும் கடலையும் மட்டுமே என்ற கருத்தும் உணர்த்தப்படுகிறது.

கவிஞர் கிராமிய வறட்சியை உள்ளடக்கமாக்கி அழகிய சொல்லோவியமாகத் தீட்டி உள்ளார். மயில் உணவு கிடைக்காமல் வேரடியை தோண்டி அங்கு இருக்கும் புழு பூச்சிகளை உண்கின்றது. காகங்கள் தத்தித் தத்தி நகர்ந்து தலை ஒருபுறம் சாய்த்து கிடைக்கும் பூச்சி புழுக்களை உணவுத்துகள்களை உண்ண வருகின்றன. எதற்கும் வயிறார உண்பதற்கு உணவில்லை; மயில் மழை வேண்டி தோகை விரித்து நடனமாடுகின்றது. தென்னை மரத்தில் இளநீர் இருக்குமென்று ஏறிய பையன் அங்கு இருக்கும் இளநீர் எல்லாம் மரநாய் குடித்து காலியாக இருக்கும் வெறும் கூடுகளைப் பார்த்து வேதனையோடு கீழே இறங்கி நின்றான். இனி மழை வருவதற்கும் வெள்ளாமை நடப்பதற்கும் வாய்ப்பே இல்லை என்ற வகையில் இந்த கோடை கடும் கோடையாக முடிந்துவிட்டது என்ற சோகக்குரல் தொனிக்க ஒரு சொல்லோவியம் முற்றுப்பெறுகிறது.

*‘**இருப்பு**’ என்ற தலைப்பிட்ட கவிதை தென்மேற்கு மழை பொய்த்துவிட்டது. இனி வடகிழக்கு*

மழையாவது பெய்து காத்திருக்கும் குளத்தை நிரப்புமா என்ற கேள்வியோடு நிறைவு பெறுகின்றது. இக்கவிதை தொடங்கும்போது

விதைகள் நிறை

கொய்யா மரத்தைப் பிணைக்கும்

அருநெல்லிக் கிளையில்

தேனடை

என்று இனிப்போடு தொடங்குகிறது. அடுத்து,

விதையில்லாச்

சுவை கனிளில்

கிளிகள் எழுதிய

பசியின் துளைகள்

என்று பசியைப் பற்றி விவரிக்கின்றது. நொய்யல் ஆறு பெருகி ஓடிய காலத்தை நினைவுபடுத்தும் வகையில்

இனி இது இங்கே

இனிது என்றாலும்

நீரோடும் நொய்யல் பெருக்கெடுக்க

சித்திரைச்சாவடி தடுப்பணை

வழியும்

தென்மேற்குப் பருவம்

என்று தென்மேற்கு மழையினால் பெருகி ஓடிய நொய்யல் ஆறும் நிரம்பி வழிந்த சித்திரைச்சாவடி தடுப்பணையும் என்ற வளமான காலம் கண் முன்னே வந்து மறைகிறது. இவை எதுவும் இல்லாமல் போய்விட்ட இன்றைய தினத்தில்,

வடகிழக்கிலாவது

காத்திருக்கும்

குளத்திற்கு நீர் வருமா

என்ற வரிகள் அடுத்த பருவ மழைக்காகக் காத்திருக்கும் ஏக்கப் பெருமூச்சை வெளிப்படுத்துகின்றன. நீரின்றி அமையாது உலகு என்ற கருத்தும் ஏக்கப் பெருமூச்சாக இக்கவிதையில் வெளிப்படுவதைக் கேட்கலாம்.

காதலும் காவிரியும்

*காவிரி பாய்ந்ததால் சோழ வளநாடு சோறுடைத்து என்றார் அவ்வை. ஆனால் இன்று விளைநிலங்கள் விலைநிலங்களாகி வருகின்றன. காவிரியில் தண்ணீர் இல்லாமல் வேளாண் நிலங்கள் இன்று நுண்ணீர் பாசனத்திற்கு மாறிவிட்டதை உணர்த்துகின்ற கவிதை, '**நடந்தாய் வாழி**' என்ற அழகான தலைப்பிட்ட அவலச் சுவை நிரம்பிய கவிதை.*

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி

புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்"

என்று அவ்வையார் பாடிய காலம் மாறி இன்று

தென்னை மரத்தடியில்

சிறு குழாய் இறைக்க

வேர் நனைக்கும்

சொட்டுநீர்

என்று சிக்கனமாகத் தண்ணீரை செலவழிக்கும் இன்றையப் சொட்டு நீர்ப் பாசன முறை சுட்டப்படுகிறது. இத்துடன் அரிமா நோக்காக காவிரி நிலத்தின் முந்தைய பொற்காலமும் நினைவு கூரப்படுகின்றது.

சங்க காலத்திலும் சிலப்பதிகார காலத்திலும் காவிரியில் ஆண்டுதோறும் ஆடிப் பதினெட்டு அன்று ஆடிப்பெருக்கும் சித்திரை பவுர்ணமி அன்று இந்திர விழாவும் கொண்டாடப்பட்டன. ஆட்டனத்தி என்ற சேர நாட்டு ஆட்டக்காரனும் ஆதிமந்தி என்ற சோழ இளவரசியும் காதலித்தனர். அப்போது ஆட்டனத்தியை காவிரியில் வந்த பெரு வெள்ளம் இழுத்துச் சென்றுவிட்டது. ஆதிமந்தி காவிரித்தாயிடம் மன்றாடிக் கெஞ்சி கேட்டு தன் காதலனைத் திரும்பப் பெற்றாள் என்பது வரலாறு.

ஆடிப் பெருக்கிய

காலத்தை மறந்து

வறண்டு கிடக்கும்

பெரு நதியின் மொழி

என்று கவிஞர் கவிதையை முடிக்கும் போது பொன்னி ஆறு இன்று சொல்வாக்கும், செல்வாக்கும் இழந்த நதியாக மாறி விட்டிருப்பதை அறிகிறோம்.

ஆடிப்பெருக்கன்று காவிரி வெள்ளம் பெருகி ஓடிய காலம் மாறி வறண்டு கிடக்கும் பெரு நதியின் மொழி என்ற வரிகள் இன்று இந்நதி வாயில்லா ஊமையாக ஆகிவிட்டதை உணர்த்துகின்றன. தண்ணீருக்கான உரிமையை கேட்டுப் பெறும் போராட்டமே வேளாண் மக்களுக்கு வாழ்க்கைப் போராட்டமாகவும் அமைந்து விட்டதைக் காண்கிறோம்.

நதியின் மொழி, மற்றொரு கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள **கடலின் நாவு** ஆகிய தொடர்களைக் கொண்டு கவிஞர் நீரின் செல்வாக்கை உணர்த்துகிறார். மொழி, நாவு, கிளை, சிறகு, கானல் நீர் போன்ற சொற்கள் அவருடைய தனிச்சொல் கிடங்கில் [Idiolect] இடம்பெற்றுள்ளன.

மழைக் குறி

தவளையும் தண்ணீர் பாம்புகளும் *என்ற கவிதை மழை வராமல் வாடிப் போன மக்களின் வாழ்க்கையை விவரிக்கின்றது. மழை வருவதாக இருந்தால் மட்டுமே தவளைகளின் சத்தம் கேட்கும்*

ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுதே குறி - மலை

யாளமின்னல் ஈழமின்னல் சூழமின்னுதே

நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக் காற்றடிக்குதே

நீர்ப்படு சொரித் தவளை கூப்பிடுகுதே

என்று முக்கூடல் பள்ளு மழைக் குறிகளை வரிசைப்படுத்தியது. இவற்றில் ஒன்று தவளையின் இணை விழைச்சுக் குரல் ஆகும்.

இரவு நேரங்களில்

கேட்ட சிறுவயது

தவளையின் பாடல்கள்

இப்போது ஞாபகங்களின்

பதிவுகளில் தூறல்கள்

என்ற வரிகள் சிறுவர்களுக்கு தவளையின் சத்தம் இனியதோர் பாடலாக இன்றும் நினைவுகளில் பதிந்துள்ளது. சிறுவர்களுக்கு குளம் குட்டைகள் எல்லாம் வற்றிப் போனதால் குளித்து விளையாட இடம் இல்லை. அவர்கள் கோடை கால விடுமுறையில் குளித்து விளையாடத் தண்ணீரின்றித் தவிக்கின்றனர்.

எங்கே போயின

மழை மேகங்கள்

என்று ஏங்கிக் கிடக்கின்றனர். பருவமழை காலங்களைப் பற்றி பாடப் புத்தகங்களில் மட்டுமே அவர்களால் படிக்க முடிகிறது. இளைஞர்கள்

நண்பர்களின் சந்திப்பில்

உங்கள் ஊர் பயிர்பச்சை

மழை

விசாரிப்புகள்

முதலிடம் பெறுகின்றன.

செம்மண் நிலமும் கரிசல் காடும் சிவப்பு கருப்பு என்ற பேதமின்றி அனைத்தும் ஒன்று போல காய்ந்து கிடக்கின்றன.

வெடித்து போன

மந்தை வயற்காடுகளில்

நிரந்தர கிராமப்புற

கிரிக்கெட் மைதானங்கள்

ஆகிவிட்டன. எப்போதாவது சிறு மழை பெய்யும்போது அது மறுநாள் தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் முக்கியத்துவத்தை அடைந்துவிட்டது. சமூக வலைத் தளங்களில் கூட வறட்சியின் செய்திகள் இடம் பிடிக்கத் தொடங்கிவிட்டன. எங்கோ சிலர் எலிக்கறி உண்பதை பஞ்சாயத்துத் தொலைக்காட்சி எடுத்துக்காட்டுகின்றது. ஆனாலும் குடிநீர் குழாய்களில் தண்ணீர் வரவில்லை, தண்ணீர்ப் பாம்புகள் தான் எட்டிப் பார்க்கின்றன என்று வறட்சியின் உச்சத்தை இக்கவிதை எடுத்துச் சொல்கிறது.

கிராமத்தில் மழை - பயிரும் வீடும் மூழ்குதல்

திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதைத் தொகுப்பில் கிராமியம் பற்றிய கவிதைகளில் மழையின் தேவையும் அவை மிகையாகப் பெய்து தீர்க்கும் போது ஏற்படும் பாதிப்பும் பாடு பொருளாகி உள்ளன. பருவம், **சில அத்தியாயங்கள், காமம் செப்பாது முன்னும் பின்னும், மழை வேண்டல், இருப்பு** *ஆகிய கவிதைகள் மழை வெள்ளத்தைப் பற்றியனவாகும்.*

வடகிழக்குப் பருவமழை பொழிவதன் விளைவுகள் கவிஞரின் பாசப் பொருளாகி பாடுபொருளாகி உள்ளன. **பருவம்** *எனப் பெயரிட்ட இக்கவிதை*

வடகிழக்குப் பருவத்தில்

பொழிகிறது

என்றே தொடங்குகிறது. பின்னர் மழையின் பயனை

தஞ்சையின் புன்செய் நிலத்தில்

வல்லம் துவரை பூத்து நிற்கும்

என்று எடுத்துரைக்கிறது. இதனைத் தொடர்ந்து

உச்சப் பெருமழையில்

சரளைக்கல், காவிக்கல்,

மதுவர்ணம், ஸ்படிகம்,

மஞ்சள் வண்ணம், செவ்வந்திக் கற்கள்

தந்த

தென்மேற்கு வல்லம் மேடுகள்

என்ற வரிகள் பலவர்ண கற்கள் காணப்படும் தென்மேற்கில் உள்ள வல்லம் என்ற மேட்டுப்பகுதியில் பெரு மழை பெய்ததால் இந்த மேடுகள்

கரைந்து

குடியிருப்புகள்

மிதக்கக் குழிகளாயின.

எனக் கவிதை நிறைவடைகின்றது. மேடுகளைக் கரைக்கும் வல்லமை பெருமழைக்கு உண்டு.

இருபுறமும் வயல்களில் துவரை பூத்து நிற்க இடையில் தண்டவாளத்தில் ஓடும் ஒரு இரயிலை கவிஞர்

ஒற்றையாய்த் தண்டவாள வெளியில்

ஊதிக் கொண்டு போகுது

கொம்பன் யானை

என்கிறார். கரிய பெரிய இரயில் கவிஞருக்கு மிகப் பெரிய கொம்பன் யானையாகத் தோன்றுகிறது. இவ்வுவமை வேறெங்கும் காணக் கிடைக்காத புதிய அரிய உவமையாகும்.

'சில அத்தியாயங்கள்' *என்ற கவிதை கொம்பன் யானை போன்ற ஒரு தொடர் வண்டியில் பயணிக்கும் ஒருவர் அதிகாலை வேளையில் சென்று சேரவேண்டிய ஒருவரது வீட்டில் அவருக்குத் தேவையான பொருள்களை முன்கூட்டியே தயாராக வைத்து இருக்கின்றனர். ஆனால் எதிர்பாராத வகையில்*

அங்கே குளிர் காய்ச்சல்,

பேய் மழை,

உடைந்த கண்மாய், ஊரெல்லாம் வெள்ளம்,

சொந்த வெள்ளாமை,

மூழ்கும் பயிரில்

அப்பா அம்மா கண்ணீர் மணிகள்

என்ற நிறைவு வரிகள் நினைத்தது ஒன்று; நடந்தது வேறு என்ற நிலைமையை உணர்த்துகின்றன.

தொடர் வண்டியில் பயணிக்கும் ஒருவர் இரவில் தூங்கும் போது திடீரென வெள்ளம் வந்து தங்களின் சொந்த வெள்ளாமை மூழ்கிப் போகும் என்று தன் கனவிலும் கருதவில்லை. ஆனால் வெள்ளத்தில் , மூழ்கிக் கிடக்கும் பயிரில் அவரது தாய் தகப்பனாரின் கண்ணீர் துளிகளும் கலந்து கிடக்கின்றன என்று சோகத்தோடு முடிக்கும் போது பெய்து கெடுத்த மழையாக இந்த மழையைக் கவிஞர் உணர்த்துகிறார்.

பெய்யாமல் கெடுக்கும் மழை வறட்சியை கொடுக்கும்; பெய்து கெடுத்த மழை சேதத்தை ஏற்படுத்தும் என்று இரண்டு முரண்களையும் கவிஞர் தமது கவிதைகளில் சுட்டிக் காட்டுகிறார்.

கதிரவனுக்காகக் காத்திருத்தல்

கவிஞர் தன்னுடைய பாணியில் ***முன்னும் பின்னும்*** *என்ற இன்னொரு கவிதையையும் முரண் சுவையுடன் வழங்கியுள்ளார். கவிதையின் முற்பகுதி கோடை மழைக்கு ஏங்கி நிற்கும் வறட்சி பின்னணியையும் கதிரவனின் கடும் வெப்பத்தை வெறுக்கும் நிலையும் பிற்பகுதி மழை பெய்து வீடுகள் மூழ்கிய பின்பு மக்கள் அதே சூரியனுக்காக காத்திருக்கும் நிலையையும் விளக்குகின்றது.*

நீர் இல்லாத போது

நீர்த்துப் போகின்றன. சொற்கள்

முன்பே வறண்டாலும்

மாசி பங்குனியில் வராதா

கோடை மழை

வந்து சேர்ந்த பறவைகள்

மரக்கிளைகளில் பூவிலைகளோடு

பேரூர் குளத்தில்

குனிந்து மகிழ்ந்து முகம் பார்த்தன.

நீர் கோழிகள்

என்ற வரிகள் மாசி பங்குனி மாதத்திற்கு முன்பிருந்தே வறட்சி ஏற்பட்டதை விளக்குகின்றது. ஆனால் கவிதையின் பிற்பகுதி பெரு மழை பெய்ததால்

இரண்டு பகல்களில் யாரும்

காணாமலிருந்தனர்

மறுநாள்

மூழ்கிய ஊர்கள்

கரைந்த குடிசைகள்

செய்திகள் குவிய

உக்கிரமாகிறது விலைப்புள்ளி

என்று மழையின் கோரத்தை வர்ணிக்கின்றது. மழையினால் மண் குடிசைகள் கரைந்துவிட்டன. ஊர்கள் வெள்ளத்தில் மூழ்கி விட்டன. அதனால் விலைவாசி விண்ணைத் தொட்டு விட்டது. மழையால் மக்கள்

அல்லலுற்ற இச் சூழ்நிலையில் வெயில் வராதா மழை நிற்காதா என்று ஏங்கத் தொடங்கி விட்டனர்.

மின்மாற்றி கோபுரத்திற்குப்

பின்னால்

உதயமாகிறான்

ஊர் தேடும் ஒளிக் கோளம்

என்ற வரிகள் காலத்துக்கேற்ற வாழ்வின் முரண்பாட்டை, தேவைகளின் முரண்களைத் தெளிவாகக் காட்டுகின்றன.

மழை மணம்

*நிறைவாக, மழை பெய்து முடிந்ததும் மழையின் வாசம் மண்ணின் மணம் செடி கொடி பூக்களின் ஈர மணம் ஆகியவை மனிதர்களால் விரும்பி நுகரப்படும் சுக வாசமாகும். மழையின் மணத்தை '**மழைக் குணம்**' என்ற பெயரில் கவிதை வரைந்துள்ளார்.*

பார்வைக்கு அழகாயும்

காய்ந்து உதிர்ந்த சருகாயும்

காணக்கிடைக்கும். பூக்கள்

மழைநின்ற பொழுதில்

மணமாய்

பிரபஞ்சவெளியில் வீசுகின்றன.

அண்டைத் தோட்டத்து விளைச்சலை

என்ற கவிதை சொற்சுவை பொருட்சுவை சந்த நயம் ஆகியவற்றுடன் மழையில் நனைந்த புதுமலரின் வாசம் போலத் தோன்றுகிறது. மழை பெய்ததும் விளைந்து

நிற்கும் பயிர் பச்சைகளின் ஈர வாசனை பிரபஞ்சவெளியில் வீசி அந்தப் பிரபஞ்சத்திற்கே ஒரு புது வாசத்தைக் கொடுக்கின்றது. மழை தரும் இந்த வாசம் வேறு வேளைகளில் கிடைக்காது என்பதால் இது இயற்கை அருளிய வரம் என்பதையும் கவிஞர் உணர்த்துகிறார்

நிறைவு

கிராமத்தில் பெண்களின் நிலை, திருவிழாக்கள், கால்நடைகள், ஆறு, குளம், ஏரி விலங்குகள், பறவைகள், மரங்கள், மற்றும் வறட்சி, வெள்ளம் ஆகியவற்றால் மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமை எனப் பலவற்றையும் பாடு பொருளாக்கி தனது கவிதைகளைக் கவிஞர் படைத்துள்ளார்.

வெயிலின் கொடுமை மழையின் விளைவு பற்றிய பல கவிதைகள் கிராம வாழ்க்கையில் மக்களின் விருப்பம் வெயில், மழை, மரம், செடி, கால்நடை என இயற்கை சார்ந்ததாகவே இருப்பதையும் வெயிலும் மழையும் மட்டுமே வாழ்வின் வெளிச்சத்தையும் விளைச்சலையும் தரக்கூடியதாக இருப்பதையும் அவர்களின் இன்ப துன்பங்களுக்கான காரணிகளாக விளங்குவதையும் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் உணர்த்துகின்றன.

4. நகர்மயமாக்கம் மற்றும் மேனிலையாக்கம்

கவிஞர் முத்தமிழ் விரும்பி 'மண்ணிலிருந்து மக்களிடம் இருந்தும் ஒவ்வொரு நாள் வாழ்விலிருந்தும் தன்னுடைய கவிதைகளை உற்பத்தி' செய்துள்ளார். ஆறுகளோடும் காடுகளும் மண்ணோடும் உயிரினங்களோடும் பயிர்வகைகளோடும் தமக்கு உள்ள உறவுகளை தக்க வைக்க இன்று நாம் என்ன செய்கிறோம் என்ற சிந்தனையை எழுப்பும் வகையில் இவரது கவிதைகள் இருப்பதை கவிதைத் தொகுப்பின் முன்னுரை சுட்டிக் காட்டுகின்றது. கவிஞர் முத்தமிழ் விரும்பி தனது திட்டி வாசல் பெண்ணொருத்தி என்ற கவிதைத் தொகுப்பில் நகர்மயமாக்கல் மற்றும் மேனாட்டு நாகரீக மோகம் போன்றவற்றால் அழிந்து வரும் கிராமியச் சிந்தனை, கிராமிய வாழ்க்கை முறை, இயற்கை சார்ந்த வாழ்க்கை ஆகியவற்றை கவிதையின் பாடுபொருளாக்கி உள்ளார்.

'ஒரு நூற்றாண்டுக்கு மேலாக நவீன நாகரிகத்திற்கு நம் வாழ்வின் எல்லாக் களங்களிலும் இடம் கொடுக்கும் நகரங்கள், அணைக்கட்டுகள், மின் நிலையங்கள், மருத்துவமனைகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கான்கிரீட் கட்டிடங்கள் என அமைத்துக்கொண்டு வாழ்வின் வசதிகளைத் தரும் பகுத்தறிவு என்றும் அறிவியல் பார்வை என்றும் நமக்குள் வளர்த்துக் கொண்டோம். கூடவே சினிமா தொலைக்காட்சி, தகவல் தொழில்நுட்பங்கள்,

போக்குவரத்து சாதனங்கள் என்பனவற்றையும் வாழ்வின் உட்கூறுகள் ஆக்கிக்கொண்டோம். பசுமைப் புரட்சி என்று தொடங்கினோம்', என நகர் மயமாக்கலுக்கு [Urbanisation] நாம் கற்பித்துக் கொண்ட காரணங்களை கோவை ஞானி இக்கவிதை நூலின் முன்னுரையில் அழகாக விளக்கி உள்ளார்.

கிராமங்களின் மீதான மதிப்பு குறைந்து போனதற்கு முக்கிய காரணம் வெள்ளையர் காலத்தில் கொண்டுவரப்பட்ட தொழிற்புரட்சியும் அதை ஒட்டி மக்கள் தொழிற்சாலைகளில் வேலைத் தேடி நகரங்களுக்கு குடிபெயர்ந்ததும் ஆகும். கிராமங்களில் விவசாயம் செய்து வந்தவர்கள் நகரத்திற்கு வந்து வாடகை வீடுகளில் குடியேறி கூலிக்காரர்கள் ஆகிவிட்டனர். நகரத்தில் வாழ்ந்தவர்கள் மேலை நாட்டாரைப் போல நடந்துகொண்டு மேனிலையாக்கத்துக்கு [Westernisation] வழி வகுத்தனர்.

நகர்மயமாக்கலைக் கவிஞர் முத்தமிழ் விரும்பி 'ஆற்றங்கரை மனிதர்களின் நாகரிகம்' எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்களே நகரம் எனப்படும் பாதுகாப்பு மிக்க இல்லங்களைக் கட்டி சுற்றிலும் கோட்டைச் சுவர்களையும் எழுப்பினர். மலைகளை அழித்து வனங்களை எரித்து அங்கு வணிகப் பயிர்களை வளர்த்தனர். காடுகளில் வாழ்ந்த மனிதர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இயற்கை அழகு மிக்க மலைப் பிரதேசங்களை நகரத்து மனிதர்கள் அவ்வப்போது போய்த் தங்கும் விடுமுறைத் தலங்களாக மாற்றி விட்டனர். இயற்கையை விஞ்சும் அளவிற்கு செயற்கைத் தன்மை அங்கும் அதிகரித்து விட்டது. இதனால் காட்டிலும் மலையிலும் வாழ்ந்த மனிதர்கள் தமது வாழிடம் இழந்து அகதிகளாய், நகரத்துக் கூலிகளாய் மாறிவிட்டனர். இக்கருத்துக்களை சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் கவிஞர் முத்தமிழ் விரும்பி கவிதை ஆக்கியுள்ளார்.

*திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதைத் தொகுப்பில் **புலம், மீட்டல், நித்தியம், மலையிலிருந்து, இணையத்திலிருந்து விடுதிக்கு, காட்டாளன், வேறு, கிளை கிளையாம்** ஆகிய கவிதைகள் நகரமயமாக்கம் இயற்கை அழிவு, நாகரீக வாழ்வு, மேனிலையாக்கம் போன்றவற்றைப் பாடுபொருட்களாகக் கொண்டுள்ளன.*

புலம்பெயர்வு

***புலம்** என்ற கவிதை புலம் பெயர்ந்து சென்றவர்களின் இளைய தலைமுறையைச் சேர்ந்த ஒருவன் தனது தாய் நிலத்தை வந்து பார்க்கும் போது அவன் விடும் ஏக்கப் பெருமூச்சு அங்கு அவன் கண்ணில் காணும் காட்சி கவிதையாகி உள்ளது.*

ஒரு யுகத்திற்கு முன்னம்

விற்று பெயர்ந்த

புஞ்சை காட்டிடை நிற்கும்

உதிர்ந்த வெள்ளை வேல மரத்தின்

மேலே கிளைத்தது.

வெண்ணிலா பழம்

வானில் தோன்றும் வெண்ணிலா, அவனுக்குப் பழம் போல் காட்சி அளிக்கிறது.

கிராமத்தை விட்டு நீங்கி வேறிடத்துக்குப் பிழைக்கப் போனவனுக்கு பழம் என்ற சொல் ஆக்கப்பூர்வமான சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது. தரிசாகக் கிடந்த நிலத்தில் பசி தீர்க்கும் உணவான பழம் என்ற சொல்லைக் கவிஞர் பயன்படுத்தி இருப்பது அந்த இளைஞனுக்கு மனதில் ஒரு நம்பிக்கை கீற்று. வெண்ணிற ஒளியில் உதயமாகி இருப்பதைச் சுட்டுகிறது.

புலம்பெயர்தல் என்பது ஒரு சர்வதேச பிரச்சனை. பல நூறு ஆண்டுகளாக உலகளவில் பல இடங்களில் பல நாடுகளிலிருந்து வறட்சி வேலைவாய்ப்பு இன்மை மற்றும் அரசியல் காரணங்களுக்காக ஆயிரக்கணக்கில் மக்கள் புலம்பெயர்ந்து அடுத்தடுத்த ஊர்களுக்கும் நாடுகளுக்கும் போய் அங்கேயே நிரந்தரமாகத் தலைமுறை தலைமுறையாக தங்கி விடுகின்றனர். தங்களின் வளமான நிலத்தை விட்டுப் பெயர்ந்து சென்ற கதைகளைத் தமது முன்னோர்கள் சொல்லக் கேட்டு அடுத்தடுத்த தலைமுறையினர் தமது தாய் மண்ணைப் போய் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் வரும்போது அந்த மண் ஆண்டாண்டு காலமாக தரிசாகவே கிடந்தால் அந்நிலைத்தைக் காணும்போது அவர்கள் மனம் வேதனைப்படுகின்றது. அந்த வேதனையிலும் கவிஞர் வெண்ணிலா பழத்தின் மூலமாக நம்பிக்கையையும் ஆக்கப் பூர்வமான சிந்தனையையும் அளிக்கின்றார்.

நெடுஞ்சாலைக் கொடுமை

‘***மீட்டல்***’ என்ற கவிதை நெடுஞ்சாலையின் கொடுமையை விவரிக்கின்றது. நெடுஞ்சாலை என்பது கனரக வாகனங்களுக்கும் சொகுசு வாகனங்களுக்குமான சாலையாகும். பல நூறு பல ஆயிரம் கல் தொலைவு பயணம் செய்வோர் நெடுஞ்சாலைகளில் செல்கின்றனர். இவ்வாறு நெடுஞ்சாலைகள் அமைப்பதற்காக பல வேளாண்குடியினரின் வீடுகளும் விவசாய நிலங்களும் மத்திய மாநில அரசுகளால் கையகப்படுத்தப்பட்டன.

வணிகம், வர்த்தகம், இலாபம், மற்றும் சொகுசு பயணத்துக்கும் உதவும் நெடுஞ்சாலையில் அன்றாடம் பல விபத்துக்களைச் சந்திக்கின்றோம், ஆனால் எந்த விபத்தும் நெடுஞ்சாலையின் செயல்பாட்டையும் வேகத்தையும் தடுப்பது கிடையாது, விபத்து நடந்த இடத்தில் வழக்கமான போலீஸ் நடைமுறைகள்

மேற்கொள்ளப்படும் .இழந்த எந்த உயிருக்காகவும் எவரும் அங்கு நின்று துக்கப்படுவது கிடையாது.

விபத்துக்கள் நடந்தாலும் அந்நெடுஞ்சாலையில் பயணப்படுவோர் வேடிக்கை பார்த்துக் கொண்டே அந்தச் சாலையைக் கடந்து செல்வது வழக்கம், இதனை மிக நுட்பமாக ‘மீட்டல்’ என்ற கவிதை உணர்த்துகிறது. நெடுஞ்சாலையில் விபத்தில் இறந்து கிடந்த ஒருவனின் பிரேதம் அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடத்தில் அவன் கிடந்த கோலத்தை சுற்றிலும் வெள்ளை கோடிட்டு காவலர்கள் படம்பிடித்து விட்டு சென்றுவிட்டனர். அந்தக்கோட்டு ஓவியத்துக்குள் காய்ந்து கிடந்த குருதியை அங்கு இருக்கும் ஒரு நாய் நக்கிச் சுவைக்கின்றது. மனித உயிருக்கு நெடுஞ்சாலை தரும் மதிப்பு அவ்வளவே என்ற கருத்தை கவிஞர் சொல்லாமல் சொல்லி இக்கவிதையை நிறைவு செய்கிறார்.

நெடுஞ்சாலை நடுவே விபத்து

சுன்னமிட்ட கோட்டோவியத்தினுள்

காய்ந்த குருதிக் கறையை

நக்கிச் சுவைக்கிறது

நாய்.

நகரமயமாக்கலால் விரையும் வாகனங்களின் வேகமும் மனிதனின் பரபரப்பான வாழ்க்கையும் விபத்து மரணங்களை நின்று கூட பார்க்க விடாமல் போகிற போக்கில் பார்க்கும் வேடிக்கை வினோதங்கள் ஆக்கிவிட்டன. நாய் ஒன்று அதன் பாட்டுக்கு காய்ந்த இரத்தத்தை நக்கிச் சுவைக்கின்றது. அங்கு மனிதர் எவருக்கும் அவனது அகால மரணத்தை குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருக்க நேரமில்லை. நெடுஞ்சாலையில் வாகனங்கள் பறந்து

கொண்டிருக்கின்றன என்ற எந்திரத்தனமான வாழ்க்கையை நாயின் நடத்தையை வைத்து மென்மையாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார் கவிஞர்.

நகரமயமாக்கலின் இன்னொரு காட்சி ***நித்தியம்*** *என்ற கவிதையில் வெளிப்படுகிறது. நகரத்தில் வீடுகள் தீப்பெட்டிகளைப் போல வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் எந்த வீட்டுக்கும் சுற்றிலும் இடைவெளியோ செடிகொடிகளோ புழங்குவதற்கான இடமோ ஆடு, மாடு, கோழி, குருவி வளர்ப்பதற்கான இடமோ கிடையாது. இந்த வரிசை வீடுகளில் வாழும் நகரத்து மக்கள் மூச்சுத்திணறிக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் நித்தியம் என்ற கவிதை இந்த நெரிசலிலும் ஆசுவாசமாக மூச்சு விடுவதற்கு வாய்த்த ஒரு பழைய ஓட்டு வீட்டை மகிழ்ச்சியோடு எடுத்துக் காட்டுகின்றது.*

நகரத்தின் ஒரு தெருவில் மற்ற வீடுகள் எல்லாம் கான்கிரீட் வீடுகளாக இருக்க இந்த ஒற்றை வீடு மட்டும் பழைய ஓட்டு வீடாக இருக்கிறது. அங்கு ஒரு சாய்ந்த தென்னை மரம் தனது பச்சை ஓலைகளால் விசிறிக் கொண்டு மென்மையான காற்றை அங்கு வாழும் மனிதர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

இயற்கை சுகம் தரும் வாய்ப்புப் பெற்ற அதிசய வீடு கவிஞரின் கண்களில்பட்டு அவர் மனதைக் கவர்ந்து மகிழ்ச்சியை அளித்து கவிதைக்கான பாடுபொருளாக உயர்ந்துவிட்டது.

பெரு நகரத்தின் சாலைகளின் ஓரத்தில் பிளாஸ்டிக் பொருட்கள் அதிகம் காணப்படுவது நகரத்திற்கான அடையாளமாகும். பிளாஸ்டிக் பைகளும் பிளாஸ்டிக் பாட்டில்களில் நகரத்து சாலைகளின் ஓரத்தில் அதிக அளவில் சிதறியும் குவிந்தும் கிடக்கும். இந்த அறிமுகத்தோடு தொடங்கும் இக்கவிதை நகர் வாழ்

மக்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டால் நாடிச்செல்லும் ஆபத்தைச் சுட்டுகிறது. இதுபோன்ற இருபத்தோராம் நூற்றாண்டின் ஆபத்துகளுக்கும் இடையில் எங்கேயோ 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை' என்ற அவ்வையின் வாக்கிற்கிணங்க அந்த ஒற்றை ஓட்டு வீடு கவிஞருக்கு நம்பிக்கை அளிக்கின்றது.

நெகிழிச் சாமான்கள் புழங்கும்

பெரு நகர வீதியில்

கான்கிரிட் பெட்டிகளின் அடைசலில்

பரம்பரை இருப்பென

ஆழ் சுவாசமொன்று தர

வாய்த்தது இவ் ஓட்டு வீடு

சிலிர்த்து நிற்கும் சாய்ந்த தென்னையின்

பச்சை விசிறல்

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் எதிர்மறை சிந்தனைகளை எங்கேயும் பார்க்க இயலாது. மிகப்பெரிய அபாயகரமான ஆபத்தான பிரச்சினைகளைப் பற்றிய கவிதைகளிலும் கூட ஆக்கப்பூர்வமான சிந்தனையும் நம்பிக்கை ஒளியும் இருப்பதைக் காணலாம்.

நகரமயமாக்கலால் அழிந்து போன மலைக்காடுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பை நகர வர்ணனையில் கவிஞர் சுட்டுகின்றார். கவிஞர் மலையிலிருந்து கீழே தெரியும் நகரத்தை பார்த்து

அதோ கிடக்கிறது.

மாநகரம்

மின் பூக்களில் மூழ்கி

அங்கே

அடர்ந்த காடு இருந்திருக்கிறது.

இன்னும்

சில மரங்கள்

பிளாஸ்டிக் கூடை தோட்டங்களில்

கற்பனைகளில்

ஓடுகின்றன.

கனவென மரமான்கள்

முன்பு அடர்ந்த காடுகள் இருந்த இடத்தில் இப்போது காடுகள் அழிக்கப்பட்டு மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு அங்கு மின்சார விளக்குகள் பூக்களைப் போல ஜொலிக்கின்றன; மின்னுகின்றன. இப்போதும் இந்த நகரத்தில் சில மரங்கள் காணப்படுகின்றன. அவை உண்மையான மரங்கள் கிடையாது. அவை கூடைகளில் அழகுக்காக வைக்கப்படும் பிளாஸ்டிக் மரங்கள்.

பச்சை மரங்களை மனிதர்கள் இனி தன் கற்பனைகளில் தான் காண முடியும். கற்பனையிலும் கனவிலும் நாம் காணும் மரங்கள் கூட மான்களைப் போல ஓடி விடும். நம் கைக்கு கிட்டாது, என்ற கருத்தில் மரங்களை மான்கள் என்று கவிஞர் உருவகப்படுத்துகிறார். இந்தக் கவிதையில் உருவக உத்தியைக் கவிஞர் செம்மையாகக் கையாண்டிருப்பதை கடைசி மூன்று வரிகள் உணர்த்துகின்றன. 'மரமான்கள்' என்ற ஒற்றைச் சொல் மரம் என்பது இனி எவருக்கும் கிடைக்காத அரும் பொருள் என்பதை உணர்த்திவிடுகிறது.

மலையடிவாரத்தில் உள்ள மரங்கள் நகரமயமாக்கல் என்ற அரக்கனின் கையில் சிக்கியதால் தூரோடு அகற்றப்பட்டு வெற்று மனையாகி வெறும் வீடுகளாக உருமாறி அந்த வீடுகளில் அழகுக்காக பிளாஸ்டிக் மரங்கள் வைக்கும் கோர நிலையை உருவாக்கிவிட்டது.

பெருவழிப்பாதைகள்

நகரங்களை ஒன்றோடு ஒன்று இணைக்க பெருஞ்சாலைகளை அமைப்பதுண்டு. அப்போது இரண்டு ஓரங்களிலும் இருக்கும் மரங்கள் வெட்டப்படுவது உண்டு. அண்மையில் சேலம் பகுதியில் எட்டு வழிச் சாலை அமைப்பதற்காக நிறைய விளை நிலங்களை அரசு கையகப்படுத்தியது. இதனை எதிர்த்து வேளாண் பெருமக்கள் பெரும் போராட்டங்களை நடத்தினர். இறுதியில் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர் நிலம் கையகப்படுத்துதல் நிறுத்தப்பட்டது.

அமெரிக்க பொருளாதார கொள்கையான உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல் ஆகியவற்றின்படி தனியாருக்கு மிகப்பெரிய தொழில்துறைகள் ஒதுக்கப்பட்ட போது அவர்களுக்கு தமது விளைபொருட்களை ஊருக்கு ஊர் எடுத்துச் செல்வதற்கு நீண்ட சாலைகள் தேவைப்பட்டன. சாலைகளை அமைக்கும் போது வேளாண் தொழில் பற்றி சிறிதும் கவலைப்படாமல் விளைநிலங்களையும் அரசு கையகப்படுத்தி அவர்களுக்காக சாலைகளை அமைத்துத் தந்தது. பல நூறு ஆண்டுகள் வளர்ந்து செழித்து நின்ற மரங்களைத் தூரோடு பிடுங்கி எறிந்தது.

நெடுஞ்சாலை ஓரம்

மரமிருந்தது

நிழல் காணோம்

சில கல் தொலைவுகளில்

மரங்களே இல்லை.

சிற்சில இடங்களில்

மரமிருந்தும்

கிளைகளில்லை.

சிலவேளைகளில்

விரல்கள் இருந்தன.

ரேகைகள் காணோம்

என்ற கவிதை விரலுக்கும் கைக்கும் அதில் காணப்படும் ரேகைகளே தனித்தன்மையானவை. அந்த அழகு இல்லாதது போல சாலைக்கு அழகு தரும் மரங்கள் இனி இல்லை என்ற ஏக்கத்துடன் நிறைவு அடைகிறது.

உலகமயமாக்கலின் விளைவு தான் நெடுஞ்சாலைகளும் அப்பகுதிகளில் காணாமல் போன வேளாண்மையும் விலை நிலங்களும் சிற்றூர்களும் மரங்களும் ஆகும். மேலும் புதிதாக வைக்கப்படும் மரங்கள் கிளைகளற்ற மரங்களாக இருப்பதன் காரணம் அவர்களுக்கு போதிய நிலத்தடி நீர் கிடைக்காததே எனலாம். அவை பசுமை படர்ந்து கிளைகளோடு அடர்ந்து காட்சியளிக்கவில்லை. குச்சிகளும் சுள்ளிகளும் கொண்ட காய்ந்த மரங்களாக ஒன்றிரண்டு சாலையோரங்களில் காட்சி அளிக்கின்றன.

இவ்வாறு நகரமயமாக்கல் உலகமயமாக்கல் போன்ற வெளிநாட்டுக் கொள்கைகளால் சீரழிந்து போன இயற்கைப் பற்றை கிராமிய வாழ்க்கையை தனது கவிதைகளின் மூலம் கவிஞர் விமர்சனத்துக்கு உட்படுத்துகிறார்.

மேனிலையாக்கம் / மேற்குமயமாக்கம்

இணையத்திலிருந்து விடுதிக்கு, காட்டாளன், வேறு என்ற மூன்று நீண்ட கவிதைகள் நகரமயமாக்கல் மேனிலையாக்கம் போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டவை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்குள் மேனிலையாக்கம் [westernisation] அல்லது சமஸ்கிருத ஆக்கம் [sanskritisation] என்ற பெயரில் மாநில மொழிகளை ஒதுக்கி விட்டு சமஸ்கிருத மொழியைப் பேசுவதும் மேட்டுக்குடியினரைப் போலப் பழகுவதும் அவர்களின் கலைகளை ஆதரிப்பதும் என ஒரு போலி நாகரீகத்தை நிலை நிறுத்தியது.

மேட்டுக்குடியினர் தமிழையும் சமஸ்கிருதத்தையும் கலந்து பேசவும் எழுதவும் செய்தனர். இம் மொழி நடையை மணிப்பிரவாள நடை என்று அழைத்தனர். இதில் பெயர்ச் சொற்கள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் இருக்கும் இடைச் சொற்களும் வினைச்சொற்களும் பெரும்பாலும் தமிழில் இருக்கும். தற்போது இந்நிலை மாறி சமஸ்கிருதத்தின் இடத்தை ஆங்கிலம் கைப்பற்றி விட்டது. ஆங்கிலத்தில் பெயர்ச் சொற்களையும் தமிழில் இடைச் சொற்களையும் சில சமயம் வினைச் சொற்களையும் பயன்படுத்துகிறோம். இதுவும் மேல்நிலை யாக்கத்தின் ஒருமுக்கியச் செயல்பாடாகும்.

இணையத்திலிருந்து விடுதி வரை

மேல்நிலையாக்கம் என்பது மேனாட்டார் போல உடை உடுத்துதல், ஆங்கிலத்தில் பேசுதல், கத்தி முள்கரண்டி கொண்டு சாப்பிடுதல், மதுபானம் அருந்துதல் எனப் பல வகையில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

இணையத்திலிருந்து விடுதிக்கு என்ற கவிதை ஒரு சர்வதேச கருத்தரங்குக்குச் சென்றவரின் அவதானிப்பு அனுபவங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. அவர் ஐந்து நட்சத்திர விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டு உள்ளார். விமான நிலையத்திலிருந்து மூன்று நிமிட நடை தூரத்தில் இப் பேராளர் தங்கியிருக்கும் விடுதி இருந்தாலும் அவர் மகிழுந்தில் அழைத்துவரப்பட்டு விடுதியில் இறக்கிவிடப் படுகிறார். அங்கு வாயில் காப்போன் வைக்கும் வழக்கமான வணக்கம் மகுடம் போன்ற அவனது தலைப்பாகை; அவன் தலையில் அசைந்து கொண்டிருக்கும் பல மொழி பேசும் பல நாட்டினரும் அங்கு வந்து போவது வெளிநாட்டவர்களின் கோட்டுகளில் செருகப்பட்டுள்ள ஒற்றை ரோஜா, அவர்கள் கைகளில் காணப்படும் மது குப்பி, குளிரூட்டப்பட்ட அறையில் நடக்கும் நாட்டுப்புற ஆடல் பாடல் நிகழ்ச்சியில் பங்குபெற்ற பள்ளி மாணவிகள், இக்கலைகளை ரசிப்பது தனக்குக் கௌரவக் குறைச்சல் என நினைத்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் மேட்டுக்குடி கனவான்கள், ஆனாலும் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி கையும் காலும் அசைவது, சர்வதேச வணிக ஒப்பந்தம் நடைபெறும் அந்த விடுதியின் வெளிச் சுவர்களில் காணப்படும் சோழர்கால நாட்டியக் பெண்களைப் போன்ற புடைப்புச் சிற்பங்கள், பறவைகள் வந்து கூடு கட்டாத பனைமரம் மற்றும் , பாக்கு மரங்கள் தொட்டியில் வைக்கப்பட்டிருக்கும். செடிகளின் தூர்களை மறைத்திருக்கும் கூழாங்கற்கள் என அங்குள்ள மேல்நிலையாக்கச் செயற்பாடுகளைக் கவிஞர் கவிப்பொருள் ஆக்கி வரிசையாகச் சுட்டிக்காட்டுகிறார்.

விடுதியில் வரவேற்பாளராக இருக்கும் பெண்ணின் உதடுகளில் ஆங்கிலம் உதிர்ந்த படி பூக்கின்றன என்ற வரிகள் உலக மொழிகள் அனைத்தும்

ஒருமைப்பட்டு ஆங்கிலத்தை தன்னுடைய தொடர்பு மொழியாக்கி அந்த மொழியில் அங்கிருக்கும் பெண் சில சொற்களை அளவாகவும் மென்மையாகவும் பூக்களைப் போல உதிர்த்தபடி இருக்கின்றாள் என்ற உவமை கண்டு கேட்டு இன்புறத்தக்க உணர்வை ஏற்படுத்துகின்றது. இவ்வரிகளில் பேசப்பட்ட மொழி ஆங்கிலம் என்பது குறிப்பிடப்படவில்லை. எனினும் அவள் அதனை மென்மையாக பேசிய விதம் உதடுகளில் உதிர்ந்த சொற்களை பூக்கள் என்றும் பேசப்பட்ட விதத்தை பூக்கள் உதிர்தல் என்றும் உவமானங்களை மட்டும் எடுத்துக்கூறி கவித்துவ நடையில் கவிஞர் வெற்றி பெற்றுள்ளார்.

வெளிநாட்டில் நடக்கும் சர்வதேச கருத்தரங்குக்கான கலை நிகழ்ச்சி என்பதால் தொழில் முறைக் கலைஞர்களை அழைத்து வராமல் பள்ளி மாணவிகளை அழைத்து வந்துள்ளனர்.

விருந்துக்கு முன்பாக

குளிர் அரங்கைச் சூடாக்கும்

சிறப்பு நிகழ்வு ஒன்றில்

பறைகளும், தவிலும்,

சதங்கைகள், நாயனத்தோடு இசைந்து

அவர்கள் மேடையின்

நேர்கோட்டில் ஆடிவர

பள்ளிக்கல்வி முற்றுப்பெற்றதா

என்ற விதை முளைக்கிறது.

இவ்வரிகளில் இளம் மாணவிகளை நிகழ்கலைக் கூத்துக்காக நாடு விட்டு நாடு அழைத்துவந்து

குளிரூட்டப்பட்ட அரங்கில் ஆட வைத்துள்ளனரே என்ற ஆதங்கமும் இரு சிறுமிகள் பள்ளிக் கல்வியை முடித்து இருப்பார்களா என்ற கவலையும் கவிஞருக்குத் தோன்றுகின்றது.

ஐந்து நட்சத்திர விடுதியில் சர்வதேசக் கருத்தரங்கில் நாட்டுப்புறக் கலைகலை நடத்துவதற்கான காரணம் மரபுக் கலை புதுவீச்சேறுகிறது என்ற எண்ணத்தை வந்திருப்பவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதே ஆகும்.

விடுதியின் வாசலில்

வெண்சுண்ணச் சுவர்களில்

சோழர் கால நாட்டிய மணிகள்

பிளாஸ்டர் ஆப் பாரிஸுக்கு மாறி

வாத்தியக் கருவிகளுடன்

புடைத்து நிற்கிறார்கள்.

முற்றத்தில் சில பனை மரங்களும்,

பாக்கு மரங்களும்,

நஞ்சை காட்டு பறவைகளைத் துறந்து

நிற்கின்றன.

பனை மரப் பொந்துகளில் கிளிகள் ஏராளமாக குடியிருக்கும். ஆனால் இங்கே இருக்கும்பனை மரங்களிலும் பாக்கு மரங்களிலும் பறவைகளைக் காணோம். மரங்கள் இருக்கும் இடத்தில் பறவைகள் இருப்பது இயல்பு. பறவைகளுக்கு உணவும் உறைவிடமும் அங்கு உண்டு. ஆனால் இங்கே நிற்கும் மரங்களால் இயற்கை உயிரினங்களுக்கு எவ்விதப்

பயனும் இல்லை என்ற கவலை இக்கவிதையில் புதைந்துள்ளது.

காட்டாளன்

மானுட வரலாறு உணவு சேகரிப்பு சமூகமாகத் தொடங்கி வேட்டைச் சமூகமாக வளர்ந்து, வேளாண் சமூகமாக உயர்ந்து, இன்று மின்னியல் மற்றும் தொலைத்தொடர்பு சமூகமாக நிலை பெற்றுள்ளது. ஒவ்வொரு கட்ட வளர்ச்சியின் போதும் இயற்கையும் மனிதனின் அறிவும் இணைந்து செயல்பட்டுள்ளது. வேட்டைச் சமூகத்தில் இருந்து நதிக்கரை நாகரிகம் தோன்றிய போது வேட்டைக்கு பயன்பட்ட காடுகள் அழிக்கப்பட்டன. வயல்கள் உருவாகின. காடு கொன்று நாடாக்கிய மன்னன் என்று சங்க காலத்தில் மன்னர்கள் புகழப்படுகின்றனர்.

தற்காலத்தில் காடுகளை அழிக்கும் போது அங்கு வாழும் மனிதர்களை அவ்விடத்தை விட்டு அப்புறப் படுத்துகின்றனர். அவர்களில் சிலரை மட்டும் அங்கு வேலை செய்யும் கூலிகளாக்கிவிடுகின்றனர். அப்போது அவர்களுக்கு எதனால் இந்தக் கொடுமைகள் நிகழ்கின்றன என்ற காரணம் புரியாமலேயே அவர்கள் தங்களின் வாழிடத்தை இழந்து அனாதைகளாக வேறு இடங்களுக்குக் குடிபெயர்வதுண்டு. வெள்ளையர் ஆட்சியில் அடர்ந்த காடுகளை அழித்து அங்கு தேயிலை, காப்பி எனப் பணப் பயிர்களை விளைவித்து நல்ல இலாபம் பார்த்தனர். இதன் தொடர்ச்சியாக சுதந்திரம் கிடைத்த பிறகு இந்தியர்களும் மலைகளில் பணப் பயிர் விவசாயம் செய்தனர். வெள்ளையர்களை விட இந்தியர்கள் இன்னும் அதிகளவில் காடுகளை அழித்து நிலங்களைப் பெருக்கி வனவளத்தைக் குறைத்துப் வர்த்தகத்தை அதிகரித்தனர்.

காட்டை அழிக்கும் கொடுமையைக் கண்டு மனம் நொந்த கவிஞர் எழுதி ஆவணப்படுத்திய கவிதையே காட்டாளன். இவன் காட்டை ஆள்பவன்; எழுத்தாளன், பேச்சாளன் போல இவன் காட்டை ஆளும் காட்டாளன். இவனை அவனது இடத்தை விட்டு அடித்துத் துரத்தி சுட்டுக் கொல்வது வன்கொடுமை அல்லவா?

காட்டாளன் என்ற கவிதையில் மலைவாழ் மக்களின் மகிழ்ச்சியில் தொடங்கி அவர்கள் கொடூரமாக அப்புறப்படுத்தப்படுதலின் துயரத்தைக் கவிஞர் மென்மையாகப் பதிவு செய்து முடிக்கின்றார்.

சருகுகள் மிதந்து

சப்தமெழுப்ப வில் அம்பு தூக்கி

சீழ்க்கை ஒலியுடன்

நடக்கும் காட்டாளன்

என்ற வரிகளில் அவனது மகிழ்ச்சி துல்லியமாக உணர்த்தப்படுகிறது. அவன் பறவைகளோடு எழுந்து பறவைகளோடு உறங்குகின்றவன். .

பறவைகளின் கானம்

காட்டின் ஏகாந்தக் கூட்டொலியுடன்

விடியல் கேட்டு

கானகத்து மேழி உழுதிட

சாமை தினை கொள்ளு துவரையென

விதைத்துண்டு.

பாறைகளில் படுத்துறங்கிய

வட்டப் பாறைகளில் இன்றும் அழியாத

வாழ்க்கைச் சிறபங்கள்

என்று காட்டாளனைப் பாறைச் சிற்பங்களாகக் கவிஞர் காண்கிறார். அவனுடைய வாழ்வின் கணங்கள் கானொளிகளோடு கலந்தன. அவன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்பவன்

மலைக்காடுகளில்,

தேனெடுத்து தினை மாவிடித்து

உருண்டை தின்று

தொலைதூர சமிக்ஞ்சைகளில்

ஒலிக் குறிப்புகளில்

தொல்குடியின் மொழி விதைகள்

அவனுடையவை. அவனுடைய மொழி கூர்மையானது, நுட்பமானது என்று கவிஞர் பாராட்டிக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு இருந்து வந்த வேளையில்

சீர் கெட்டு நின்ற நதிக்கரையின்

நவீன வாழ்வு

காலவெளியின்

பெரு விலங்கு விரட்டித்

தந்தம் எடுத்து அணி ஒன்று பூண்டு

காட்டு புள்ளின்

கறி சமைத்து

களி மயக்கத்தில்

மலைவெளியில் நகர மனிதன்

விடுமுறை கழித்தான்.

நதிக்கரை நாகரிகத்தைச் சேர்ந்த மனிதர்கள் தங்கள் விடுமுறைத் தலமாக மலைப்பகுதியைப் பயன்படுத்தி அங்கு வந்த விலங்குகளை வேட்டையாடி கறி சமைத்து உண்கின்றனர். இவர்களின் பொழுதுபோக்கு தலமாக மலைப் பகுதிகள் அமைந்துவிட்டதால் அங்கு உள்ள மலைவாழ் மக்கள் இவர்களுக்குக் கட்டுப்பட்ட அடிமைகளாக மாறி வருகின்றனர்.

பயிரிட்ட மலை நிலம்

பாழாய்ப் போயிட

மீண்டும் சரணாலயம்

தோன்றுகின்றது. புதுக் காட்டின் நடுவே தோட்டம் போட்டு வணிகம் கண்டதும் தோழமை போயிற்று. பணம் வர வர பணக்காரர்கள் காட்டில் வாழும் மக்களைக் கரிசனையோடு அணுகாமல் அவர்களைக் காட்டுமிராண்டிகளாகக் கருதி மிரட்டி வெளியேற்ற முயன்றனர். அவனுடைய நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அவனை அரட்டி மிரட்டி அனாதை ஆக்கிட அவர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தவும் தயங்க வில்லை.

கானுயிர்

செய்யாக் காரியம் செய்தது கண்டு

குருதியோட்டத்தில் மறையும் உறைந்தது

பறவைகள் மௌனம் காத்தன.

என்கிறார் கவிஞர். யாரும் செய்யத் துணியாத கொடூரச் செயலை நதிக்கரை நாகரிகம் கற்ற மனிதன் காட்டாளனுக்குச் செய்துவிட்டான்

சாம்பல் புகை நடுவில்

சீருடை மாந்தர்

டப்டுப்பென

புகைமூட்டம் நடுவே

தெரிந்த காட்டாளனின்

ஓட்டம் தடுத்து

தடியடிகள் ஒரு நூறு விழுந்தன.

உயிரற்ற சடலத்தின் மீது

என்ற வரிகள் மலைவாழ் மக்களை விரட்டி விரட்டி அடித்துச் சுட்டுக் கொன்றதை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளன. சில தடியடிகள் இறந்து கிடந்த பிணங்களின் மீதும் விழுந்தன. இவ்வாறு மண்ணின் மைந்தனை கட்டையால் அடித்தும், துப்பாக்கியால் சுட்டும் கொன்று போட்டனர். உயிருக்குப் பயந்து ஓடியவனை ஓட ஓட விரட்டினர். பலர் அடிபட்டு அங்கேயே உயிர் விட்டனர்.

பெருங்காயம் நடுவே

குடிமை விதைகள்

கசக்கும் அருவி நீர்

குருதித் துளிகளில்

என்ற வரிகள் கானகத்துக்குள் நகரத்து நாகரீக மனிதர்கள் அனுப்பிய காவல் துறையினரால் அடிபட்ட மலை வாழ் மக்களின் இரத்தத்தால் அங்குள்ள மலையருவி நீரும் கசந்துவிட்டது. இக்கவிதை சொந்த நிலத்தை வந்த மனிதருக்கு கொடுத்துவிட்டு வாழ்விடம் இழந்து நாடோடிகளாகப் போன காட்டாளனின் கவலைகளைக் கண்ணீர் கவிதை ஆக்கியுள்ளது.

‘வேறு’ காட்டும் வேறுபாடு

நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான வாழ்வியல் போக்குகளின் வித்தியாசங்களை

எடுத்துரைக்கும் ‘வேறு’ என்ற கவிதை முரண் சுவையுடன் கூடியதாகும். இக்கவிதையில் பெருநகரத்தில் கறிக் கோழி இறைச்சியை வாங்கிச் செல்லும் ஒருவனை விரட்டிச் செல்லும் பல்லில்லாத நாய்; அந்நாய்க்குப் பயந்து அவன் விரைவாகத் தன் வண்டியை எடுத்துக் கொண்டு போகும் போது அவனுக்கு முன்னே செல்லும் வாகனங்களின் கரும்புகை அவனது வழியை மறைத்து எரிச்சலை ஊட்டுகிறது. இக்காட்சியில் நகரத்தில் ஒருவனால் நிம்மதியாக மூச்சு விடக் கூட முடியவில்லை என்ற பரிதாப நிலை உணர்த்தப்பட்டுள்ளது.

சில நூறு கல் தொலைவில்

மண்சுவர் தாங்கிய ஓலைக் குடியிருப்பில்

காட்டுக் கோழி குழம்பு கொதிக்கிறது

கல்லடுப்பில்

என்ற வரிகள் ஒரு கிராமப் பகுதியில் காட்டுக் கோழியை அறுத்து ஒரு பெண் தன் ஓலைக் குடிசையின் வாசலில் உள்ள அடுப்பில் சமைக்கும் காட்சி முரண் சுவை பட அமைந்துள்ளது. அவளருகே ஒரு சிறுவன் பெருவாகை நிழலின் கீழ் கல் தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருக்கிறான். அவளது கணவன் மரத்தடியில் கூடை முடைகிறான்; மூங்கில் அரிசி சோறாக்கும் அவள் குடிசைக்கு அருகே மலையருவி ஒன்றின் ஓசை கேட்கிறது. இந்த இயற்கைச் சூழலில் எழில்மிகு இடத்தில் ஒரு கணவனும் மனைவியும் தன் குழந்தையோடு வசிக்கின்றனர்.

முதலில் நகரத்தின் காற்று மாசுவையும் பின்னர் மலைக் கிராமம் ஒன்றில் உள்ள சுத்தமான காற்று மற்றும் அருவி தண்ணீரையும் ‘வேறு’ என்ற தலைப்பில் கவிஞர் இணைத்து காட்டுகிறார். இயற்கைப் பின்னணியில்

அமைந்த வாழ்வு ஒரு மனிதனுக்கு நல்ல உடல் நலத்தை நோயற்ற வாழ்வையும் தருகின்றது. நகரத்து வாழ்க்கை அவனுக்கு உணவிலும் உடலிலும் நஞ்சை ஏற்றுகின்றது. செயற்கைத்தன்மை மிகுந்த கறிக்கோழியைத் தின்பதால் நாய் கூட பல்லில்லாமல் நலிந்து போய்விட்டது. .

இயற்கைக் கவிஞர் முத்தமிழ் விரும்பி தன் கவிதைகளில் நகரமயமாக்கலின் நச்சு விளைவுகளையும் இயற்கை அளிக்கும் இன்பச் சூழ்நிலைகளையும் பல வகையிலும் கவிதைகளின் பாடு பொருளாகக் கொண்டு நகர்மயமாக்கம் மற்றும் மேனிலையாக்கம் என்ற உலகளாவிய பிரச்சனைகள் சார்ந்த வன்மையான கருத்துக்களை வாசகரின் உள்ளம் நோகாத வகையில் ஆனால் அறிவில் உறுத்தும் முறையில் மென்மையாகவும் திண்மையாகவும் எடுத்துச் சொல்லும் பாங்கினை திட்டி வாசல் பெண்ணொருத்தி என்ற நூலில் காணலாம்.

5. படிம உத்தியும், படிம வகைகளும்

'மகாகவி பாரதியின் காலத்தில் இருந்து நவ கவிதை என்ற பெயரில் புதுக்கவிதை என்ற ஒரு இலக்கிய வகை வெகுவாகப் பரவத் தொடங்கிற்று. அவர் வசன கவிதை எனத் தொடங்கியது எஸ்ரா பவுண்ட்டின் புல்லின் இதழ்களுக்குப் பிறகு புதுக்கவிதை என்னும் புது இலக்கிய வகையாக விரைந்து பரவியது. மரபுக் கவிதைக்கு அணி நயம் போன்று புதுக்கவிதைக்கு படிமம், உவமை, உருவகம், அங்கதம் போன்றவை ஆற்றல் மிகு புதுக் கவிதை உத்திகளாக விளங்கின.

படிமம் [Imagery]

எஸ்ரா பவுண்ட், அமி லோவல், லாரன்ஸ் வில்லியம், கார்லோஸ் போன்றோர் படிமங்களைப் பயன்படுத்துவதில் சிறந்து விளங்கினர். புதுக்கவிதையின் முக்கிய உத்தியாகப் படிமம் கொள்ளப்படுகிறது. 'உவமை உருவகங்களின் பரிணாம வளர்ச்சியைப் படிமம் என்கிறார்கள் என்று கலாநிதி என். கைலாசபதி தெரிவிக்கிறார். படிமங்களைப் பிம்பம் அல்லது உருக்காட்சி என்றும் அழைக்கின்றனர். 'உவமை உருவகம் ஆகியன மேலும் இறுகிய நிலையில் படிமம் தோன்றுகிறது என்பாரும் உளர். இது முற்றுருவகம் போல் அமைந்து ஒரு காட்சியை விளக்குகிறது, என்று படிமத்தையும் உருவகத்தையும் சிலர் இணைத்துக் காண்கின்றனர். அங்கதம், முரண், சிலேடை, இருண்மை போன்றவை புதுக்கவிதை உத்திகளாக இருந்தாலும்

குறியீடும் படிமமுமே முக்கிய உத்திகளாக புதுக்கவிதைக்கு வலிமை சேர்க்கின்றன.

கவிதை உத்திகள்

ஒரு கருத்தைப் புலப்படுத்த கவிஞர் தெரிவு செய்யும் தொழில்நுட்பம் அல்லது கருவி உத்தி எனப்படுகிறது. புதுக்கவிதை உத்திகளில் குறியீடு என்பது மிகப் பரவலாகப் பலரது கவிதைகளிலும் இடம்பெற்றுள்ளது. ஒவ்வொரு சொல்லும் ஒரு குறியீடாக இருந்தாலும் கூட ஒரு சொல் மற்றொன்றையும் சுட்டுவதே குறியீடு எனப்படுகிறது. புதுக்கவிதைகளில் வழங்கும் குறியீடுகளை இயற்கை குறியீடு, தொன்மக் குறியீடு, வரலாற்றுக் குறியீடு, இலக்கியக் குறியீடு என்று பல வகைப்படுத்துவர்..

குறியீடும் படிமமும்

மொழியைக் கவிதையாக்கும், அருமையான கருவி படிமம் ஆகும். படிமம் சுருக்கமாகவும் விடுகதைத் தன்மை நிறைந்ததாகவும் விளங்கும். படிமம் ஐம்புலன்களால் உணரக்கூடியதாகவும் நிறம், மணம், குணம் ஆகியவற்றைக் காட்டுவதாகவும் விளங்கும்.படிமம், குறியீடு ஆகிய இரண்டும் ஒன்றேயாயினும் படிமம் குறியீட்டை விட ஒருபடி உயர்ந்ததாக கொள்ளப்படுகிறது, குறியீடு என்பது சொற்களால் விளக்கப்படுகிறது, ஆனால் படிமம் என்பது சொல்லுக்குரிய அகராதிப் பொருளைக் கடந்த நிலையில் இன்னும் சில தொலைவு பயணப்பட்டு வாசகனின் மன அனுபவத்தால் உணரப்படுகின்றது. எனவே குறியீட்டுக்கு ஒரே பொருள் இருக்க படிமத்தால் பல பொருட்களும் பல உணர்வுகளும் கிடைக்கின்றன.

படிமமும் குறியீட்டு வகைகளில் ஒன்றே என்றாலும் கூட படிமம் சாதாரணக் குறியீடுகளை விட ஒருபடி மேலானது. குறியீடு என்பது ஒரு பொருளை

விளக்கும். ஆனால் படிமம் என்பது வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளை அவரவர் அனுபவத்திற்கும் வாசிப்புக்கும் ஏற்ப வழங்கும்.. எனவே ஆர். டி லூயிஸ் சொற்களால் வரையப்படும் ஓவியமே படிமம் என்கிறார்.

சொற்களால் தொடுக்கப்படும் மாலையாக கவிதை விளங்குகிறது என்பது பொது வழக்கு. ஆனால் படிமம் என்பது சொல் என்னும் தூரிகையால் தீட்டப்படும் ஓவியத்துக்கு வண்ணம் ஊட்டுகிறது. கவிதையைச் செம்மைப்படுத்தவும், சிறப்புப்படுத்தவும், தெளிவுபடுத்தவும் படிமம் உதவுகிறது. கவிதையைக் காட்சியாகத் தோற்றுவிக்கும் ஆற்றல் படிமத்துக்கு உண்டு. எனவே 'படிமம் புதுக்கவிதையின் ஜீவநாடி, சத்தூட்டும் டானிக்' என்பார் சி. சு. செல்லப்பா. நேரடியாகச் சொல்லாமல் அதனுடைய பண்புகளையும் செயல்பாடுகளையும் எடுத்துரைத்து. இது என்ன? என்ற கேள்வியை மறைவாக நிறுத்தி வாசகரின் அறிவுக்கு வேலை கொடுக்கும் புதிராகவும் படிமம் அமைகிறது.

படிமத்தின் வகைகள்

படிமங்களைக் இலக்கியத் திறனாய்வாளர்கள் பலவகைப்படுத்துகின்றனர். அழகியல், கொள்கை, அங்கதம், நிகழ்ச்சி என்றும் படிமங்கள் பல வகைப்படுகின்றன. இது தவிர முரண் பொருள், புதுமைப் படிமம், தொன்மப் படிமம், மிகை நவிற்சிப் படிமம், தத்துவப்படிமம், இளிவரல் படிமம் என்று கவிஞர் மித்ரா வகைப்படுத்துகிறார். கவிஞர் சிற்பி இவ்வகைப்பாடுகளை இன்னும் சுருக்கி சமயப் படிமம், தொன்மைப்படிமம், மூலப்படிமம், அடிக் கருத்துப்படிமம், இயற்கைப் படிமம், தன்னியல்பு படிமம் என்கிறார்.

படிமத்தை மனப்படிமம், அணிப்படிமம், குறியீட்டுப்படிமம் எனவும் வகைப்படுத்துவது உண்டு.

மனப்படிமம் என்பது, ஐம்புலன்களால் ஆன காட்சியாக ஐம்புலன்களுக்கு விருந்து வைக்கும் காட்சியாக அமையும். அணிப்படிமம் என்பது இலக்கிய மொழி நடையைக் கொண்டு இலக்கிய அழகு மிளிரத் தோன்றும் படிமம் ஆகும்.

குறியீட்டுப் படிமம் புரியாத உண்மைகளை ஒரு குறியீட்டின் மூலமாக உணர்த்த முயலும். அனைவரது கவிதைகளிலும் அனைத்து வகை படிமங்களும் இருப்பதில்லை. இன்னும் சிலர் படிமமே இல்லாமலும் கவிதை படைக்கின்றனர். ஆனால் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் படிமங்கள் ஏராளமாகக் காணக் கிடைக்கின்றன. மேலும் படிமங்கள் பல வகைப்பட்டனவாகவும் திகழ்கின்றன.

மனப்படிமம்

ஐம்புலன்களின் செயல்பாட்டை விரும்பும் மனப்படிமம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு காணலாம்.

வடு

பச்சை மண் கலயத்தில்

நுழைந்த சிறு பாம்பு குட்டி

உன் நினைவை அழைக்கிறது.

வற்றிக் காய்ந்த

கள் குடத்தைத்

தழுவி நிற்கும் சிறுதுளிகள்

சொல்லுமந்த புளிப்பின் வாடை

இக்கவிதை ஒரு படிமக் கவிதையாகும். பச்சை மண் கலயத்தில் நுழைந்த பாம்பு குட்டி ஒரு ஓவியமாக காட்சிப் படிமமாக நம் கண்முன் தெரிகின்றது.

அதேவேளையில் அங்கிருக்கும் ஒரு காய்ந்த கள்குடத்தில் காணப்படும் சிறு துளிகள் அந்தக் குடத்தில் இருந்த கள் நுகரப் பட்டதற்கான அடையாளத்தை தன் புளிப்பு வாடை மூலமாகக் காட்டுகிறது.. பாம்பு குட்டி வளையத்துக்குள் நுழையும் கண், மூக்கு என புலன்கள் சார்ந்த சுவையை காட்டிய இப்படிமம் கட்புலன் ஆகிய காட்சிக்கும் கள் குடத்தின் புளிப்பு வாடை நுகர்ச்சிக்கும் உரியவற்றை நுட்பமாக உணர்த்திய மனப்படிமமாகும்.

அழகியல் படிமம்

அழகியல் படிமத்தில் அழகான ஒரு காட்சி விவரிக்கப்பட்டு அதன் மூலமாக வேறொன்று உணர்த்தப்படுகிறது. 'ஒரு பறவையின் இருத்தலியம்' என்ற கவிதையில் மரத்திற்குள், மரத்தின் கிளைகளில் அமர்ந்திருக்கும் ஒரு பறவையின் குரலைக் கொண்டே அங்கு ஒரு பறவை இருக்கின்றது என்பதை உணர்கின்றனர். இக்காட்சியில்

சுடர் வேம்பின்

கிளைகளைக் குலுக்குகிறது.

மது குரல்

என்ற வரிகள் பறவையின் குரலின் இனிமையை எடுத்துரைக்கின்றன. இவ்வரி இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று பாரதியார் பாடிய வரிக்கு நிகரானதாகும். குரல் செவிக்கு இனிமை தரும்; மது நாவுக்கு சுவை அளிக்கும், இந்தப் படிமத்தில் 'மதுக்குரல்' என்பது நாவுக்குரிய சுவையைச் செவிக்கு ஏற்றிவழங்கியது.

'சுடர் வேம்பு' என்ற தொடர், வேப்பமரத்தின் இளம் தளிர்கள் சூரிய ஒளி பட்டு மின்னுவதைக் குறிக்கின்றன. சுடரைப் போல ஒளிதரும் வேப்பமரத்து

இலைகள் என்பது சுடராக ஒளிர்கின்ற வேம்பு என அழகாக விளக்குகின்றது. அப்பறவையின் குரலைக் கவிஞர்

அதிகாலைப்

பொழுதை உணர்த்தும்

ஒளி கிண்ணத்துள் வழியும் ரசக்

கிண்ணமாய் உன் குரல்

என்று புனைந்துரைக்கிறார்.

முற்காலத்தில் 'மெர்குரி பெண்டுலம் கிளாக்' என்ற பெயரில் பாதரசம் பயன்படுத்தப்பட்ட கடிகாரம் உண்டு. அந்த கடிகாரத்தின் டிக் டிக் டிக் டிக் ஒளிக்கு நிகராக இந்தப் பறவையின் குரலும் கேட்கிறது. ஆக 'ரசக் கிண்ணமாய் உன் குரல்' என்றது ஓசையின் பிரதிபிம்பம் ஆகும்.

ஒரு பறவையின் இருத்தலியம் என்ற கவிதையில் பறவையின் குரல் ஒரு படிமமாகும். இப்பறவையின் குரல் விட்டு விட்டு கேட்கின்றது, கேட்க இனிமையாக இருக்கின்றது இக் குரல் ஒன்று தான் பறவையின் இருத்தலை அறிந்துகொள்ள உதவுகின்றது. அது தவிர பறவை அங்கு இருப்பதற்கான எந்த அடையாளமும் பார்ப்போரின் கண்களுக்குத் தென்படவில்லை. ஆக இந்தப் படிமத்தின் மூலம் அவரவர் அனுபவத்திற்கு ஏற்ப பறவை என்பது எதைக் குறிக்கின்றது. குரல் என்பது எதனைக் குறிக்கின்றது என்று பொருள் உணர்ந்து கொள்ளலாம்.

'வறட்சியின் பாடல்கள்' கவிதைத் தொகுப்பின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு முன்னுரை வழங்கிய ஆங்கிலப் பேராசிரியர் ஜெஹோசன் ஜிரேஷ்

தொகுப்பின் முதல் கவிதையான 'ஒரு பறவையின் இருத்தலியம்' கவிதையை ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிடுகிறார். The bird in the opening poem, resembles Wordworth's 'Ethireal Minstrel' and Shelley's 'Blithe Spirit'. The bird is invisible and the voice alone is an inspiration, *என்று குறிப்பிட்டுள்ளார்.*

ஓர் இளைஞன் இக்கவிதையை வாசித்துவிட்டு அண்டை வீட்டில் இருக்கும் இளம்பெண்ணின் குரல் வழியாக அவளின் இருப்பு உணரப்படுகிறது, ஆனால் அவள் உருவத்தைக் காண இயலவில்லை என்றும் கருதலாம். ஆனால் இவ்வளவு எளிய விஷயத்துக்கு கவிஞர் படிம உத்தியைக் கையாண்டிருக்க மாட்டார். மேலும் ஒரு பறவையின் இருப்பு என்று பெயர் வைக்காமல் இருத்தலியம் என பெயர் சூட்டியதன் காரணத்தையும் சேர்த்து ஆராய வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இனத்துக்கும் சமூகத்துக்கும் தங்களின் இருப்பை உணர்த்துவதற்கு ஒரு குரல் தேவைப்படுகின்றது. அந்தக் குரல் அவர்களுக்கான உரிமைக் குரலாகவும் இருக்கலாம். குரல் இருப்பவனே தன்னுடைய இருப்பை உணர்த்த முடியும். குரல் [voice] என்பது ஒரு சமுதாயத்தில் செல்வாக்கையும் சேர்த்துக் குறிக்கிறது. குரல் இல்லாதவனை செல்வாக்கு இழந்தவனாகக் கருதி இச் சமுதாயம் அவனைக் குரலற்றவனாகக் கருதி voiceless - வாய்ஸ் லெஸ் என்று முத்திரை குத்திவிடுகிறது. 'பேசாதே வாயை மூடு' என ஒருவனைப் பார்த்து சொன்னால் அவனுக்கு பேச்சுரிமையோ கருத்துரிமையோ இல்லாதவன் ; ஓர் அடிமை. அதிகாரம் எதுவும் இல்லாதவன் என்பதே பொருள். அவனை இச்சமுதாயம் தன்னிடமிருந்து விலக்கி வைக்கும்.

ஒருவன் தன் குரலை உயர்த்திப் பேசும் போது அவன் உயர்ந்த இடத்தில் இருப்பதாகவும் உயர்ந்த தகுதி பெற்றவனாகவும் கூட கருதப்படுகின்றான். 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்ற பழமொழி ஏழையின் பேச்சை பொது மன்றத்தில் எவரும் மதிக்க மாட்டார்கள் என்ற பொருளைத் தருகிறது. ஏழையும் இல்லாதவனும் தன்னுடைய குரலை உயர்த்திப் பேசுவது இல்லை அவனுடைய குரல் கம்மிய குரலாகவே, தாழ்ந்த குரலாகவே இருக்கின்றது. எனவே குரலின் மூலமே ஒரு மனிதனின் ஒரு சமுதாயத்தின் இருப்பு உணரப்படுகிறது. தரம் கணிக்கப்படுகிறது. பறவையின் குரலும் அதன் இருத்தலை *[Existence]* குறிக்கிறது.

ஒரு மொழியின் மூலமாகவே ஒரு சமுதாயத்தின் அல்லது ஓர் இனத்தின் இருப்பும் தகுதியும் வெளி உலகுக்கு உணர்த்தப்படுகின்றது. ஒரு மொழிக்கான செல்வாக்கே ஓர் இனத்துக்கான செல்வாக்காக அமையும். இங்கு குரல் என்ற படிமம் ஒரு தனி மனிதனின் ஒரு இனத்தின் குரலை மட்டுமல்ல அந்த இனத்தின் மொழியின் செல்வாக்கையும் சேர்த்துக் குறிக்கின்றது. எந்த ஓர் இனமும் அவர் தம் மொழியில் அரங்கத்திலும் அரசியலிலும் நீதி மன்றத்திலும் சட்டமன்றத்திலும் பேசவும் எழுதவும் செல்வாக்குப் பெற்று இருக்கின்றதோ அந்த மொழியைப் பேசும் இனம் உயர்ந்த இடத்தில் இருக்கும் இனமாகக் கருதப்படும்.

மொழியற்றோர் குரல் அற்றோர் ஆவர். ஒவ்வொரு சமூகமும் இனமும் தன்னுடைய மொழியைப் பாதுகாத்து பயன்படுத்த வேண்டும். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றாலும் அவர்தம் தாய்மொழியின் சிறப்பை உணர்வதும் உணர்த்துவதும் அம்மொழி பேசுவோனின் தலையாயக் கடமை ஆகும். அவனது கருத்துக்களை அவன் தனது மொழியில் வெளியிடும் சுதந்திரமும் திறமும் பெற்றிருக்க

வேண்டும். அப்போது அவனது இருத்தல் மதிப்பு மிகுந்ததாக அமையும்.

ஒருவன் தன் மொழியின் சிறப்பை உலகறியச் செய்யும் போது அம்மொழி பேசும் இனத்தார் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுவர். இவ்வாறு படிமம் என்பதில் இருந்து அல்லது ஒரு படிமக் காட்சியிலிருந்து அடுக்கடுக்காக பொருளை அடுக்கிக் கொண்டே போகலாம். இக்கவிதையில் இப் படிமத்தில் இருக்கும் இயற்கை நிகழ்வான பறவையின் குரல் இத்தகையப் பொருள் நீட்சிக்குக் காரணமாக உள்ளது.

தொன்மப் படிமம்

ஒரு புராண அல்லது இதிகாசக் கதாபாத்திரத்தை வைத்து உருவாக்கப்படும் படிமம் தொன்மப் படிமம் ஆகும். தொன்மப் படிமம் அத்தொன்மக் கதாபாத்திரம் சார்ந்த முக்கியக் காட்சியை நம் கண்முன் நிறுத்தி அதன் வாயிலாக நமக்கு ஒரு பேருண்மையை உணர்த்த முனைகின்றது.

கட்டைவிரல் வெட்டுண்ட

கதாபாத்திரமாய்த் திமிறி

தான் வளரும் மண்சட்டி

உடைக்கும்

குறுந்தாவரம்

என்ற கவிதை **திமிறல்** என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது.

கவிதையில் சுட்டப்பட்ட ‘கதாபாத்திரம்’ என்ற சொல் ஒரு புராணக் கதாபாத்திரத்தை நமக்குச் நினைவூட்டுகிறது. அரச குடும்பத்தினருக்கு மட்டுமே

போர் வித்தைகளைக் கற்றுத் தரும் துரோணரிடம் அவருக்கே தெரியாமல் மறைவாக நின்று வில் வித்தையைக் கற்றுக் கொண்டவன் ஏகலைவன். துரோணருக்கு இவ்வுண்மை தெரியவந்ததும் அவர் தனக்குக் குருதட்சணை தர வேண்டும் என்று அவனிடம் கேட்டுத் தந்திரமாக அவனுடைய வலது கை கட்டைவிரலைப் பெற்று விடுகிறார்.

ஏகலைவன் தனது கட்டைவிரலைக் கொடுத்துவிட்டால் அவனால் இனி வில்லை இழுத்து வளைத்து நாணேற்ற இயலாது. அவன் கற்ற வில் வித்தை பயனற்றுப் போய்விடும் என்று கருதினார் துரோணர். அவன் தன்னிடம் வந்து அனுமதி பெற்று கற்காததனாலும் அவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்ல என்பதனாலும் அவனுக்கு வில்வித்தை பயன் அளிக்கக் கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் சூழ்ச்சியாக அவன் கட்டைவிரலைத் துரோணர் தட்சணையாகப் பெற்றார்.

ஏகலைவனின் வாழ்க்கை நிகழ்ச்சியை நினைவில் கொண்ட கவிஞர் இதனையும் மீறி அவன் வளர்ந்திருக்க வேண்டும் என்ற கருத்தில் அவனைத் தன் கவிதையில் தொன்மப் படிமம் ஆக்கினார். ஏகலைவன் தன்னுடைய வளர்ச்சிக்கு இடைஞ்சலாக இருந்த துரோணரை மண் சட்டியாகக் கொண்டு அந்த சட்டியை உடைத்துக் கொண்டு வெளியே வந்து வெயில் முகம் நோக்கிய குறும் தாவரமாக வளர வேண்டும் என்பதால் ஏகலைவனைப் படிமமாக்கி இக்கவிதையை உருவாக்கியுள்ளார். இங்கு ஏகலைவன் என்பது அவனை மட்டும் சுட்டவில்லை ஒடுக்கப்பட்டவர் அனைவருக்கும் அவன் ஒரு குறியீடாக இக்கவிதையில் காட்டப்பட்டுள்ளான். இதனால் தான் குறியீடும் படிமமும் ஒன்றென்றாலும் குறியீட்டை விடப் படிமம்

ஆற்றல் மிக்கது என்று புதுக்கவிதை திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஏகலைவன் தன் இடது கையாலும் வில்லில் இருந்து அம்பு விடும் முறைகளைப் பயின்றிருந்ததனால் அவனுக்கு வலது கட்டை விரல் இழப்பு பெரிய இழப்பு இல்லை. அவனால் அதன் பிறகும் வில் வித்தையில் ஒளிர முடிந்தது என்ற கதை அவனது திமிறல் பண்பையும் அவனது வளர்ச்சியையும் எடுத்துக் காட்டுகிறது.

அரச குடும்பத்தினரும் அவர்களுக்கு வில்வித்தை கற்றுத் தரும் பார்ப்பனர் ஆகிய துரோணரும் உயர்ந்த சாதியினர். இவர்கள் ஏகலைவனுக்கு வித்தை தேவையில்லை. அவன் ஆதிக்க சாதியினருக்கு அடிமையாக இருந்தாலே போதுமானது என்ற ஒரு சமூகக் கட்டமைப்பை நிறுவி அவனுக்கு வித்தை பயன் தரக் கூடாது என அவனுடைய கட்டைவிரலை வெட்டிய கொடுமையைக் கண்டு கதறாமல் முயற்சி இருந்தால் அக்கொடுமையையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு மீண்டு வரத் தம்மால் முடியும் என்ற முனைப்பை 'திமிறல்' என்ற கவிதை ஆக்கப் பூர்வமாக உணர்த்துகிறது.

விரலை வாங்கிய நிகழ்ச்சி ஒடுக்கப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் உயர்சாதியினரால் நசுக்கப்படும் போது அவர்களை வெறும் மண் சட்டியாகக் கருதி முட்டிமோதி வெளியே வளர்ந்து வர வேண்டும். பெரிய கற்பாறைகளையே பசும் தாவரங்கள் பிளந்து வருகின்றன. இந்நிலையில் இந்த மண் சட்டி என்ன தடையை ஏற்படுத்தப் போகிறது; என்ற ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளிக்கும் கவிதையாக இக்கவிதையை கவிஞர் படைத்துள்ளார்.

‘கதாபாத்திரமாய்த் திமிறி’ என்ற வரி முன்னேற்றத்துக்குத் தடைகள் வரும், ஆனால் அவற்றைத் தகர்த்துத் ‘திமிறிக் கொண்டு வா திமிரோடு வா அடங்கி கிடைக்காதே; அடக்குமுறை கண்டு அஞ்சாதே’ என்ற கருத்துக்களை எடுத்துச் சொல்லும் வகையில் இந்த கவிதையின் படிமம் அமைந்துள்ளது. படிமம் அடுக்கடுக்காக அடுத்தடுத்த பொருளைத் தந்து கொண்டே செல்வதால் அது சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் உள்ளுறை உவமத்தைப் போன்றதாகும்.

நிகழ்ச்சிப் படிமம்

ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி அந்த நிகழ்ச்சியின் மூலமாக தான் சொல்ல வந்த கருத்தைப் படமாக்கித் தருவதே நிகழ்ச்சிப் படிமமாகும். காதலைப் பற்றி சிந்தித்திராத ஒருவனுக்கு திடீரென்று காதல் உணர்வுகள் தோன்றிவுடன் அவன் அதுவரை தான் தூக்கிக்கொண்டு திரிந்த நீண்ட துப்பாக்கியை ஒரு ஓரமாகச் வைத்துவிட்டு இதுவரை அவன் கவனித்துப் பார்த்த சருகுகளையும் வெயிலையும் சூறாவளியையும் தன் பார்வையில் இருந்து விடுவித்து, பூவாளியைத் தூக்கிக்கொண்டு புதுச் செடியை நட்டு அதற்குத் தண்ணீர் ஊற்றுகிறான். இந்நிகழ்ச்சி படிமமாக அமைந்து அவனுடைய வாழ்க்கையில் புதிய காதல் பயிர் வளரத் தொடங்குகிறது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது.

அவனுடைய தோழர்கள் இவனுடைய நடவடிக்கையை கூர்மையாகக் கவனித்து விட்டனர். உடனே அவன் நண்பர்களுக்கு அஞ்சி தன் காதல் களத்திலிருந்து வெளியேற நினைக்கின்றான். அவ்வேளையில் அவன் இதயத்தின் பூவிதழ்களை வருடிக் கொடுக்கும் வகையில் ஒரு சிறிய துளிர் காதல் செடியில் அரும்பியது. இக் கவிதையின் கடைசி வரிகளான,

பூவிதழ்களை வருட

கான்முளை

நெருங்கிக்கொண்டிருக்கிறது

என்பவை அவனுடைய காதல் துளிர்த்துவிட்டதை நமக்கு உணர்த்துகின்றது. ‘களம்’ என்ற தலைப்புடைய இக்கவிதை அவனுடைய களம் மாறிவிட்டது என்பதை நமக்கு நுட்பமாக உணர்த்துகின்றது. இந்த மாற்றமே காதல் நிகழ்ச்சிக்கு அஸ்திவாரமாக அமைந்தது. இதுவே நிகழ்ச்சி படிமமாகும்.

‘களம்’ என்ற கவிதைக்குள் எங்குமே காதலைப் பற்றிய ஒரு சொல் கூட இல்லை. ஆனால் அவனுடைய நடவடிக்கைகளை விவரித்த வகையில் அவனுக்குள் காதல் துளிர்த்து இருப்பதை வாசகரால் நுட்பமாக உணர முடிகிறது. மலரினும் மெல்லிது காதல் என்பதால் காதல் என்னும் நுண்ணிய உணர்வைப் படிம உத்தியின் மூலமாக நுட்பமாக சொல்லியதில் இக்கவிதை வெற்றி பெற்றுள்ளது.

தத்துவப் படிமம்

மனித வாழ்க்கையின் மாறாத தத்துவத்தை எடுத்துச் சொல்வதற்குப் படிம உத்தியை பயன்படுத்தினால் அது தத்துவப் படிமமாகும். ‘நிரந்தரம்’ என்ற தலைப்பிட்ட கவிதையில் ஒரு கண்ணாடிக் குடுவை பாடு பொருளாகிறது. கண்ணாடிக் குடுவையில் உருவாக்கத்தையும் தோற்றத்தையும் தவிர வேறு எதுவும் இக்கவிதையில் இடம்பெறவில்லை. ஆனால் இந்த கண்ணாடிக் குடுவையின் வருணனையே வாழ்க்கையின் போக்குக்கு இணையாகத் தரப்பட்டுள்ளது. வாழ்க்கையின் இயல்பு இங்குக் குடுவையின் தோற்றமாகக் காட்சியளிக்கிறது. கவிஞர்

வாழ்க்கையை குடுவையாக்கி அதனை ஓர் படிமக் காட்சியாக உணர்த்துகிறார்.

அடி பெருத்தும்

நுனி விரிந்தும்

தரம் பிரித்து

வனையும் வடிவத்தில்

எப்போதும் குறுகி கழுத்து நெறிப்பட்டு

அழுத்தம் கூடி

அந்த குடுவையின் குரல்வளை.

இதுதான் கவிதை. குடுவை என்பது மண்ணால் அல்லது கண்ணாடியால் வனையப்படும் வடிவமாகும். குடுவையின் கழுத்து நெறிபடுகின்ற இடத்தில் அழுத்தம் கூடி விடுகிறது. குடுவையின் மேல் பகுதி விரிந்தும் கீழ்ப்பகுதி பெருத்தும் இருக்கும் போது அதனுடைய இடைப்பகுதி மட்டும் குறுகித் தோன்றுகிறது. இந்நடுப்பகுதி நெறிபடுகிறது. இக்கழுத்துப் பகுதியில் அழுத்தம் கூடியதால் குரல்வளை நெறிக்கப்படுவதாக கவிஞர் காட்டுகின்றார்..

நிரந்தரம் என்ற தலைப்பு இக்கவிதை குறித்த சிந்தனையை விரிவாக்குகிறது. இது வெறும் குடுவை பற்றியதன்று. நிரந்தரமான ஒரு விஷயத்தைப் பற்றியது என்ற சிந்தனையை வாசகன் மனத்துள் எழுப்புகிறது. ஒரு குடுவையின் தோற்றமும் அதன் குரல்வளை நெறிக்கப்பட்டதுமாக ஒரு செயல்பாட்டையே 'நிரந்தரம்' என்று தலைப்புச் சுட்டுகிறது.

குடுவையில் இருக்கும் தத்துவம் என்னவென்று அறிய இக் கவிதையைப் பலமுறை வாசித்தால்

இக்கவிதை காட்டும் குடுவை சமூகத்தின் நிரந்தரத் தன்மையை உணர்த்துவதை உணரலாம். அடி பெருத்திருப்பது வலுவாக அமர்ந்திருக்கும் மேட்டுக்குடியினரையும் நுனி விரிந்திருப்பது ஏழை எளிய மக்களையும் இடையில் நெறி படுவது மத்தியதர வர்க்கத்தினரையும் குறிக்கும் தத்துவப் படிமமாகும்.

அடி பெருத்து காணப்படும் பகுதி எப்போதும் நிலையாக எவ்வித அசைவுமின்றி தவிப்பும் இன்றி மேசையில் உறுதியாக உட்கார்ந்திருக்கிறது. அதனை யாராலும் அசைக்க இயலாது. நுனி பகுதி விரிந்து பயனாளி வைக்க வேண்டிய பொருட்களை வைத்து பயன்படுத்த இடமளிக்கின்றது. இப்பகுதி ஏழை எளிய மக்களைக் குறிக்கிறது. அவர்களைத் தேவைப்படும் அளவுக்கு யாரும் சுரண்டிப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அவர்கள் மீது வேலைப்பளுவைச் சுமத்த முடியும். இதுவே நுனி விரிந்த பகுதியாகும். அவர்களுக்கு அங்கே முடியாது என்று சொல்ல வழியில்லை. அவர்கள் பொருளாதார ரீதியாகவும் மற்ற வகையிலும் சுரண்டப்படுவதால் பயன்படுத்தப்படும் பகுதியாக அமைகின்றனர்.

அடி மற்றும் நுனிப்பகுதி என இரண்டிற்கும் இடையிலான கழுத்து நெறிபடும் பகுதி இவ்விரு தரப்பினருடனும் சேர்ந்து இணைந்து செல்ல இயலாத நடுத்தர வர்க்கத்தினைக் காட்டுகிறது. இந்த நடுத்தர வர்க்கம் எப்போதும் அடி பெருத்த மேட்டுக் குடியினரோடு இணைந்து கொள்ள விரும்பும்; ஆனால் ஏழை எளிய மக்களோ நடுத்தரவர்க்கத்தினரோடு இணைந்து கொள்ள விரும்புவர். இரண்டிற்கும் இடையில் நெரிபட்டுக் கிடப்பது நடுத்தர வர்க்கமே ஆகும்.

குடுவையை எடுத்துப் பயன்படுத்த விரும்புவோர் நடுவிலுள்ள கழுத்துப் பகுதியைத் தான் அழுத்திப் பிடிப்பார்கள். அதுவே குடுவையின் மேல் பகுதிக்கும்

அடிப்பகுதிக்கும் இடையில் இரண்டையும் சமன்படுத்தும் நடுப்பகுதியாகும். இந்த அழுத்தத்தால் எப்போதும் கழுத்து நெறிபடுவது நடுப்பகுதி என்பதால் இங்குச் சுட்டப்படுபவர் நடுத்தர வர்க்கத்தினரே ஆவர். இதுவே நிரந்தரம். இத்தத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் குடுவையைப் பாடு பொருளாகக் கவிஞர் கண்டறிந்துள்ளார். இக் குடுவையைப் பாடுபொருளாகக் கவிஞர் இனங்கண்டு கொண்டதில் தான் இக்கவிதையின் வெற்றி அடங்கியுள்ளது.

கோவை ஞானி இக்கவிதை பற்றி வறட்சியின் பாடல்கள் என்ற முதல் பதிப்பின் முன்னுரையில் 'குடுவையைப் பற்றியது தான் கவிதை என்ற நினைப்பில் இரண்டு அல்லது மூன்று முறை ரசித்துப் படிக்கிற போதே இந்தக் குடுவை படிமமாகி நம்மைக் கலவரப்படுத்துகிறது. நாகரிக உலகில் நாமும் இப்படி கூனிக் குறுகி வேண்டாத இடத்தில் பெருத்து வேண்டிய இடத்தில் சுருங்கி, கழுத்து இறுகி திறக்க முடியாமல் வாய் திறக்க முடியாமல் அப்புறம் மூச்சுத் திணறி நம்மை நாமே அடைத்துக் கொள்கிறோம்' என்கிறார். இது தான் படிமத்தின் வெற்றி. அவருக்கு படிமம் வேறோரு பொருள் அளிக்கின்றது.

கவிதையைப் படிக்கும் ஆயிரம் பேருக்கு ஆயிரம் விளக்கம் தர வல்லது படிமம் ஆகும். அவ்வாறு பொருள் பலவாகப் பரிணமிக்கும் வகையில் தக்கதொரு ஒரு பொருளை அல்லது செயல்பாட்டை எடுத்து கவிதையாக்குவதில் படிமக் கவிஞரான தமிழ் இலக்கியச் செம்மல் முத்தமிழ் விரும்பி வியத்தகு வெற்றி அடைந்துள்ளார்.

முரண் பொருள் படிமம்

முரண் பொருள் படிமம் என்பது இருவிதமான முரண்பட்ட காட்சிகளைக் காட்டி அவற்றிற்கு

இடையிலான பொருண்மையை எடுத்துக்காட்டும் வகையில் படிமத்தைப் பயன்படுத்துவதாகும். ‘பாடலுக்கான குறிப்புகள்’ என்ற கவிதையில் இரண்டு காட்சிகள் காட்டப்படுகின்றன. முதல் காட்சி, நகரத்தின் பெரிய மண்டப வாயிலில் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் தென்னை மரம்; அடுத்த காட்சி அதிகாலை வேளையில் தரையில் கேட்பாரற்று கவனிப்பாரற்றுப் பூத்துக் கிடக்கும் நெருஞ்சி மலர்கள்; ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவையாகத் தோன்றும் இவ்விரு காட்சிகளையும் கொண்டு கவிஞர் ஒரு படிம உத்தியைக் கையாளுகிறார். .

விழா நாளன்றும்

நீரூற்றப் படாமல்

செழித்து உயர்கிறது மின்னொளியில்

நெகிழித் தென்னைமரம்,

நிரந்தரமாய் மண்டப வாயிலில்

பனிக் காலை வேளையில்

இதமாய் விரியும்.

நெருஞ்சியின் மஞ்சளிதழ்கள் பட்டு

சூடேறுகிறது இவ்வெயில்

இக்கவிதையில், தென்னை மரம், நெருஞ்சி மலர் என்ற இவ்விரு தாவரங்களும் முரண் பொருள் படிமமாக அமைந்துள்ளன.

தென்னை மரம் செயற்கையானது என்பதால் அது வைக்கப்பட்டிருக்கும் மண்டபத்தில் விழா நடந்தால்

கூட அதற்கு எந்த கவனிப்பும் தேவையில்லை. இயற்கையான மரம் என்றால் அதற்குத் தண்ணீர் ஊற்றி ஓலைகளைச் சீவி, கவாத்து எடுத்து, இளநீரை வெட்டி அந்த மரத்திற்குப் பண்டுவம் பார்க்க வேண்டும். ஆனால் இதுதான் பிளாஸ்டிக் மரம் ஆயிற்றே; எனவே அதற்கு என்று எந்தத் தனிக் கவனிப்பும் தேவையில்லை.

அடுத்தது, பனி பெய்யும் காலைவேளையில், தரையில் மலர்ந்து கிடக்கும் மஞ்சள் வண்ண நெருஞ்சிப் பூக்கள். இவற்றின் மீது வெயில் பட்டு சூடு ஏறுகிறது. இங்கும் இந்த நெருஞ்சிப்பூக்களுக்கு என்று யாரும் தண்ணீர் ஊற்றி களை எடுத்து அதனைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை.

தென்னை [நெகிழி], நெருஞ்சி என இரண்டும் தாவரம் என்பதிலும் இரண்டுக்குமே கவனிப்பு தேவையில்லை என்பதிலும் ஒற்றுமைப்பட்டாலும் நெகிழித் தென்னை மரத்தால் யாருக்கும் எந்தப் பயனும் கிடையாது; அது காகிதப் பூவைப்போல கண்ணுக்கு மட்டும் அழகாக காட்சி தரும். எவ்விதக் கவனிப்பும் இன்றி தரையில் பூத்து வெயிலில் காய்ந்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போகும் நெருஞ்சிப் பூக்கள் மண்ணுக்கு உரமாகும் சிறு நீரகக் கல் நோய் தீர்க்கும் மருந்தாகும்.

கவனிப்பாரற்றுக் கிடக்கும் நெருஞ்சி செடியில் பட்டு சூடாகும் வெயில் அந்தச் செடிக்கு மருத்துவப் பண்பையும் அளிக்கின்றது. அதைக் காயவைத்து மண்ணுக்கு உரமாக்கவும் செய்கின்றது. ஆனால் கண்ணுக்கு அழகாகக் காட்சி தரும் தென்னை மரத்தினால் எவ்விதப் பயனும் கிடையாது. இதுவே முரண் பொருள் படிமமாகும். செயற்கை இயற்கை இரண்டுக்குமான வேறுபாட்டை இப்படிமம் சுட்டுகிறது. நாகரியத் தாக்கம் செயற்கையை ஆதரித்து,

இயற்கையைத் தவிர்க்கும் அபாயத்தையும் இங்கு இப் படிமத்தின் வாயிலாக கவிஞர் உணர்த்த முனைகிறார்.

கவிதையில் மரத்துக்கும் பூமிக்கும் இடையிலான ஒற்றுமையை வேற்றுமையோ எங்கும் வெளிப்படையாகச் சுட்டப்படவில்லை. கவிஞர் தான் கண்ட காட்சிகளைத் தக்க வகையில் இணைத்து பாடுபொருளாக்கி அதை படிமமாகப் படிப்போருக்கு வழங்குகிறார். இக்கவிதையை நல்லதொரு கருத்தை சமூகத்துக்கு ஊட்டும் வகையில் சமூகப் பொறுப்புணர்ச்சியோடு படைத்துள்ளார். வாசிப்பவர் அவரவர் அனுபவத்திற்கு ஏற்ப இந்த முரண் பொருளை தன்னளவில் தத்தம் அனுபவத்தோடு இணைத்து உணர்ந்து கொள்வார்கள். இதுவே படிமம் தரும் வாசகச் சுதந்திரம் ஆகும்.

இயற்கைப் படிமம்

இயற்கைக் காட்சி ஒன்றைப் பாடுபொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதற்குள் ஒரு படிம உத்தியைப் பொதிந்து அதனை ஆற்றலுடன் செயல்படுதத்துவதில் கவிஞர் வெற்றி காண்கிறார். இயற்கைப் படிம உத்தியில் பெருவெற்றி பெற்று சர்வதேசப் பொருண்மையுடனும் தரத்துடன் கூடிய கவிதை 'புலம்' என்பதாகும்.

பூர்வீக மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்த ஒருவன் பல நூற்றாண்டுகள் கழித்து அங்கு வந்து பார்க்கும்போது அந்த மண் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. அங்கு ஒரே ஒரு வேல மரம் காய்ந்து போய் குச்சியாக நிற்கிறது. அதன் காய்ந்த கிளைகளுக்கு நடுவே இரவின் கனியான நிலவு உதிக்கின்றது. சந்திரோதயத்தை அவன் வறண்டு போன தனது தாய் மண்ணில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறான். அப்போது நிலவு

அவனுக்கு மரத்தில் கிளைத்த பழமாகத் தோன்றுகிறது. இதுவே கவிஞர் நமக்கு தரும் படிமக் காட்சியாகும்.

'புலம்' காட்டும் இயற்கைப் படிமத்தை நம் மனக்கண் முன் கொண்டு வந்து உற்றுநோக்கி அதன் காட்சிப் பொருளை அறிய முற்பட்டால் வாழ வழியற்றுப் போன வறுமைக்கு பயந்து நிலம் பெயர்ந்து சென்ற ஏழை மக்களின் இதயப் பெருமூச்சு கேட்கிறது. ஓரளவு வசதி வந்தவுடன் இழந்த நிலத்தைத் திரும்ப மீட்க முடியுமா என்ற ஏக்கத்துடன் வந்து பார்க்கும் ஓர் இளைஞன் அது எதற்குமே பயன்படாத வானம் பார்த்த பூமியாகத் தரிசாகக் கிடப்பதைப் பார்த்து ஏங்கும்போது அங்கிருந்த ஒரே ஒரு வற்றிப் போன வேல மரத்தின் காய்ந்த கிளைகளுக்கு நடுவே வானத்திலிருந்து தோன்றிய வெண்ணிலா அவனுக்கு மிகழ்ச்சி அளிக்கின்றது. இப்போது அவன் மனதில் ஓர் நம்பிக்கை பிறக்கின்றது.

ஒரு யுகத்துக்கு முன்னம்

விற்றுப் பெயர்ந்த

புஞ்சை காட்டினிடை நிற்கும்

உதிர்ந்த வெள்ளை வேல மரத்தின்

மேலே கிளைத்தது

வெண்ணிலாப் பழம்

என்ற கவிதையில் கடைசி வரியான வெண்ணிலாப் பழம் என்பதில் உள்ள பகர ஒற்று கூட கவிதை ஆகிறது. அந்த பகர ஒற்று இல்லையென்றால் வெண்ணிலா போன்ற பழம் என பொருளாகி இருக்கும். அவ்வாறின்றி பகர ஒற்று இடம் பெற்றதால் அவ்வரி வெண்ணிலாவே பழம் தான் என்ற கருத்தை அழுத்தத்துடன் முன்

வைக்கிறது. ***ஒவ்வொரு எழுத்திலும் கவனம் செலுத்தி கவிதையின் சுவையைக் கவிஞர் மேம்படுத்துகிறார்.***

கவிதையில் பழம் என்ற கடைசிச் சொல்லுக்கு முந்திய சொல் வரை இருந்த நம்பிக்கை வறட்சி தென்பட்டது. பழம் என்ற சொல் அந்நிலையை மாற்றி நம்பிக்கையைத் தோற்றுவிக்கிறது. பழம் என்றால் பயன் என்பது பொருள். கண் முன்னே தோன்றிய நிலா பிறை நிலாவோ பாதி நிலாவோ அல்ல. முழு வெண்ணிலா; ஒளி மிகுந்த நிலா; அவனுடைய இதயத்தில் குளிர்ச்சியை உருவாக்கி நம்பிக்கையை அளித்து உதடுகளில் புன்சிரிப்பை தோற்றுவித்தது இந்த நிலா. அந்த வறட்சியிலும் அவன் இயற்கையின் அழகை ரசிக்கிறான். சிறு இன்பத்தை துய்க்கின்றான். இதுவே மனித வாழ்க்கையின் ரசமான பகுதி. நம்பிக்கை ஒளியுடன் கவிதை நிறைவு பெறுகிறது.

தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்ற ஒரு பாடலில் கிணற்றின் வேரில் தொங்கிக் கொண்டிருக்கும் ஒருவனின் காலுக்குக் கீழே பாம்பும் கிணற்றுக்கு மேலே புலியும் நின்று உயிருக்கு அச்சுறுத்தல் தரும். உயிருக்கு ஆபத்தான இவ்வேளையில் கிணற்றடியில் இருந்த ஒரு மரத்தில் உள்ள தேனடையில் இருந்து விழும் ஒரு சொட்டு தேனை பார்த்து அவன் தன் நாவை நீட்டுவான். துளி தேனின் இனிப்பை சுவைப்பான். மரணத்தின் தலை வாசலில் நிற்கும் அவனுக்கு ஒரு துளி இன்பத்தை அளிக்கும் அந்த தேன் சொட்டைப் போல விற்றுப் பெயர்ந்த நிலத்தைப் பார்த்து பெருமூச்சு விட்ட இளைஞனுக்கு வெண்ணிலா பழமாக இனிக்கின்றது.. வெண்ணிலாப் பழம் அவனுக்குத் தனது தாய் மண்ணைத் திரும்பப் பெறும் நம்பிக்கையை அவனுக்கு அளித்து விட்டது.

இவ்வாறு முத்தமிழ் விரும்பி தனது கவிதைகளில் ஏராளமான படிமங்களைப் பலவகைகளில்

பயன்படுத்தியுள்ளார். படிம உத்தி கவிதைக்கு அழகையும் கற்போருக்கு மன நிறைவையும் வழங்கி கவிதையோடு சேர்ந்து இணைந்து ஒன்றிணைத்துப் போய் சுவைத்துப் படித்து உணரும் அனுபவத்தையும் அளிக்கின்றது. திரும்பத் திரும்ப வாசிக்கத் தூண்டுகிறது. அவ்வாறு வாசிக்கும் போது படிமங்கள் புதிய புதிய பொருளை அளிப்பதால் ஒவ்வொரு முறை வாசிப்பும் புதிய இன்பத்தை அளிக்கிறது.

பாரதியார் சொல்லியபடி

‘சொல் புதிது; சுவை புதிது; பொருள் புதிது

சோதி மிக்க நவ கவிதை

எந்நாளும் அழியாத மகா கவிதை

என்ற வாக்கை கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைப் படிமங்கள் மெய்ப்பிக்கின்றன. ‘இவரது கவிதைத் தொகுப்பில் எந்த இயத்தின் சாயலோ, எந்தத் தத்துவத்தின் அடிப்படையிலோ எந்த நம்பிக்கையின் ஆசிகளோ இல்லாமல் அசலான தத்துவத்தின் பல கவிதைகள் உள்ளன’ என்ற இளஞ்சேரலின் கருத்து கவிதைகளின் அழகுக்கும் ஆற்றலுக்கும் சான்று பகர்வனவாகும்.

6. பாசப்பொருளாகிய குழந்தை

கவிஞர் முத்தமிழ் விரும்பி தன்னுடைய கவிதைகளில் குழந்தையையும் ஒரு முக்கிய பாடுபொருளாக கொண்டிருப்பதை அவரது இரண்டு தொகுப்புகளின் வழியாக அறிகிறோம். திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதைத் தொகுப்பில் குழந்தைகள் பற்றி ஒன்பது கவிதைகள் உள்ளன. குழந்தைகள் கவிஞர்களின் அவதானிப்பில் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். இந்நூலில் இன்பமும் பொருளும், வழமை, பாடம், விளையாட்டு, ஒற்றைப் புள்ளி, உயிரோட்டம், ஓரிரவு, இசை, அரும்புதல் ஆகியவற்றில் குழந்தை கவிப்பொருள் ஆகியிருக்கின்றது.

புதுக்கிளை; புது நிறம்; புதுப்புலம்

இன்று வீடுகளில் ஒற்றையாக வளரும் குழந்தைகள் கூட தோன்றும் போது ஒற்றைப் புள்ளியாகத் தான் தோன்றின. இருவரின் அடையாளமிழந்து புதிய கிளை, புதிய நேரம் புதுப்புலம் தோன்றுவதாக குழந்தையின் பிறப்பை அடையாளம் காட்டுகின்றார் கவிஞர்.

முயங்கி மீண்டெழுந்ததில்

மொழியொன்று புதிது புதிதாய்

கலந்து புணர்ந்த வன்

குழுவிலிருந்து புதுக்கிளை

நிறமிகளின் சேர்ப்பில்

புதுநிறமொன்று

புலம் தொலைந்து

தொலைவில் இருந்தாலும்

புதுப்புலம் பழைய முகவரியைத் தொடர்கிறது.

என வரும் வரிகள் குழந்தையின் உருவாக்கத்தைப் புதுக் கிளையாகவும், நிறமாகவும், புலமாகவும் உணர்த்துகின்றன.

மனையறம் சிறக்க குழந்தை நலம்

*'**இன்பமும் பொருளும்**' என்ற கவிதை தலைமுறை இடைவெளியை பற்றியதாகும். மூத்தோருக்கும் இளைஞருக்கும் ஏற்படும் கருத்து மோதல்கள் குடும்பங்களில் தொடர்ந்து நடந்தாலும் கூட இறுதியில் புதிய குழந்தைகளை அக்குடும்பத்தின் மரபுத் தொடர்பு அறுந்து போகாத வகையில் அன்பின் கொடிவழியைக் காப்பாற்றுகின்றன என்பதே இக்கவிதையின் சாரம். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் இன்பமும் பொருளும் சரியாக அமைந்தால் அறம் என்பது தானாகவே அங்கு இடம் பெறும் என்ற கருத்தைச் சொல்லாமல் சொல்லும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது. இல்லறத்தின் மாண்பை மனையறத்தின் சிறப்பை விளக்கும் இக் கவிதை அறம் என்ற சொல்லை குறிப்பிடாமலேயே அதன் நுண்ணியல்புகளை விளக்கிச் செல்கின்றது. மனையறம் என்பதில் கூட்டுக் குடும்பத்தின் சிறப்புகள் பேசப்படுகின்றன.*

வயோதிகத்தில் அவரும்

இளமைப்பருவத்தின் துள்ளும் துடிப்போடு

மோதுகிறார்கள். இவனோடு

என்ற தொடக்கம் வீட்டில் தலைமுறை இடைவெளி தலை தூக்கி இருப்பதை காட்டுகிறது. அடுத்து,

தனித்தோ அல்லது இணைந்தோ

நடத்தப்படும் படையெடுப்புகளில்

இளமை அழிந்துவிடலாம்

என்று தொடரும் போது இந்த மோதல்கள் வீடுகளில் நடப்பது சகஜம். முன்பும் இதுபோன்ற மோதல்கள் இவ்வீட்டில் நடந்திருக்கலாம் என்று குறிப்பு காட்டுகின்றது. இன்று வயோதிகராக இருக்கும் மூதாதையர்கள் தங்களுடைய மூத்தவர்களோடு குடும்பத்தின் அந்தக்கால மூத்த உறவினர்களோடு இது போன்ற கருத்து மோதலில் ஏற்பட்டு

காயம்பட்டு கசிந்துருகி விழுந்து கிடக்கலாம்.

தடயங்கள் சில தென்படலாம்.

ஆனால் இன்று அவற்றைத் தேடி எடுப்பதற்கு இல்லை என்று இந்த இளைஞன் கருதுகின்றான். வீட்டில் முதியோர், இளைஞர் மோதலின் கசப்பு மறுநாள் அந்திப்பொழுது வரை கூட நீடிக்கும்

எவரும் இப்படி என்பதால் இருப்பும்

வீட்டுக்கு வீடு வயோதிகமும்

இளைய வரவும் மோதித் தெளியலாம்

என்ற வரிகள் மூத்தவருக்கும் இளையவருக்கும் இடையே ஏற்படும் மோதல் வீட்டுக்கு வீடு வாயில்படி என்ற பழமொழிக்கேற்ப அங்கிங்கெனாதபடி பரவலாகக் காணப்படும் பிரச்சினையாகும் என்ற தெளிவு சுட்டப்படுகின்றது.

இனி அடுத்த தலைமுறை உருவாகும் போது இந்த இளைஞனும் வரும் தலைமுறையினரோடு மோதக் கூடிய நிலை ஏற்படலாம்,

நாளை இந்த கவிதையை நசுக்கும்

மலைப்பாறையிடுக்கில் சின்னஞ்செடியை

நண்பனோ அல்லது நானோ வழிமொழியலாம்

மனைமாட்சி நன்மக்கட் பேறு

என்று இக்கவிதை நிறைவு பெறுகின்றது.

இல்லறத்தில் கருத்து முரண்பாடுகள் தோன்றுகின்ற காலங்களில் மோதி முரண்பட்டு பின் ஒன்றாகிக் குடும்பத்தினர் கருத்தொருமித்தவர்களாக வாழ்க்கையை நடத்திச் செல்வதிலும் மீண்டும் மீண்டும் அடுத்த அடுத்த தலைமுறையோடு கருத்து மோதல்கள் ஏற்படுவதிலும் அதனை எதிர் கொள்வதிலும் இருக்கின்றது. இதுவே இல்லற வாழ்க்கையின் பொருள் ஆகும். இக்கவிதை காட்டும் மனைமாட்சியின் சிறப்பு கருத்து முரண்பாடுகளைப் புதிது புதிதாகக் கொண்டு வரும் பிள்ளைகளிடம் பெரியவர்கள் மன நிறைவோடு இணங்கியும் பிணங்கியும் செல்வதில் அமைந்துள்ளது.

வீழ்வேன் என்றே நினைத்தாயோ

பிறந்து வளர்ந்த சிறு குழந்தை தத்தித் தவழ்ந்து எழுந்து நின்று பின்பு மீண்டும் கீழே விழுந்து மீண்டும் எழுந்து நிற்க முயல்கின்றது. இந்த காட்சியைக் காணும் போது கவிஞருக்கு வாழ்வின் ஒன்று தத்துவம் நினைவுக்கு வருகிறது அது ‘வழமை’ என்ற கவிதையாக மலர்கின்றது.

தான் பெய்த

நீரில் வழுக்கி

விழும் சிறு குழந்தை

மீண்டுமொரு கால் நிறுத்த

முனைய

பழைய சுவடின் மீது புரண்டு

விழுந்திடத் தணிகிறது.

இக்கவிதையில் குழந்தை நீரில் நிற்க இயலாது விழுந்து எழுந்து தடுமாறுகிறது என்பதை ஒரு நிகழ்ச்சியாக மட்டும் குறிப்பிடவில்லை. இது ஒரு படிமமாகத் விளங்குகிறது. வாழ்வில் தான் செய்த தவறுகளால் தடுமாறி விழுந்தவன் பின்பு தான் எழுந்து நிற்க முற்பட்டு மீண்டும் தடுமாறி விழுந்து திரும்பவும் முயற்சி செய்து விழாமல் இருப்பது எப்படி என்பதை அறிந்துகொண்டு திரும்ப எழுந்து உறுதியாக நிற்கின்றான்.

*தடுமாற்றமும் மீண்டும் எழுந்து நிற்றலும் குழந்தைக்கு உரியது மட்டுமல்ல பெரியவர்களுக்கும் வாழ்வில் இதுபோன்ற தடுமாற்றங்கள் ஏற்படுவதுண்டு. அப்போது விழுவதெல்லாம் எழுவதற்கே என்ற எண்ணத்தோடு உறுதியான உள்ளத்தோடு எழுந்து நிற்க வேண்டும். 'வீழ்வேனென்று என்றே நினைத்தாயோ?' எமன்ற பாரதியின் வாக்குப்படி எழுந்து நின்று கேள்வி எழுப்ப வேண்டும். தொடர் முயற்சிகளை சலிக்காமல் எடுப்பதற்கான உந்துதலைத் தரும் வகையில் '**வழமை**' என்ற இக்கவிதை அமைந்துள்ளது. இவ் உந்துதல்*

இக்கவிதை மூலமாகக் குழந்தை மற்றும் பெரியவர்களுக்குக் கற்றுத்தரும் பாடமாகும்.

வீட்டுப் பாட நோட்டில்

நான்கு கோடுகளுக்குள் அடங்கா

அ ஆ அம்மா ஆப்பிள் ஆடு

எழுத்துப் படங்களும்

எல்லாமே

வாடகை வீட்டுச் சுவரில்

கோலமிட்ட வாசலுக்கு

வெளியே

எத்தனையழித்தும்

பூக்கிறது பார்த்தீனியம்

'பாடம்' *என்ற தலைப்பிட்ட மேற்கண்ட கவிதை குழந்தை தன் வீட்டுப் பாட நோட்டில், அதுவும் கோடுகள் போட்ட நோட்டில் அந்தக் கோடுகளுக்கு இடையே எழுதுவதில் ஏற்படும் சிரமத்தையும் அதுவே சுவர்களில் மிக அழகாக எழுத்துக்களையும் படங்களையும் சுதந்திரமாக எழுதி இருப்பதையும் முரண் சுவையுடன் விளக்குகிறது. இவ்விரண்டையும் சுட்டிக்காட்டிய கவிஞர் அடுத்ததாக ஓர் அழகான காட்சியைக் காட்டுகின்றார். அழகாகக் கூட்டிப் பெருக்கி கோலமிட்ட வீட்டு வாசலையும் அதனருகே எத்தனையோ முறை அழிக்க முயன்றும் முடியாமல் பூத்திருக்கும் விஷச்செடியான பார்த்தீனியம் புதர்களையும்*

காட்டுகின்றார். இந்த ஒப்பீடு பெரியவர்களுக்கு ஒரு பாடமாகும்.

ஒருவர் தன் வீட்டு வாசலை கூட்டிப் பெருக்கி கோலமிடுவதொடு நின்றுவிடக் கூடாது விஷச் செடிகளின் வீரியம் அதிகம் அவை அழிக்க அழிக்க வளரும். ஆனாலும் நாம் வீட்டின் அருகே பூத்திருக்கும் பார்த்தீனியம் புதர்களை அடியோடு அழிப்பதில் முனைப்பாக இருக்க வேண்டும். இல்லையெனில் அந்தப் பூக்களின் மகரந்தக் காற்று அவ்வீட்டில் வசிப்பவர்களுக்கு மூச்சுக்குழலில் நோயை ஏற்படுத்தும். எனவே சிறு குழந்தை தனது பாடத்தை நோட்டிலும் எழுதுகிறது சுவரிலும் எழுதுகிறது. அது தன் கடமையை அழகாகச் செய்கிறது. பெரியவர்கள் தங்களால் முடியவில்லை என்று காரணம் கூறுகின்றனர். அது தவறு அல்லவா என்று இக்கவிதையின் மூலமாக ஓர் கேள்வியை எழுப்புகிறார் கவிஞர். பெரியவர்களுக்கான பாடம் பார்த்தீனியத்தொடு போராடி அதை முற்றிலுமாக அழிப்பதென்பதால் இக்கவிதை ‘பாடம்’ என்ற தலைப்பைப் பெற்றுள்ளது.

சூரிய விளையாட்டு

ஒரு குழந்தை மனிதர்களோடும் விளையாடும்; விலங்குகளோடும் விளையாடும்; சூரிய சந்திரப் பிம்பங்களோடும் விளையாடும். அவற்றின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப அக்குழந்தையின் விளையாட்டுத் திறன் அமைகின்றது. திட்டி வாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை தொகுப்பில் ‘**விளையாட்டு**’ , ‘**உயிரோட்டம்’** என்ற இரண்டு கவிதைகள் குழந்தைகள் சூரிய ஒளி மற்றும் நிழலோடு விளையாடுவதைக் காட்டுகின்றன. அவற்றின் மூலம் ஒரு படிப்பினையும் சுட்டப்படுகிறது.

‘விளையாட்டு’ என்ற தலைப்பில் மாலைச் சூரியனின் காலடியில் விழும் நிழல் பார்த்து

விளையாடும் குழந்தைக்கு தனிமை ஏது என்ற கவிதையில் குழந்தை சற்று நகரும் போது அந்த நிழலும் நகர்கின்றது. மாலைச் சூரியனின் நிழல் என்பதால் அந்நிழல் மிக நீண்டதாக இருக்கும். எனவே நீண்ட நிழல் குழந்தையோடு சேர்ந்து இங்குமங்கும் அசையும் போது குழந்தைக்கு அது வேடிக்கையாகத் தோன்றுகிறது.

இன்றையக் காலகட்டத்தில் ஏராளமான வீடுகளில் ஒற்றைக் குழந்தைகள் வளர்க்கப்படுவதால் அவை தனித்து வாழ்கின்றன; தனித்து விளையாடுகின்றன. ஆனால் இவ்வாறு விளையாடும் குழந்தைகளுக்கு சூரிய சந்திர பிம்பங்கள் மற்றும் ஒளி, நிழல்கள் போன்றவை விளையாட்டுத் தோழர்களாக அமைந்துவிடுகின்றன.

மாலைச் சூரியனின்

காலடியில் விழும் நிழல்

பார்த்து விளையாடும்

குழந்தைக்குத் தனிமையேது?

ஒற்றைக் குழந்தைகள் கூட தனியாக வளர்வதில்லை இயற்கையோடு சேர்ந்து தான் வளர்கின்றன என்ற உற்சாகமான கருத்தையும் இக்கவிதை நமக்கு ஊட்டுகின்றது.

‘**உயிரோட்டம்**’ என்ற கவிதையில் ஒரு குழந்தை சூரியனின் ஒளி வட்டங்களோடு விளையாடுகிறது .

சாளரத்தின்

ஒளிவட்டங்களைச் சிறுவிரல்கள்

அளைந்து

ஒலியுடன் பிணைக்க

சூடானக் கதிர்

மேலேறி விரைகிறது

மரத்தை வெட்டும் போது

சிதைவுறுகின்றன

உயிர்ச் சிறப்பங்கள் .

இக்கவிதை சாளரத்தின் வழியாக வீட்டுக்குள் விழும் சூரிய ஒளி வட்டங்களை தன்னுடைய சிறு விரல்களால் அளைந்து அதற்கேற்ப விதவிதமான ஒலிகளை எழுப்பி அதனை ரசித்து சிறு குழந்தை விளையாடிக் கொண்டிருக்கிறது. கதிரவன் மேலே ஏற ஏற இந்த ஒளி வட்டங்களும் மேலேறி செல்கின்றன. மரங்கள் வெட்டப்படும் போது அங்கு வாழும் உயிரினங்கள் இருக்க இடமின்றி உண்ண உணவின்றி அழிந்து போகின்றன. இறைவன் படைப்பில் உருவாக்கப்பட்ட உயிர்ச் சிறப்பங்கள் சிதைவுறுகின்றன என்று இக்கவிதையின் நிறைவு வரிகள் சுட்டுகின்றன.

உயிரோட்டம் என்பதே உயிரினங்களின் வாழ்க்கையில் தான் அமைந்துள்ளது. மரங்கள் அழிக்கப்படும்போது பறவை இனங்களும் விலங்கினங்களும் அழிந்துபடுகின்றன. உயிர்ம வளியின் பற்றாக்குறையால் மக்கள் நடைப்பிணங்களாக வாழ முடியுமே தவிர உயிரோட்டம் உள்ளவர்களாக வாழ இயலாது. இதனால் மக்களின் வாழ்வும் வளமும் கேள்விக்குறியாகி விடுகின்றது. எனவே இறுதி வரியில் தரப்பட்டுள்ள உயிர்ச் சிறப்பங்கள் என்ற முத்தாய்ப்புச் சொல் மனிதர்கள் உயிருள்ள சிறப்பங்கள் ஆகிவிடுவர் அல்லது உயிரோட்டம் இல்லாத மனிதர்களாக இருப்பார். வருமுன் உரைத்தல் என்ற உத்தியின்படி

இக்கவிதை எதிர்காலத்தில் ஏற்படும் இடர்பாடுகளை இன்றே சுட்டிச் செல்கின்றது.

குழந்தைகளின் விளையாட்டுக்கள் பற்றிய கவிதையிலும் கவிஞர் இயற்கை ஆர்வத்துடன் சமுக அக்கறையுடன் மரங்களை வளர்க்க வேண்டும் அதே சமயம் விஷச் செடிகளை ஒழிக்க வேண்டும் என்ற கருத்துக்களையும் கவிதையாகச் சொல்லிச் செல்கிறார்.

இன்னொரு விளையாட்டு

குழந்தைகள் இருக்கும் வீட்டில் அவை எடுத்து விளையாடும் பொருட்கள், உடைத்து விளையாடும் பொருட்கள் என்ற பட்டியலில் நாம் முக்கியமாகக் கருதும் பொருட்களும் கூட சேர்ந்து விடுவதுண்டு. அதற்காக குழந்தையை வெறுக்க இயலாது, அவற்றின் கைக்கு எட்டாத இடத்தில் வைக்க வேண்டுமே தவிர பொருள் உடைந்த பிறகு குழந்தையை நொந்து பலனில்லை.

*திருமணத்தன்று கொடுத்த பரிசுப் பொருளான கடிகாரம் குழந்தை உருட்டி விளையாடியதில் உடைந்து போனது. ஆனாலும் அது வரவேற்பறையில் வைக்கப்பட்டுள்ளது. இப்போது விடிந்துவிட்டதா என்று அறிவதற்கு அடுத்த வீட்டில் அழும் பச்சை குழந்தையின் சிணுங்கல் இந்த வீட்டில் பூபாளமாக ஒலிக்கிறது. இக்கவிதைக்கு '**இசை**' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த இசை கடிகார ஓசையைக் குறிக்கவில்லை; பக்கத்து வீட்டுக் குழந்தையின் சிணுங்கலைக் குறிக்கிறது. குழந்தையின் அதிகாலைச் சிணுங்கல் இசையை நிகர்த்ததாக உணரப்படுகிறது; அனுபவிக்கப் படுகிறது. இசை என்ற தலைப்பு பாடுபொருட்களில் குழந்தை என்பது கவிஞரது பாசத்துக்குரிய பொருள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.*

ஓர் இரவின் உறைந்த மவுனம்

அறிஞர் அண்ணா ஒரு நாடகத்தை ஒரே நாள் இரவில் எழுதி முடித்தார். ஓர் இரவு என்ற அந்நாடகம் அரங்கேற்றப்பட்டு பின்னர் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டு அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. ஒரே இரவில் எழுதப்பட்ட இந்நாடகம் ஒரே இரவில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கதைப் பின்னலாகக் கொண்டது. அண்ணாவின் அபிமானியான கவிஞர் முத்தமிழ் விரும்பியும் இதே தலைப்பில் ஓர் இரவு நிகழ்ச்சியைக் கவிதையாக்கி உள்ளார்.

ஒரு நாள் இரவு நேரத்தில் குழந்தை ஒன்று காய்ச்சலில் அவதிப்படுவதையும் பெற்றோரும் உற்றாரும் அதன் அருகில் இருந்து கவலையோடு கவனித்துக் கொண்டிருப்பதையும் இந்த ஓர் இரவு கவிதையில் காண்கிறோம்.

முகாம் முடித்து

படுக்கை திரும்பிய நள்ளிரவு

காய்ச்சல் முற்றி

அரற்றும் குழந்தை

எந்த உணவும் வேண்டேன்

என்றழும் கணம் தொடங்கி

மூன்று ஜோடி கண்களிலிருந்து

சிதறித் தவறும் உறக்கம்

அக்காவின் அழுகையூடே

அவ்விரவின் உறைந்த மௌனத்தை

விரட்டிய கதிர்காமன்

கூட்டிசையின் அதிரடிப்பாடல்.

இக்கவிதையில் குழந்தையின் காய்ச்சல் கண்டு கவலையுற்ற மூன்று பேர் தங்கள் கண்களில் தூக்கத்தைத் தவிர்த்து குழந்தையைக் கவலையோடு நோக்கியபடி இருக்கின்றனர். அந்த ஓர் இரவு இவர்களின் மௌனத்தால் உறைந்துபோய் இருக்கின்றது. ஆனால் பொழுது விடிந்ததும் குழந்தையின் காய்ச்சல் குறைந்து இருப்பதை அறிந்து குடும்பமே மகிழ்ச்சிப் பரவசம் அடைகின்றது. அந்த மகிழ்ச்சிப் பரவசம் 'கூட்டிசையின் அதிரடி பாடல் தரும் பரவசத்தை ஒத்திருந்தது.

ஒரு குடும்பத்தில் குழந்தைகள் உடல் நலம் இல்லாமல் இருக்கும் நேரங்களில் குடும்பத்திலுள்ள அனைவருமே அக்குழந்தையின் நோய் கண்டு வேதனைப்படுவர். இந்த மனவேதனையும் மன உளைச்சலும் ஒருவரோடு ஒருவர் சொல்லிப் பகிர்ந்து ஆற்றிக் கொள்ள முடியாததாகும். அவரவர் வேதனையை தத்தம் மனதில் வைத்தபடி குழந்தையின் வாடிய முகத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பர். விடியும் வேளையில் குழந்தை காய்ச்சல் குறைந்து கண்விழித்து நம் முகம் பார்த்து சிரிக்கும் போது வழியும் ஆனந்தக் கண்ணீர், அப்போது ஏற்படும் பரவசம் இறைவனைக் காணும் போது ஏற்படும் பரவசத்துக்கு நிகரானதாகும். இக்கவிதை பெரும் உணர்ச்சிப்பெருக்கு நிரம்பிய கவிதையாகும்.

கவிஞர் முத்தமிழ் விரும்பி பாசத்துக்குரிய குழந்தைகளைப் பாடு பொருளாக்குவதில் வித்தகர். குழந்தைகளின் செயல்பாடு விளையாட்டு ஆகியவற்றின் ஊடே சமுதாயக் கருத்துக்களையும் சேர்த்துப் பின்னிக் கொண்டு போவதில் கை

தேர்ந்தவர். அவரது சொல் வண்ணமும் ஒலி வண்ணமும் குழந்தைக் கவிதைகளில் அழகிய ஓவியங்களாகக் காட்சி அளிக்கிறது. திறமையான ஓவியர் ஒருவரின் கைகளில் இக்கவிதைகள் கிடைத்தால் இவற்றை வண்ண ஓவியமாக்கி கண்ணுக்கு விருந்து படைப்பார் என்பது உறுதி.

7. கவிதை நயம்

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி மக்களின் வாழ்க்கையில் இருந்த நிதானத்தையும் ஓய்வையும் கலா ரசனையையும் மாற்றி அவர்களை விரைவான பரபரப்பான வாழ்க்கைக்குத் தள்ளிவிட்டது. இதனால் நீண்ட கவிதைகளைப் படிக்க அவர்களுக்கு நேரமில்லாமல் போயிற்று. மரபுக் கவிதைகளும் நீண்ட காவியங்களும் படிப்பாரற்றுப் போயின. சிறிய கட்டற்ற கவிதைகள் வரத் தொடங்கின. கடவுள், மன்னர் மற்றும் பிரபுக்கள் போன்ற மேட்டுக்குடியினர் பற்றிய கலைப் படைப்புகளும் மறையத் தொடங்கின. சாமானிய மனிதர்கள் பாடு பொருளாயினர். கவிதை, கதை போன்றவற்றின் உருவும் உள்ளடக்கமும் மாற்றம் பெற்றன.

இங்கிலாந்தில் தொடங்கிய மாற்றம் உலகெங்கும் பரவியது. கட்டற்ற கவிதைகளின் இலக்கிய உத்திகளில் படிமம், குறியீடு, உருவகம் போன்றவை முக்கியத்துவம் பெற்றன. இவை எதையும் தெளிவாகக் குறிப்பிடாமல் வாசிப்போரின் புரிதலுக்கும் அனுபவத்துக்கும் இடமளிக்கும் வகையில் அவர்களின் பங்கேற்பையும் நாடியனவாக அமைந்தன.

தமிழகத்தில் மகாகவி பாரதியார் வசன கவிதை எழுதினார். வால்ட் விட்மன், எஸ்ரா பவுண்ட் ஆகியோரின் கவிதைகள் இங்கு மொழிபெயர்க்கப் பெற்றன. சந்தம், யாப்பு ஆகியவற்றைப்

புறந்தள்ளிவிட்டு படிமம், குறியீடு, உவமை, உருவகம் போன்றவற்றைக் கொண்டு கவிஞனின் கருத்தை சுருக்கமாகப் புலப்படுத்தும் நிலை உருவானது. டி எஸ் எலியட் எழுதிய 'பாழ் நிலம்' என்ற கவிதை முதல் படிமக் கவிதையாக அமைந்து புகழ் பெற்றது.

இமேஜிசம் (Imagism) என்ற இயக்கம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் தோன்றியது. அமெரிக்கக் கவிஞர் எஸ்றா பவுண்ட் கிரேக்கப் பெண்பாற் புலவர் சாஃபோ கவிதைகளைப் படித்துத் தேர்ந்த இரு கவிஞர்களை அறிமுகம் செய்தார். இவர்கள் பண்டைய இலக்கியப் பெருமைகளைப் பறை சாற்றுவதிலும் அக்கறை காட்டினர். அதே வேளையில் தமது புதுக் கவிதைகளைப் பழகு மொழியில் [செய்யுள் மொழியில் அல்ல] படைத்தனர். இந்த மொழி எளிமை புதுக் கவிதை உலகுக்கு இன்னும் பல கவிஞர்களைக் கொண்டு வந்தது. மரபு சாரா கவிதை பின்னர் கட்டற்ற கவிதை, நவீன கவிதை, புதுக் கவிதை எனப் பெயர் மாறிக்கொண்டே வந்தது.

புதுக் கவிதை உத்திகளுள் ஒன்றான படிமம் என்பது ஐம்புலன்களால் உணர்ந்துகொள்ளக் கூடிய ஒரு கருத்து விளக்கமாக அமைந்தது. கவிஞன் சொற்களால் விளக்கிக் கூறுவதை விடவும் படிமங்களால் உணர்த்தும் போது வாசகன் கவிஞனின் கருத்தை முழுமையாகப் புரிந்து கொள்கிறான். ஒவ்வொரு கவிஞருக்கும் எனச் சில தனிப் பயன்பாட்டுப் படிமங்கள் உள்ளன. அவர்கள் அதே படிமங்களை வெவ்வேறு பொருளில் திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதுண்டு. பொதுவாக இயற்கை சார்ந்த மரம், செடி, கொடி, பறவை, விலங்குகள் போன்றவை படிமங்களாகப் பயன்படுகின்றன.

குறியீடு என்பது ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளைப் பதிலியாகக் காட்டுவதாகும். ஆனால் படிமம் என்பது இதற்கு இது என வரையறுத்துக் கூற

முடியாத வகையில் கட்டற்ற வாய்ப்புகளும் பொருண்மையும் கொண்டதாகும். இத்தகைய இலக்கியப் பின்புலத்தின் அடிப்படையில் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளை ஆராயலாம். அவரது கவிதைகள் 'எந்த இயக்கத்தின் சாயலோ எந்தத் தத்துவத்தின் அடிப்படையோ, எந்த நம்பிக்கையின் ஆசிகளோ இல்லாமல் அசலான தனித்துவத்தின் கவிதைகள்' என்று கூறிய கவிஞர் இளஞ்சேரலின் கருத்தும் இவன் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் படிமம், குறியீடு, உவமை, உருவகம் எனப் பல வகை கவிதை நயங்களும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். இதில் எதுவும் வலிந்து திட்டமிட்டுப் புகுத்தப்பட்டதன்று. நயம் ஊட்டும் உத்திகள் அனைத்தும் இயற்கையான கவிதைப் போக்கில் அமைந்தவை.. கவிஞர் தனது இலக்கிய உத்திகளுக்குக் கருவியாக கிளை, மரம், செடி, புதர், பறவை சிற்பம், கானல் நீர் போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறார். இவர் கூர் தீட்டப்பட்ட கத்தியைப் போலப் புரிதலைக் கூர்மையாக்குகின்றன.

'பிரமிளுக்குக் கருடனைப் போல தேவதேவனுக்குப் பாறை எனில் தேவதச்சனுக்குக் கூழாங்கற்கள், பூமா ஈஸ்வர மூர்த்திக்குக் கண்ணாடியாகிற கவிதையின் உயிர்ச்சொல். இங்கு முத்தமிழ் விரும்பிக்கு மரக்கிளை. பல்வேறு ரூபங்களும் அரூபமும் பெருமரங்களின் உடலிலிருந்து கிளைகள் நமது தத்துவ மரபின் வாழ்விற்கு உணர்த்தும் படி, மான்களும் உள்ளார்ந்த குறியீடுகளும் மிகப் புதுமையானது. கிளை சொல்லும் கதைகள் கவித்துவத்தின் கட்டமைப்பைப் பேசுவதாகிறது. இருத்தலியல் சார்ந்து நிற்கிற கவி மூலமாகிறது' என்று பாராட்டிய கவிஞர் இளஞ்சேரல் கிளை என்ற சொல் இடம்பெறும் கவிதை வரிகளையும் தனது கட்டுரையில் பட்டியலிட்டுள்ளார்.

கிளை

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் 'கிளை' என்ற சொல் அவரது கவிதைப் பொருண்மையை உணர்த்த பயன்படும் முறைகளைச் சான்றுகள் மூலமாக அறியலாம். இத்தொகுப்பில் பத்து இடங்களில் கிளை என்ற சொல் பல்வேறு சூழல்களில் இடம்பெறுகிறது. முதல் கவிதையான ஒரு பறவையின் இருத்தலியலில்

அந்தச் சுடர் வேம்பின்

கிளைகளைக் குலுக்குகிறது

மதுக்குரல்

என்ற வரிகளில் கிளைகள், சுடர் விடும் வேப்பமரத்துக்கு உரியனவாகும். செழிப்பாக வளர்ந்திருக்கும் மரம் என்பதைக் குறிக்க சுடரும் கிளைகளும் இங்குப் பயன்படுகின்றன. கிளைகள் செழிப்பின் சின்னம் ஆகும். காய்ந்த மரங்களில் இவை வெறும் சுள்ளிகளாகி விடும். அதே கவிதையில்

உன் பறத்தலறியாவிடினும்

கிளைகளின் நுனியில் இருப்பாய்.

என்ற வரிகள் மரத்தின் அடர்த்தியான கிளைகளுக்குள் பறவை மறைந்து உறையாமல் கிளைகளின் நுனியில் உட்கார்ந்து ஊஞ்சலாடும் என்ற கருத்து உணர்த்தப்படுகிகிறது. இது மறைந்து வாழும் நோக்கமுடைய பறவை அல்ல. ஆனால் மனிதனின் கண்ணுக்குப் புலப்படாத பறவை.

இரவுப்பாடல் என்ற கவிதையில் கனவில் நேற்றிரவு வந்த காதலியின் நினைவுகள் இன்று மாலைப் பொழுது வந்தவுடனேயே மனதுக்குள் வந்து சிலிர்பைத் தருகின்றன.. அதனை கவிஞர்

நாட்கள் தொலைத்த

விழுதுகளும் கிளைகளும்

கொண்ட மரத்தில் வாழ்ந்த கிளிகள் தங்கள் கூடுகளைத் தொலைத்து விட்டு கூடாரமாய் அமர்ந்ததைப் போன்று காதலியின் நினைவுகள் தனது நாட்களைத் தொலைத்து விட்டு இப்போது மனதுக்கு வந்து 'டேரா' [கூடாரம்] அடித்துவிட்டது, என்கிறார்.

செழிப்பின் சின்னம் - கிளைகள்

வறட்சி பற்றி விவரிக்கும் **முன்னும் பின்னும்**, **இருப்பு** *ஆகிய கவிதைகளில் வறட்சிக்கு முன்பிருந்த செழிப்பைக் குறிக்க மரக்கிளைகளைக் குறியீடாகக் காட்டுகிறார் கவிஞர். 'முன்னும் பின்னும்' என்ற கவிதை முன்பு செழிப்பாக இருந்த காலத்தில் பேரூர் குளத்துக்கு*

வந்து சேர்ந்த பறவைகள்

மரக்கிளைகளில் பூவிலைகளோடு

அமர்ந்து குளத்து நீரில்

தங்களின் முகம் பார்த்து மகிழும்.

குளத்தில் தண்ணீர் நிறைய இருப்பதால் கிளைகளில் பூவும் இலைகளும் ஏராளமாக உள்ளன. இவை வற்றி உலர்ந்த கிளைகள் அல்ல. இவை பூக்களும் இலைகளுமாகச் செழித்த கிளைகள் என்று கிளைகளைச் செழிப்பின் குறியீடாகக் காட்டுகிறார்.

'**இருப்பு**' *என்ற கவிதையில் ஒரு காலத்தில் நாடு செழித்து நல்ல மழை பெய்த போது*

விதைகள் நிறை

கொய்யா மரத்தைப் பிணைக்கும்

அருநெல்லிக் கிளையில்

தேனடை

என்ற வரிகள் கொய்யா மரமும், அருநெல்லி மரமும் பின்னிப் பிணைந்து வளர்ந்திருந்தன. கொய்யா மலர்கள் மற்றும் அருநெல்லி மாரங்களில் தேனெடுக்க வந்த தேனீக்கள் அங்கே அருநெல்லி மரத்தின் கிளையில் கட்டிய தேனடை வளமையின் விளக்கம். இங்கும் கிளை என்றச் சொல் மழை பெய்த காலத்தின் வளமையையும் சிறப்பையும் எடுத்தியம்புகின்றது.

வறட்சியைத் தாங்கும் வாகை

வறட்சிக் காலத்தில் எல்லா மரங்களும் காய்ந்து உலர்ந்து குச்சி குச்சியாகக் காட்சியளிக்கும். ஆனால் வாகை மரத்தில் மட்டும் கிளைகள் பசுமையாகத் தோன்றும். அதனால் அங்கு மட்டும் பறவைகள் உட்கார்ந்து இளைப்பாறுவதைக் காணலாம். வாகை மரத்தின் காய்கள் காற்றடிக்கும் போது உள்ளேயிருக்கும் முத்துக்களால் சடசடவென்று ஒலிநயம் கூட்டும். சங்க இலக்கியத்தில் வாகை வெற்றிக் களிப்புக்கு அடையாளமாக வைக்கப்பட்டதன் நோக்கமே அதன் கலகலப்பும் மலர்களின் வண்ணமும் எனலாம். வெற்றி வாகை என்றால் ஆரவாரமும் கோலாகலமும் இணைந்து கொள்கிறது.

தூரத்து வாகை மரக்கிளையில்

தோகை படபடக்க

மாலையில் விழும்

கோடை மழைக்கு முன்னம்

கலாப மயில் நடனம் காணக் கிடைக்கும்.

*என்று **வறட்சியின் பாடல்கள்** என்ற கவிதையில் கோடைக் காட்சி ஒன்றைக் குறிப்பிடுகிறார் கவிஞர்.*

வாகை மரக்கிளையில் தோகை படபடக்க என்ற சொற்களே பெரிய தோகை மயிலொன்று மேலே மரத்திலிருந்து கீழே வரும் சத்தத்தை நம் செவிகளில் விழச் செய்கிறது. வாகை, தோகை என்ற சொற்களின் எதுகை நயமும் ‘படபடக்க’ என்ற சொல்லில் உள்ள ஒலிநயமும் இயற்கையாகவே இக்கவிதைக்குச் சந்த நயம் சேர்க்கின்றன,

வெயில் மறையும் நேரம்

காவலுக்கு வந்த பெரியவர்

வாணம் கொளுத்தி வெடிப்பார்

வாகை மரக்கிளைகள் படபடக்கும்

என்று அக்கவிதையை நிறைவு செய்கிறார் கவிஞர். தனது கிராமத்தை நினைக்கும் போதெல்லாம் வாகை மரக்கிளையின் படபடப்பு அவரது காதில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. எனவே தான் கிராமியம் என்பது அவரது பாடுபொருட்களில் பாசப் பொருளாகிறது.

குறியீடாகக் ‘கிளை’

*கிளை என்ற சொல்லைக் கவிஞர் தமிழகத்தின் தட்பவெப்ப மாற்றங்களைக் குறிக்கும் அடையாளமாக மட்டும் பயன்படுத்தவில்லை. இதற்கும் மேலாக உறவு, உறவின் மோதல், முரண்பாடு போன்றவற்றைக் குறிக்கும் குறியீடாகவும் பயன்படுத்துகிறார். **வேறு வேறு** என்ற கவிதையில் அன்பாகப் பேசிக் கொண்டிருந்த காதலருக்கு இடையில் ஒரு கருத்து வேறுபாடு திடீரெனத் தோன்றிவிட்டது என்பதைக் குறிக்க கவிஞர் ஒரு கிளையைத் தான் கொண்டு வருகிறார்.*

குலுக்கிக் கொண்டிருந்த கரங்களிலிருந்து

கிளைத்தது ஒரு கொலைக்கரம்

என்ற வரிகளோடு கவிதையை நிறைவு செய்த போது இங்குக் கிளை என்பது பெயர்ச்சொல்லாக இல்லாமல் வினைச்சொல்லாக இடம்பெற்றுள்ளது. காதலருக்கு இடையிலான உரையாடலில் அவர்கள் 'வாக்கு யுத்தம் ஏதுமின்றி நிறைவு செய்த போது' ஒரு சொல் தன்னியல்பு மாறி கொல்லும் சொல் ஆயிற்று. அச்சொல் கொலைக்கரமாகக் கிளைத்தது.

காதல் என்ற விருட்சத்தில் இருந்து கிளைத்த ஒரு கிளை கவிஞருக்குக் கொலைக் கருவியாகத் தோன்றுகிறது.

புதுக் கிளையென உதித்த குழந்தை

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்ந்து வந்த போது துளிர்த்த புது உறவைக் கவிஞர் மொழி, கிளை, நிறம், புலம் என்று பலவாறாகக் காண்கிறார்.

முயங்கி மீண்டு எழுந்ததில்

மொழியொன்று புதிதாய்;

கலந்து புணர்ந்த வன்

குழுவிலிருந்து புதுக்கிளை;

நிறமிகளின் சேர்ப்பில்

புது நிறம் ஒன்று;

புலம் தொலைந்து

தொலைவிலிருந்தாலும்

பழைய முகவரியைத் தொடர்கிறது.

இவ்வாறு கரு உற்பத்தியை கிளை என்றது 'குடும்ப மரத்தின்' [family tree] வளர்ச்சியைக் காட்டும் குறியீடாகிறது. தமிழகத்தில் வாழும் தாய்வழிச் சமுதாயத்தினர் தங்களின் குடிவழியை 'கிளை' என்ற சொல்லால் குறிப்பிடுவது மரபு. அம்மரபு இக்கவிதையிலும் காணப்படுகிறது.

மரங்களில் பல வகை

கிராம நேசரான கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் வேப்ப மரம், வாகை மரம், புங்க மரம், பனை மரம் ஆகியவற்றைக் காணலாம்.

மரத்தின் வகைகள் தவிர குடை விரித்த மரம் [ப.106], செயற்கை மரம் [ப. 53]. நெகிழி மரம் [ப. 58], அழித்த மரம் [ப. 63], அடர் மரம் [ப.73] பட்ட மரம் [32], காயாத மரம், எல்லை காட்டி மரம் [ப. 81], பெரு மரம் [ப. 94] எனப் பல வகையிலும் மரங்களை அதன் பண்பு விளக்கத்துடன் கவிஞர் பயன்படுத்தியிருக்கிறார்.

மரமான்

பல வகை மரங்கள் தொகுப்பில் இடம் பெற்றிருந்தாலும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியது மரமான் என்ற சொல்லாக்கமே ஆகும்.

கற்பனையில் ஓடுகின்றன

கனவென மரமான்கள்

என்ற வரிகளில் காய்ந்த குச்சிகளாக நிற்கும் மரங்கள் மான்களாக ஓடுகின்றன, என்று மானை மரத்தோடு இணைத்து மரமான் என்ற உருவகச் சொற்றொடரைக் காணலாம். மான் போன்ற மரம் என்பது மான்மரம் என

வராமல் **ஓடுதல்** என்ற செயலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் மரமான் என்றாகியுள்ளது. இதில் ஓடுவது மரங்கள் தானே தவிர மான்கள் அல்ல. மரம் ஓடுகிறது மானைப் போல என்று இச்சொற்றொடரை விரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

பெயர் சொல்லாத மரம்

புத்தருக்கு ஞானோதயம் அளித்த போதி மரத்தைக் கவிஞர் பெயர் குறிப்பிடாமல்

இளம்பசைக் குடை விரித்த மரத்தடியில்

வாய் கண்கள் காதுகள் அடைபட

இன்னும் தியானத்திலிருப்பாரோ?

என்று வினா எழுப்புகிறார். இந்தப் போதி மரம் இளம் பச்சை நிறத்தில் புதிய தளிர்களோடு அடர்த்தியாகக் குடை போல விரிந்து பரந்துள்ளது. அதன் அடியில் தியானம் செய்யும் புத்தருக்கு நல்ல நிழல் தருகிறது. மரத்தின் செழிப்பு தரும் குளிர் நிழல் புத்தரை ஆழ்ந்த தியானத்தில் இருத்திவிட்டது. எரியும் புகையின் வாசம் கூட அவரது தியானத்தைக் கலைக்க முடியவில்லை. இக்கவிதையில் மரம் சொகுசுத் தன்மைக்குக் குறியீடாக அமைந்துள்ளது.

சிங்களத்தில் தர்மத்தைப் போதித்த புத்தம் தற்போது செயலற்றிருப்பதும் புகை மூட்டத்தைக் கண்டும் காணாமலும் இருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நெகிழி மரம்

கவிஞர் இயற்கை மரங்களையும் செயற்கை மரங்களையும் குறித்துப் பல கவிதைகளில் தனது கவலையை உணர்த்தியிருக்கிறார். பறவைகள் வந்து தங்காத, தண்ணீர் ஊற்றிப் பராமரிக்கத் தேவையில்லாத

நெகிழி மரங்களைப் பற்றி அவர் கவலை கொள்கிறார். நகரங்கள் இயற்கையில் இருந்து தன்னை முற்றிலுமாக விலக்கிக்கொண்டு முழுக்க முழுக்க செயற்கைத் தன்மை உடையனவாக மாறிவிடுமோ என்று கலங்குகிறார்.

இணையத்தில் இருந்து விடுதி வரை *என்ற கவிதையில் விடுதி வாயிலில் வைக்கப்பட்டுள்ள செயற்கை மரங்களை,*

முற்றத்தில் சில பனை மரங்களும்

பாக்கு மரங்களும்

நஞ்சைக் காட்டுப் பறவைகளைத்

துறந்து நிற்கின்றன.

என அவற்றின் தன்மையை விளக்குவதன் மூலமாக அவை கண்ணுக்கு மட்டுமே அழகாகக் காட்சியளிக்கும் காகித மலர்களைப் போன்றவை என்பதை உணர்த்துகிறார். மேலும் உணவு வளையம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய இயற்கை வாழ்வியல் முறைகளும் கோட்பாடுகளும் இங்குப் பொருளற்றுப் போகின்றன.

பாடலுக்கான குறிப்புகள் *என்ற கவிதையில் இயற்கை மரம் என்பது வளரும், சாயும், வீழும். மண்ணுக்கு உரமாகும். ஆனால் செயற்கை மரங்களுக்கு அழிவேயில்லை. நெகிழி மரங்கள் மண்ணில் மட்கிவிட முடியாது. அவை மண்ணின் வளத்தை சீர் கெடுக்கும். ஆனாலும் அந்த*

நெகிழித் தென்னை மரம்

நிரந்தரமாய் மண்டைப வாயிலில்

வைக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு குறைவு. தண்ணீர் தேவையில்லை, கவாத்து செய்ய வேண்டாம். அதற்கென

ஒரு தோட்டக்காரனைப் பணியமர்த்த வேண்டாம். இவ்வாறான பல கருத்துக்களைக் கவிஞர் வாசகருக்கு உணர்த்துகிறார்.

வளம் காட்டும் மரம்

வேறு என்ற கவிதையில் ஒருவன் மலையடிவாரத்தில் ஒரு மரத்தடியில் அமர்ந்து கூடை முடைகிறான். அவனது மனைவி காட்டுக்கோழி சமைக்கிறாள். மகன் கல் தேர் உருட்டி விளையாடுகிறான் என்ற சொற்சித்திரம் அந்த மலைப்பகுதியில் மனிதர்கள் இயற்கையோடு இசைந்து இன்ப வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதைக் குறிப்பிடுகிறது

மரத்தடியில் கூடை முடைகிறான்

தொல் பழங்காலத் தோன்றல்;

மூங்கிலரிசிச்சோறாக்கும் அவள் குடிலருகே

மலையொன்று அடர்மரங்களோடு

அருவியோசை

என்ற நிறைவு வரிகள் இயற்கையை நேசிக்க வேண்டும் என்ற பாடத்தைக் கற்றுத் தருகிறது. அந்த மலையில் உள்ள மரங்கள் அடர்ந்து காணப்படுவதால் அவற்றை அடர்மரங்கள் என்கிறார். இன்னொரு கவிதையிலும் கவிஞர் 'அடர்மழை' என்று குறிப்பிட்டுள்ளார். ' அடர் என்ற முன்னொட்டை வைத்து சொற்களை வினைத் தொகையாக்கிப் பயன்படுத்தும் நயம் குறிப்பிடத்தக்கது.

வறட்சி காட்டும் மரம்

கடும் வறட்சி ஏற்பட்ட போது நிலத்தடி நீரும் குறைந்ததால் மரங்கள் வாடத் தொடங்கின. அப்போது வறட்சியைத் தாங்கி நின்ற பனை மரங்களில் கூட இந்த வெப்பம் பிரதிபலித்தது. ***வறட்சியின் பாடல்*** *என்ற கவிதை*

நன்செய் புன்செய் காடுகளுக்கும்

எல்லை காட்டி மரமாய்

நெடும் பனைகள்

ஒற்றையாய் கூட்டமாய்

காய்ந்தும் காயாத

பனை மரங்கள்

துல்லியமாய் சித்திரை வெயிலின்

சாய் நிழல்கள்

நீளும் கத்திரி வெயில்

என்ற வரிகளுடன் நிறைவடைகிறது. இவ்வரிகளில் காய்ந்தும் காயாத பனை மரங்கள் என்ற வரிகள் , பனை மரங்கள் கூட சித்திரை மாதத்துக் கத்திரி வெயிலின் கொடுமை தாங்காமல் காயத் தொடங்கிவிட்டன என்பதைக் குறிக்கின்றன. பனை மரங்கள் காயும் நிலை வறட்சியின் எல்லையைச் சுட்டுகின்றது.

மரத்தின் வேர் மட்டும் நனைதல்

தஞ்சை நிலத்தில் ஆற்று நீர் பாய்ந்து வேளாண்மை செய்ததால் 'சோழ வள நாடு சோறுடைத்து' என ஔவையாரால் புகழப்பட்டது. ஆனால் இன்று வான்மழை பொய்த்துப் போவதாலும் ஆங்காங்கே அணைக்கட்டுகள் கட்டி தண்ணீரை அயல் மாநிலத்தவர்கள் தேக்கிவிடுவதாலும் தஞ்சாவூரில் வேளாண்மை சொட்டு நீர்ப் பாசன முறைக்கு மாறிவிட்டது.

தென்னை மரத்தடியில்

சிறு குழல் இறைக்க

வேர் நனைக்கும்

சொட்டு நீர்...

என்ற வரிகள் 'நடந்தாய் வாழி காவிரி' என்ற கவிதையின் தொடக்க வரிகள் ஆகும். காவிரியின் ஆடிப்பெருக்கும் இந்திர விழாவும் ஒரு காலத்திய நிகழ்வுகளாக மனதின் ஆழத்தில் உறைந்துவிட்டன. இன்றைய சூழலில் ஒரு சொட்டு தண்ணீரைக் கூட வீணாக்கக் கூடாது. இப்போது மண் குளிர, மரம் குளிர தண்ணீர் பாய்ச்ச இயலாது. சொட்டு நீரால் மரத்தின் வேரை நனைத்து வைக்கலாம்.

உயிரொலி

செடி, கொடி, மரங்கள் பற்றி கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகளில் அதிகளவில் இடம் பெற்று இருப்பதைப் போல பறவைகள் பற்றிய தகவல்களும் நிறைய உண்டு.. இவற்றில் பறவைகளின் தோற்றத்தை வருணிப்பதைக் காட்டிலும் அவற்றின் ஒலி, செயல்பாடு பற்றிய தகவல்கள் பல கவிதைகளில் இடம் பெற்றுள்ளன.

மாலைச் சூரியனில்

துளிர்த்த பறவையின்

உயிரொலி

*என்ற வரிகள் '**உயிர்ப்பு**' என்ற கவிதையில் இடம்பெற்றுள்ளன. கவிஞர் பறவையிடமிருந்து துளிர்த்த ஒலியை உயிரொலி என்கிறார். இந்த உயிரொலி மாலைப் பொழுதுக்கு உரியதாகும்.*

விளிப்பொலி

அடுத்து காலைப் பொழுதையும் பறவையின் குரலைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

பறவைகளின் கானம்

காட்டின் ஏகாந்தக் கூட்டொலியுடன்

விடியல் கேட்டு

என 'காட்டாளன்' கவிதையில் இடம்பெற்ற இவ்வரிகளில் அதிகாலையின் விளிப்பொலியாகப் பறவைகளின் கானம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பறவைகளின் செயல்பாடு

குயில், மயில், காகம் போன்றவற்றின் செயல்பாடுகள் பல கவிதைகளில் காணக் கிடைக்கின்றன. குயில் கூவுதல், மயிலின் நடனம் ஆகியவற்றோடு காகத்தின் தந்திரமான செயற்பாடும் கவிஞரின் கண்களில் இருந்து தப்பவில்லை.

குயில்களின் குரலோடு

காலையில் மயில்கள்

வேரடியில் தோண்டிச் சுவைக்கின்றன.

என்ற வரிகள் குயில்கள் இணை விழைச்சுக்காக மரத்தில் இருந்து கூவுகின்றன. ஆனால் மயில்கள் தனது அன்றாட உணவுக்காக மரத்தின் வேரடியைத் தோண்டி புழு பூச்சிகளைக் கொத்தித் தின்கின்றன.

*காகம் உடமையாளரின் கவனம் அப்பால் திரும்பிய நொடியில் அவரது பொருளைக் கொத்திக் கொண்டு போய்விடும் என்பதை உணர்த்தும் கவிதை '**பார்வை**'*

வெட்டும் கத்தியைத்

தனித்து வைத்து

அவர் திரும்பும் கணத்தில்

கறிக்கட்டையில்

இறைச்சித் துண்டுகளைப்

பொறுக்கிப் பறக்கின்றன

காகங்கள்

இக்கவிதை பற்றி இளஞ்சேரல் பின்வருமாறு விளக்கிப் பாராட்டுகிறார். "பார்வை கவிதையில் 1. மரத்தில் காகங்கள், 2. காகங்களின் உடல்மொழி – அதி தீவிரமான எச்சரிக்கையுடையது அதன் பார்வை, 3. வெட்டுக் கத்தியில் இருந்து அதன் கண்கள் அகலவில்லை, 4. கத்தி வைத்துவிட்டு எங்கோ திரும்புகிறார், 5. கண நேரம் - காகங்கள் அலகுகளால் கொத்தி எடுத்துப் பறக்கிறது. கவிதையாக தத்துவ விசாரமாக மெய்யியலாக புலன் சார்ந்த வேட்கையாகக் களவுப் போக்கின் அனுமதியாக யதார்த்த நிலையில் இவ்வகை கவிதை வடிவம் விரும்புகிறது. இந்நிலையில் சுகுமாரன், சுயம்புலிங்கம் கண்டடைந்த பாதிப்பும் ஆத்மாநாம் வலியுறுத்துகிற மனிதாபிமானமும் பச்சாதாபமும் சேர்ந்தே ஒலிக்கிறது".

நாய்

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் நிகழ்ச்சி விளக்கத்துடன் தொடங்கினாலும் அவை பெரும்பாலும் குறியீட்டுப் பொருண்மையுடன் செயல்படுவதைக் காணலாம். கவிஞரின் குறியீட்டு பயன்பாடு பற்றிக் குறிப்பிடும் இளஞ்சேரல் அவர்கள் 'காகம் போல நாய் கூட கவிஞர்களின் குறியீடு. இங்கு இறைச்சியையும் சேர்த்துக் கொள்கிறார் விரும்பி' என்று மற்ற கவிஞர்களிடம் இருந்து வேறுபட்டு நிற்கும் கவிஞர் முத்தமிழ் விரும்பியைக் காட்டுகிறார்.

*இளஞ்சேரல் அவர்களின் கருத்துக்குச் சான்றாக '**வேறு**' என்ற கவிதையில் காட்டப்பட்ட நாயை இங்குக் குறிப்பிடலாம் நகரத்தில் காவல் பணியற்று, கறிக் கோழியை மட்டுமே தின்று, எலும்புகளைக் கடித்துத்*

தின்ன வாய்ப்பில்லாததால் பல்லின் பலமிழந்து உதிர்ந்து போன பொக்கை வாய் நாய் ஒன்று கோழி இறைச்சி வாங்கிக் கொண்டு செல்பவனை விரட்டுகிறது.

பெருநகர மையத்திலிருக்கும்

மிகப் பெரிய வணிக வளாகத்தில்

உச்சித் தளத்திலிருந்து இறங்கும்

மனிதனின் கையிலிருந்தது

நெகிழி உறையில்

எலும்புகற்ற கறிக்கோழியின்

கறுஞ்சிவப்பு நிற இறைச்சித் துண்டுகள்

வாகனமேறியவனை

கரும்புகை மறைக்கும் வீதியில்

குரைத்துத் துரத்தும் பற்களற்ற

ஆளுயரக் கலப்பின நாய்

அடுத்து ***மீட்டல்*** *என்ற கவிதையில் கவிஞர் இன்னொரு நாயைக் காட்டுகிறார். மனிதாபிமானமற்ற முறையில் நெடுஞ்சாலை விபத்தை கண்டுகொள்ளாமல் வேகமாகப் பயணிக்கும் மனிதர்களைப் பற்றிய இக்கவிதையில்*

நெடுஞ்சாலை நடுவே விபத்து

சுன்னமிட்ட கோட்டோவியத்தினுள்

காய்ந்த குருதிக் கறையை

நக்கிச் சுவைக்கிறது

நாய்

நாய் தன் உணவுக்காகக் கிடைப்பதை உண்கிறது. அதற்கு இது விபத்தினால் உண்டான குருதி; இது வீட்டில் சமைக்க வாங்கிய இறைச்சியில் இருந்து வழிந்த குருதி; என்ற வேறுபாடு கிடையாது. அது கிடைத்ததை உண்ணும்.

மனிதர்கள் சிறிதும் இரக்கமின்றி விபத்து நடந்த இடத்தை வேடிக்கை பார்த்தபடி பயணிப்பது நாயை விடக் கேவலமானது என்பதை குறிப்பால் உணர்த்தும் கவிதை இது. சுண்ணக் கோட்டோவியத்தின் அருகே யாரும் இல்லை. காவல் துறையினர் தமது வாடிக்கையான கடமைகளை முடித்துவிட்டுச் சென்று விட்டனர். இப்போது அந்த இடத்தில் ஒரு நாய் மட்டுமே இருக்கிறது. வரையப்பட்ட கோட்டோவியம் அங்குக் கிடந்த உடலை உணர்த்துகிறது.

கானல் நீர்

*இவை தவிர கானல் நீர், சிறப்பம் போன்றவையும் கவிஞரின் தனிச் சொல் கிடங்கில் **[Idiolect]** இடம்பெற்றுள்ள கவிதைச் சொற்கள் ஆகும். '**உயிர்ப்பு**' என்ற கவிதையில் கானல் வரி என்ற சொல்*

பசுமையின் இசை கூடாத

பாடலில் கானல் வரிகளின்

ஓட்டம்

என்றும், 'ஆழித் துரும்பென' என்ற கவிதையில் இதுவரை கிடைக்காத காதலியின் இசைவைத் தேடும் பொருளில்

கானல் வரிகளாய்க்

கண்கள்

நாடும் குளிர் உனது நங்கூரம்

என்றும் இடம்பெற்றுள்ளது. மற்ற கவிதை நூல்களிலும் காதல் கவிதைகளிலும் கவிஞர் கானல் நீர் என்ற தொடரை அதிகமும் பயன்படுத்தியுள்ளார்.

சிற்பம்

சிற்பி ஒருவரால் மிகக் கவனத்துடன் செதுக்கப்படுவது சிற்பம் ஆகும். இது தேவையற்றவற்றை நீக்குவதால் கிடைக்கும் ஓர் கலைப் படைப்பு. ***அந்தி*** *என்ற கவிதையில் சிற்பம் செய்வதில் செலுத்தப்படும் அதீத கவனமே அது உடைவதற்குக் காரணமாகிவிட்டது. இங்கு அந்தி என்பது முடியும் வேளையைக் குறிக்கிறது. கவிஞர் எல்லாம் நடந்து முடியும் தருணத்தில் மொத்தமும் சிதைந்து உருக்குலைந்து விடுவதைச் சிற்பத்தைக் குறியீடாகக் கொண்டு உணர்த்துகிறார்.*

கனவுகளால் செய்த

சிற்பமது உடைந்துகொண்டேயிருக்க

விழிப்பாகிவிடுகிறது

என்று தொடங்கிய இக்கவிதை சில மணி நேரங்களாவது உணரப்படும் முதுமைக்குரிய இயலாமையின் நிதர்சனங்களை விலக்கிவிட்டு

இன்றாவது

சிற்பம் முழுமையடையக் கூடும்

என்ற விழிப்பே

தவறி விழக் காரணமாகிவிட்டது.

என்று நிறைவு பெறுகிறது.

அடுத்தொரு கவிதையில் குழந்தை சன்னலின் வழியாக வெளியே இருக்கும் மரக்கிளைகளின் வழியாக விழும் ஒளிக்கதிர்களை அளைந்து விளையாடுகிறது.

மரத்தை வெட்டும் போது

சிதைவுறுகின்றன

உயிர்ச் சிற்பங்கள்

எனக் கவிதை நிறைவுறும் போது குழந்தை தொட்டு விளையாடிய ஒளிவட்டங்கள் என்னும் சிற்பங்கள் சிதைந்துவிட்டன. அந்த ஒளிவட்டங்கள் குழந்தைக்கு உயிருள்ள பொம்மைகள் போல் மகிழ்ச்சி அளித்தன. ஆனால் இப்போது மரம் இல்லை; ஒளி வட்டங்களும் இல்லை, விளையாட்டும் இல்லை என்றாகிவிட்டது. ஒளிவட்டங்களின் அசைவே அதற்கு உயிரூட்டின. சாளரத்தின் வழியாக உள்ளே வந்த ஒளியை உயிருள்ள சிற்பங்களாக்கின. இப்போது இவை எதுவும் இல்லை. குழந்தையின் வேதனையை விளையாட்டுக்கு வழியற்ற அதன் தவிப்பை இக்கவிதை சித்திரிக்கிறது.

மரங்கள் வெட்டப்படும் போது உயிர் சிற்பங்கள் சிதைவுறுகின்றன என்ற மரங்களைத் தொடர்ந்து வெட்டுவதால் மரங்களால் மனிதனுக்கு கிடைத்து வந்த பிராண வாயு கிடைக்காமல் போகிறது. அதனால் மனித குலம் அழிவைச் சந்திக்கின்றது என்ற கருத்துக்கும் இடமளிக்கிறது.

‘உயிர்ச்சிற்பம்’ என்பது மரக்கிளைகளின் ஊடாக சூரிய ஒளியால் ஏற்பட்ட ஒளிச் சிற்பத்தையும் குறிக்கலாம். மனிதராகிய உயிர்ச் சிற்பத்தையும் குறிக்கலாம். இவ்வாறு பன்முகப் பொருண்மைக்கும் இடமளிப்பதால் இக்கவிதை பொருளாழம் மிக்க கவிதை ஆகிறது.

'காட்டாளன்' கவிதையில் காட்டப்படும் மலைவாழ் மனிதனின் வாழ்க்கை மலைப்பகுதியில் இயற்கையோடு இயைந்த இனிய வாழ்க்கை ஆகும். அவன் பாறையில் இருக்கும் குகைகளில் உறங்கி எழுந்தான். அங்கிருந்த வட்டப் பாறைகளில் பாறை ஓவியங்களைத் தீட்டி மகிழ்ந்தான். இன்றும் அவை அங்குக் கல் மேல் எழுத்தாகக் காட்சியளிக்கின்றன. அவற்றிற்கு அழிவில்லை. ஆனால் அங்கு வாழ்ந்த மலைவாழ் மக்களை நதிக்கரை நாகரிகத்தைச் சேர்ந்தவர்கள் அடித்து உதைத்து விரட்டி விட்டனர்.

பாறைக் குகைகளில் படுத்துறங்கிய

வட்டப் பாறைகளில்,

இன்றுமழியாத வாழ்க்கைச் சிற்பங்கள்

அவனது வாழ்க்கை, சிற்பம் போல அழகாகவும் செம்மையாகவும் இருந்தது. இப்போது இங்குச் சிற்பம் என்பது அவனது வாழ்வின் செம்மையையும் சேர்த்தே குறிக்கிறது. பாறை ஓவியங்களும் அவனது அழகான வாழ்க்கையைச் சித்திரிக்கும் கலைப்படைப்புகளே ஆகும்.

உருவகம்

திட்டிவாசல் பெண்ணொருத்தி கவிதைத் தொகுப்பில் படிமம், குறியீடு போலவே உருவகங்களும் கவிச்சுவையுடன் சிறந்த இலக்கிய உத்திகளாக இடம்பெற்றுள்ளன. இரயிலை ஒற்றை கொம்பன் யானையாக கவிஞர் உருவகப் படுத்தியிருப்பது இதுவரை யாரும் காணாத புதுமை ஆகும்.

ஒற்றையாய்த் தண்டவாள வெளியில்

ஊதிக்கொண்டே போகுது

கொம்பன் யானை

என்ற வரிகள் தனது கூட்டத்தை விட்டுப் பிரிந்து ஒற்றையாக நடந்து வரும் ஆண் யனையின் வேகத்தைக் காட்டுகின்றன.

மரமான், சூரிய மழை [101], வெண்ணிலாப் பழம் [30], மொழிவிதைகள் [61], மதுக்குரல் [29], நெருப்பு கொடிகள் [106], பெருநதியின் மொழி [96], கடலின் நாவு [79], குடிமை விதைகள் [64] போன்ற சொற்றொடர்களும் கவிச் சுவை மிகுந்தன. 'நாவு', 'மொழி', 'குரல்' போன்ற சொற்கள் கவிதைகளில் பல்வேறு பொருட்களத்தில் பயன்பட்டுள்ளன.

நிறைவு

இன்று பலர் உரைநடை போன்று புதுக்கவிதை எழுதி வரும் சூழலில் நற்றிணை, குறுந்தொகை போன்று சொற்செட்டும் பொருட்கட்டும் கண்ட கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதைகள் இளைய தலைமுறையினரை விரைந்து சென்று சேரும் சிறப்பினைப் பெற்றன. வாசகர் மனதில் கோபம், ஆத்திரம், வன்முறை போன்ற உணர்ச்சிகளை எழுப்பாமல் சிந்தித்துச் செயல்படுவதற்குத் தேவையான உணர்வுகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களைச் சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் ஆழமாகவும் அழுத்தமாகவும் தந்திருக்கும் இக்கவிதைகள் வரும் தலைமுறையினருக்கு கிடைத்த கருத்துப் பெட்டகம் ஆகும்.

சரியான சொற்களைப் சரியான இடத்தில் பயன்படுத்திய கவிஞர் முத்தமிழ் விரும்பி கருத்துப் புலப்பாட்டை மேன்மைப்படுத்த உவமை, உருவகம், படிமம், குறியீடு, வருணனை போன்றவற்றையும் சரியான முறையில் பயன்படுத்தியிருக்கிறார். இவற்றின் மூலமாகக் கவிதைகளுக்கு அழகூட்டி வாசகருக்கு இலக்கிய இன்பம் வழங்குகிறார். இக்கவிதைகளைத் திரும்பத் திரும்ப ஒரு வாசகர் வாசிக்கும் போது பொருட் சுவை பெருகுவதுடன் இவ் இலக்கிய இன்பமும் பன்மடங்காகிறது.

முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் பிற நூல்கள்

